விலை: 30
பக்கங்கள்: 28

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 33 கதிர் 299 புரட்டாதி 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை 21 செப்ரெம்பர் 2018 வள்ளுவர் ஆண்டு 2049

## தமிழர்கள் அதிகம் சித்தியடைந்ததால் பரீட்சையை இரத்துச் செய்ய முயற்சி!

### நாடாளுமன்றில் போட்டுடைத்தது ஜே.வி.பி.

கொழும்பு, செப்.21
அரச நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்திபெற்றவர்களில் அதிகளவானவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தால் அந்தப் பரீட்சையை இரத்துச் செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று மக்கள் விடுதலை முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்கவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனும் நாடாளுமன் » 24

## யானை தாக்கி ஒருவர் உயிரிழப்பு

வவுனியா, செப்.21
வவுனியாவில் காட்டு யானை தாக்கி ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
வவுனியா, புளியங்குளத்தில் வசிக்கும் ஆரோக்கியநாதன் ஞானசீலன் (வயது-50) என்பவரே உயிரிழந்துள்ளார். அவர் சேமமடு படிவம் 2 இல் தோட்டம் செய்கின்றார். அவர் நேற்றுக் காலை அந்தப் பகுதியில் தனது மாட்டைத் தேடிக் காட்டுக்குச் சென்றுள்ளார். நீண்ட நேரமாகியும் அவர் திரும்பாததால் உறவினர்கள் தேடியுள்ளனர்.
பிற்பகல் 3 மணியளவில் அவர் வயல் வெளியில் சடலமாகக் கண்டுபிடிக்கப்பட்டார். இது தொடர்பாக ஓமந்தைப் பொலிஸாருக்குத் தெரிவிக்கப்பட்டது. ஓமந்தைப் பொலிஸாரும், வனஜீவராசிகள் திணைக்கள அலுவலர்களும் விசாரணைகளை மேற்கொண்டனர்.
சேமமடுவில் காட்டுயானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளது. பாதுகாப்பு வேலி அமைத்துத் தாருங்கள் என்று பல தடவைகள் கோரியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்த » 24

## பொறுப்புக் கூறலில் இருந்து இலங்கை தப்பிக்க முடியாது

### ஐ.நாவின் நிலைப்பாட்டில் மாற்றமில்லை என்கிறார் பொதுச் செயலர்

நியூயோர்க், செப். 21
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் இறுதிக் கட்டத்தில் பொது மக்களுக்கு ஏற்பட்ட உயிரிழப்புகள் தொடர்பில் இலங்கை அரசு பொறுப்புக் கூற வேண்டியது அவசியமாகும். இந்த விடயத்தில் » 25

## ஆண் கைதிகளை பாலியல் ரீதியில் துன்புறுத்திய பெண் படையினர்

### ஜெனிவாவில் வெளிவந்து அதிர்ச்சி அறிக்கை

ஜெனிவா, செப்ரெம்பர் 21
விடுதலைப் புலிகள் அமைப்பின் போராளிகள் உள்ளிட்ட தமிழ்க் கைதிகளை, இலங்கையின் பெண் படை அதிகாரிகளும் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தினர் என்று ஜெனிவாவில் நேற்றுமுன்தினம் அதிர்ச்சித் தகவல் அம்பலப்படுத்தப்பட்டுள்ளது. » 25

## மாகாண சபைத் தேர்தல் தொடர்ந்தும் இழுபறியில்

கொழும்பு, செப். 21
மாகாண சபைத் தேர்தலை எந்த முறையில் நடத்துவது என்பது தொடர்பில் நேற்று நடந்த மீளாய்வுக் கூட்டத்திலும் இணக்கம் எட்டப்படவில்லை. உடனடியாக தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று சிறிலங்கா சுதந் » 25

## ஆவா குழுவை அடக்க இரு நாள்களே போதும்!

### மைத்திரியின் அனுமதிக்காகவே காத்திருக்கின்றதாம் இராணுவம்

யாழ்ப்பாணம், செப். 21
ஆவா குழுவை இரண்டு நாள்களுக்குள் அடக்குவோம். நாட்டின் சட்டம் ஒழுங்கு என்பவற்றை மதித்து அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன வின் அனுமதிக்காகவே பொறுமையாக இருக்கின்றோம்.
இவ்வாறு யாழ்ப் » 24



## 9 கிலோ கேரளக் கஞ்சா வவுனியாவில் சிக்கியது

### 3 சம்பவங்களில் நால்வர் கைது

வவுனியா, செப்.21
வவுனியாவில் மூன்று வெவ்வேறு இடங்களில் இருந்து 9 கிலோ 400 கிராம் கேரளக் கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. கஞ்சாவை உடமையில் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டில் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.
யாழ்ப்பாணத்தில் » 25

## அரசியல் கைதிகள் விடுவிப்பு: மைத்திரிபால சம்பந்தன் பேச்சு

யாழ்ப்பாணம், செப்.21
உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் விடுதலை மற்றும் அரசியல் தீர்வை உள்ளடக்கிய புதிய அரசமைப்பின் அவசியம் தொடர்பாக எதிர்க்கட்சித் » 24



## வீதியில் மறித்து திடீர் புகைப் பரிசோதனை!

யாழ்ப்பாணம், செப்.21
வீதியில் பயணித்த வாகனங்கள் மறிக்கப்பட்டு மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினரால் புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. வாகனத் தரப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. கொழும்பில் இருந்து வந்த மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தினர், பொலிஸாரின் உதவியுடன் » 24

## பன்னாட்டு வானூர்தித் தளமாக பலாலித் தளம் சீரமைக்கப்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித அறிவிப்பு

கொழும்பு, செப். 21
பலாலி வானூர்தி நிலையம் பன்னாட்டு வானூர்தி நிலையமாகவே அபிவிருத்தி செய்யப்படும். அபிவிருத்திப் பணிகளை இந்தியாவுடன் இணைந்து எந்த அடிப்படையில் மேற்கொள்வது என்பது இன்னமும் இறுதி செய்யப்படவில்லை.
இவ்வாறு அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான » 25

## யாழ்ப்பாணத்தில் இன்று அரசியல் கைதிகளுக்கு ஆதரவாகப் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 21
குறுகியகால மறுவாழ்வு வழங்கி விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைத்து உணவு ஒறுப்புப் போராட்டத்தில் குதித்துள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு ஆதரவாக, யாழ்ப்பாணத்தில் இன்று காலை 10 மணிக்கு » 24



DFCC கருசரு, சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காகவே
DFCC சிரேஷ்ட பிரஜைகள் கணக்கு
55 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு
• ஆரம்பக் கட்டணம் ரூபா.1000 மட்டுமே.
• கணக்கில் வருடம் முழுவதும் உள்ள தொகைக்கேற்ப பல வெகுமதிகள்.
• சேமிப்புக் கணக்கு மற்றும் நிலையான வைப்புகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி வீதம்.
• Virtual Wallet வசதி, இலவசமாக Online Banking வசதி.
• ஒரு வருட காலத்திற்கு இலவசமாய் SMS Alert வசதி.
• ஆரம்பக் கட்டணம் இல்லாமல் DFCC Credit Card ஐ பெற்றுக்கொள்ளலாம்.
மதிப்பு மிக்க சிரேஷ்ட பிரஜைகளாகிய உங்களுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட இச் சேவையைப் பெற்றுத்தர DFCC வங்கி எப்பொழுதும் அர்ப்பணிப்புடன் செயற்படும்.
*நிபந்தனைகளுக்கு உட்பட்டது
24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி
உங்கள் வளர்ச்சிக்கு

# சரணடைந்த புலி உறுப்பினரை ராணுவத்தினர் கொல்லவில்லை

## எஸ்.பி. திஸாநாயக்க "பல்டி"

யாழ்ப்பாணம், செப் 21

இராணுவத்திடம் சரணடைந்த விடுதலைப் புலிகள் அமைப்பினர் கொல்லப்பட்டனர் என்று நான் கூறவில்லை. ஊடகங்களே தவறாகச் செய்தி வெளியிட்டுள்ளன என்று பல்டி அடித்துள்ளார் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்க.

கடந்த வாரம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் கலந்து கொண்டிருந்த எஸ்.பி.திஸாநாயக்க "கருணா புலிகள் அமைப்பிலிருந்து விலகியதும், கிழக்கு மாகாணத்தின் தளபதியான ரமேஷ், பிரபாகரனால் சிறைவைக்கப்பட்டிருந்தார். இறுதியில் ரமேஷ் படையினரிடம் சரணடைந்த போது. அவர் கொலை செய்யப்பட்டார். ரமேஷ் சரணடைவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்பு, தான் சரணடையப் போவதாக எனக்கு தொலைபேசி ஊடாக அறிவித்திருந்தார்" என கூறியிருந்தார்.

இன்நிலையில் கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க, இறுதிப் போரின்போது சரணடைந்த தமிழீழ விடுதலை புலிகளின் கிழக்கு மாகாண தளபதி ரமேஷை இராணுவம் கொலை செய்யவில்லை. தமிழீழ விடுதலை புலிகளே அவரை சுட்டுக் கொன்றார்கள். பொதுமக்கள், வயதான பெண்கள் குழந்தைகள் என சரணடைந்த பலரையும் புலிகளே சுட்டுக் கொன்றனர் என்று கூறியுள்ளார். (ற8)

# பிரதேச செயலருடன் முரண்பட்ட கிராம அலுவலர் நேற்றுக் கைது

## முசலியில் சம்பவம்

மன்னார், செப். 21

மன்னார் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலருடன் முரண்பட்ட கிராம அலுவலர் முசலிப் பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.


முசலிப் பண்டாரவெளி கிராமத்தைச் சேர்ந்த கிராம அலுவலருக்கு எதிராக பூநொச்சிக்குளம் கிராமத்தில் வசிக்கும் மக்கள் வீட்டுத் திட்டம் சம்பந்தமாக பிரதேச செயலரிடம் முறைப்பாடு செய்திருந்தனர். மக்களிடமிருந்து கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைவாக கிராம அலுவலரிடம் பிரதேச செயலர், பிரதேச செயலகத்தில் வைத்து விசாரணை செய்ததாகவும், கிராம அலுவலர் பிரதேச செயலரைத் திட்டி அவரைத் தாக்க முற்பட்டதாகவும் பிரதேச செயலகப் பணியாளர்கள் தெரிவித்தனர். இது தொடர்பில் முசலிப் பொலிஸில் பிரதேச செயலர் முறைப்பாடு செய்துள்ளார்.

இதனையடுத்து பிரதேச செயலருடன் முரண்பட்ட கிராம அலுவலர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். அவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (5,213)

# யோகா வகுப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம் செப் 21

இந்து சமய கலாசார அலுவலகங்கள் திணைக்களத்தினால் இலவசமாக நடாத்தப்படுகின்ற யோகா - தியான கற்கை நெறியின் புதிய பிரிவு நாளை சனிக்கிழமை நல்லூர் கந்தன் ஆலய முன்றலில் அமைந்துள்ள ஆறுமுக நாவலர் மண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. வார இறுதி நாட்களில் மட்டும் நடைபேறும் இவ் வகுப்புக்கள் ஆணக் பெண்கள் இருபாலருக்கும் தனித்தனி கூகுப்புக்களாக நடாத்தப்படும். பெண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினணங்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணி வரையிலும் பெண்களுக்கான பிரிவு அதே தினங்களில் 7.30 -8.30 மணியவரையிலும் நடைபெறுவதுடன் சநோயாளரிற்கு சிறப்புக் கவனம் எடுத்தும் பயிற்றுவிக்கப்படும். சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை பூரணமாக முடிப்பதற்கு திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன. எனவே முற்றிலும் இலவசமாக நடைபெறும் கற்றை நெறியில் இருபாலரும் வேறுபாடின்றிக் கலந்துகொள்ள முடியும் எனவும் இணைந்து பயன்பெற விரும்பும் ஆர்வமுடையோர் நல்லூர் ஆறுமுக நுவலர் மண்டபத்தில் கற்கை நெறி ஆரம்பமாகும் தினத்தன்றோ அல்லது அதற்கு முன்பாக மேற்கொண்டு இணைந்துகொள்ள முடியும் . மேலதிக விபரங்களை மண்டபத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம் என இந்து சமய கலாசார அலுவலக திணைக்களத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. இங்கு கடந்த 15 வருடங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்ற யோகாசன தியான கற்கை நெறியில் பல்லாரிரக்கணக்கானோர் கலந்து கொண்டு பயன்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (08)



# இலங்கையிலிருந்து 100 ஆசிரியர்கள் தமிழகத்துக்கு பயிற்சிக்குச் செல்வர்

## கல்வி இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு

நுவரெலியா, செப்.21

இந்தியாவின் தமிழகத்தில் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்காக இலங்கையிலிருந்து 100 ஆசிரியர்கள் அனுப்பி வைக்கப்படவுள்ளனர் என்று கல்வி இராஜாங்க அமைச்சர் வே. இராதாகிருஸ்ணன் தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலிருந்து இலங்கை வருகை தந்த கல்வி, பள்ளித் துறைஅமைச்சர்கே.ஏ.செங்கோட்டையன் நேற்றுக் காலை கல்வி அமைச்சுக்கு வருகை தந்தார். அவர் இராஜாங்க அமைச்சருடன் கலந்துரையாடினார் கலந்துரையாடல் குறித்துக் கருத்துத் தெரிவிக்கும் போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்..

அவர் தெரிவித்ததாவது:

நீண்ட ஒரு இடைவேளைக்குப் பின்பு இந்தியாவின் தமிழகத்தில் இருந்து அமைச்சர் ஒருவர் இலங்கைக்கு வருகை தந்துள்ளார். அது மட்டுமல்லாமல் அவர் கண்டி, கொழும்பு, யாழ்ப்பாணம் என பல பகுதிகளுக்கும் பயணம் மேற்கொண்டிருந்தார்.

அநேகமாக இந்தியாவில் இருந்து அமைச்சர்களோ உயர் அதிகாரிகளோ இலங்கைக்கு வருகை தந்தால் அவர்கள் கொழும்பில் தங்கியிருந்து முக்கியஸ்தர்களைச் சந்தித்து விட்டு திரும்பிச் செய்றுவிடுவார்கள். ஆனால் அமைச்சர் செய்கோட்டையன் பல பகுதிகளுக்கும் சென்று இங்கிருக்கின்ற உணமையானநிலைமைகளைப் பார்வையிட்டுள்ளார்.

நேற்று நடைபெற்ற பேச்சுவார்த்தையில் நாங்கள் பல கல்வி தொடர்பான முக்கிய விடயங்களைக் கலந்துரையாடியுள்ளோம். அதில் இலங்கையில் இருந்து தமிழ் மொழி மூல 100 ஆசிரியர்களை தமிழகத்துக்க அனுப்பி வைத்து அவர்களுக்கான பயிற்களை வழங்குவது தொடர்பில் பேசினோம். இதனை முழுமையாக செயற்படுத்துவதற்கு அமைச்சர் செங்கோட்டையன் ஒப்புக் கொண்டுள்ளார். அதன்படி மிக விரைவில் 100ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டுஅனுப்பி வைக்கப் படவுள்ளனர் என்றார்.

சந்திப்பபில் கண்டி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், சாள்ஸ் நிர்மலன் சார்ள்ஸ், தமிழக கல்வி, பள்ளித் துறை செயலர் பிரதீப் யாதவ், இலங்கை கல்வி அமைச்சின் செயலாளர் சுனில்ஹெட்டியாராச்சி, இராஜாங்க கல்வி அமைச்சின் செயலாளர் திஸ்ஸ ஹேவாவிதான உட்பட அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (21)

# ஆலய உண்டியல் திருட்டு

வவுனியா, செப். 21

வவுனியா பூந்தோட்டம் சிறிநகர் பகுதியில் உள்ள துர்கை அம்மன் ஆலயத்தின் திருப்பணி உண்டியல் நேற்றிலிருந்து காணமல் போயுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலயக் குருக்கள் நேற்று மாலை பூசை முடிந்து ஆலயத்தை மூடிவிட்டுச் சென்றுள்ளார். இதன்போது ஆலய உண்டியல் இருந்துள்ளது. நேற்றுக் காலை ஆலயத்துக்குச் சென்ற போது உண்டியல் திருட்டுப் போயுள்ளமை கண்டறியப்பட்டது.

பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 5 மாத காலமாக உண்டியல் எண்ணப்படாமல் இருந்துள்ளதாக ஆலயத்தின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். ஆலயத்தின் பெருந்திருவிழாவும் அண்மையில் நடைபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (5,110)

# மைத்திரிபாலவுக்கு எதிராக நியூயோர்க்கில் போராட்டம்

நியூயோர்க், செப். 21

அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அடுத்த வாரம் ஐ.நாவுக்குப் பயணம் மேற்கொள்ளும் போது அவருக்கு எதிராக போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசு அறிவித்துள்ளது.

ஐ.நா. பொதுச் சபையில் எதிர்வரும் 25ஆம் திகதி உரையாற்றுவதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன, நியூயோர்க் செல்லவுள்ளார்.

அவரின் வரவின் போது ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடவுள்ளது என்று நாடு கடந்த தமிழீழ அரசு அறிவித்துள்ளது.

இறுதிப் போரின் போது பெருமளவு தமிழ் மக்கள் கொல்லப்படுவதற்கும் சிறிசேனவும் காரணம் என்று நாடு கடந்த தமிழீழ அரசு தெரிவித்துள்ளது. (ற5)

# வடக்கு மாகாண சபையின் தீர்மானம் வல்லை நகர சபையிலும் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், செப். 21

வடகிழக்கில் பொது வாக்கெடுப்பு நடத்துவது உள்ளிட்ட 5 தீர்மானங்கள் வடக்கு மாகாண சபையில் அண்மையில் நிறைவேற்றப் பட்டிருந்தது. அதே தீர்மானம் வல்வெட்டித்துறை நகர சபையின் நேற்றைய அமர்விலும் நிறைவேற்றப் பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை நகரசபையின் சிறப்பு அமர்வு நேற்று இடம்பெற்றது.

அமர்வின் ஆரம்பத்தில் தியாக தீபம் திலீபனுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. வடக்கு மாகாண சபையில் உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கத்தினால்நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வல்வெட்டித்துறை நகர சபையிலும் சமர்பிக்கப்பட்டது.

இலங்கையின் வடகிழக்கில் பொது வாக்கெடுப்பு நடத்தல், இலங்கையை பன்னாட்டுக் குற்றவியல் நீதி மன்றில் நிறுத்துதல் உள்ளிட்ட 5 விடயங்களை உள்ளடக்கிய இந்தத் தீர்மான வரைவு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நகர சபை உறுப்பினர் பொ.சிவஞான சுந்தரத்தினால் முன்வைக்கப்பட்டது. சபை அமர்வில் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதன் மூலப் பிரதி ஐ.நா. சபைக்கும், பிரதி அரச தலைவர், முதலமைச்சர் ஆகியோருக்கும் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது. (5.26)



# உணவு ஒறுப்பில் ஈடுபடும் அரசியல் கைதிகளுக்கு ஆதரவு கொடுங்கள்

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு

வவுனியா ,செப் .21
அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டு வருகின்ற அரசியல் கைதிகளுக்கு குறுகிய கால மறுவாழ்வு வழங்கி, விரைவில் விடுவிக்கவேண்டும் என்ற நியாயமான கோரிக்கைக்கு அரசு உடனடியாகப் பதிலளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி, குறித்த அரசியல் கைதிகளின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் விடுக்கப்பட்ட அழைப்புக்கு ஏற்ப, இன்று முற்பகல் 10 மணியளவில் யாழ்ப்பாணம் பிரதான பேருந்து நிலையத்திற்கு முன்பாகவும், நாளை வவுனியாவிலும் இடம்பெறவுள்ள கவனவீர்ப்புப் போராட்டத்திற்கு, எமது புதிய ஜனநாயக மாக்சிச லெனினிச கட்சி முழுமையான ஆதரவினை வழங்குவதுடன், அனைவரையும் இந்தக் கவனவீர்ப்பில் அணிதிரளுமாறும் கேட்டுக்கொள்கின்றது. எனக் கட்சியின் வட பிராந்தியச் செயலரும், வலி. கிழக்கு பிரதேச சபையின் உறுப்பினருமான கா. செல்வம் கதிர்காமநாதனால் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய இனப்பிரச்சினையின் ஒரு பகுதியாக, இன்றுவரை தீர்வு வழங்கப்படாது இழுத்தடிக்கப்பட்டு வருகின்ற இந்த அரசியல் கைதிகள் தொடர்பான விடயத்தை, இன்றைய அரசும் முறையான விசாரணைகள் முன்னெடுக்கப்படாது இருப்பவர்களை நிபந்தனை அற்ற வகையில் விடுதலை செய்வதன் மூலமும், தீர்ப்பு வழங்கப்பட்டவர்களைக் கடந்த கால உதாரணங்களை முன்மாதிரியாகக் கொண்டு பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுதலை செய்வதன் மூலமும் தீர்த்துவைக்க முடியும். ஆனாலும், அரசியல் தீர்வையும், அரசியல் கைதிகளின் விடுதலையையும் தேர்தல் வாக்குறுதிகளாக முன்வைத்துப் பதவிக்கு வந்த மைத்திரி - ரணில் அரசு பேரினவாதச் சிந்தனைக்குத் தீனிபோடும் நோக்கில் மூன்று வருடங்கள் கடந்தும் இன்றுவரை இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முனையாமையை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு மறுவாழ்வு வழங்கி விடுவியுங்கள்

## மன்னார் குடிமக்கள் குழுவின் தலைவர் கோரிக்கை

மன்னார் .செப் .21
அநுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகள் தொடர்ந்தும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருவதாகவும், அவர்களுக்கு மறுவாழ்வு வழங்கி விடுவிக்க வேண்டும். என மன்னார் குடிமக்கள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ்.ஞானப்பிரகாசம் அடிகளார் தெரிவித்துள்ளார்.




மன்னார் குடிமக்கள் குழுவில் நேற்றுக் காலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது :
மன்னார் குடிமக்கள் குழுவின் செயல் திட்ட நிகழ்வு காரணமாக நேற்று முந்தினம் அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளை சந்தித்தோம்.

தமது விடுதலையை முன் வைத்து அவர்கள் தொடர்ந்தும் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். நாங்கள் சென்ற போது அவர்கள் சிறைச்சாலை மருத்துவமனையில் இருந்து எங்களை வந்து சந்தித்தார்கள்.

அவர்களுடைய உடல் நலம் மிகவும் மோசமான நிலையில் இருப்பதை நாங்கள் அவதானித்தோம். சக்தியை இழந்து மிகவும் வேதனைக்கு உள்ளானவர்களாக காணப்பட்டனர்.

தமது விடுதலைக்கு முன் நின்று உழைக்குமாறும் எங்களிடத்தில் அவர்கள் கோரிக்கை விடுத்தனர். தாங்கள் சுமார் 9 வருடங்களுக்கு மேலாக சிறையில் உள்ளதாகவும், தற்போது பல்வேறு அரசியல் பிரமுகர்கள் தங்களை வந்து சந்தித்துள்ளதாகவும் தெரிவித்தனர். தாங்கள் எந்தவித விசாரணைகளும் இன்றி தொடர்ந்தும் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இது வரை காலமும் தமக்கு எந்தவித விமோசனமும் கிடைக்கவில்லை எனவும் அவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

சுகவீனம் அடைந்துள்ள போதும் அவர்களுக்குகைவிலங்கிடப்பட்டே மருத்துவ சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. அதனை அவர்கள் துயரத்துடன் எங்களிடத்தில் தெரிவித்துள்ளனர்.

தங்களை விடுதலை செய்யாது விட்டாலும், தங்களை மறு வாழ்வுக்காவது அனுப்பும் படி கோரிக்கை விடுத்துள்ளனர். 12 அரசியல் கைதிகள் அங்கே இருக்கின்றார்கள். அவர்களில் 3 பேர் மிகவும் சுகவீனமடைந்து உள்ளனர். அவர்களுக்கான நடவடிக்கைகள் எவையும் நீதிமன்றத்தின் ஊடாகவும் எடுக்கப்படவில்லை. சுமார் 102 நாற்களுக்கு அவர்களின் விசாரணைகளைத் தள்ளி வைத்துள்ளார்கள்.


அவர்களின் விடுதலைக்காக போராடுவதற்காகவோ அல்லது கேட்பதற்காகவோ யாரும் இல்லை என்ற ஆதங்கம் அவர்களிடத்தில் இருக்கின்றது.

இவர்களின் விடுதலைக்காக அனைவரும் இணைந்து குரல் கொடுக்க வேண்டும் என அனைவரிடமும் மன்னார் குடிமக்கள் குழுவின் சார்பாக வினயமாக கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பாக அரசியல் பிரமுகர்களை அணுகி அரசியல் கைதிகளின் விடுதலைக்காக இந்த நாட்டின் அரசதலைவரிடம் கோரிக்கை முன்வைக்க நாங்கள் தீர்மானித்துள்ளோம்.

இவர்கள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கி மறுவாழ்வு வழங்க வேண்டும் என அரசினையும் அதனைச் சார்ந்துள்ளோரிடமும் நாங்கள் காத்திரமாகக் கேட்டு நிற்கின்றோம். என அவர் மேலும் தெரிவித்தார்.

மிக நீண்ட காலமாக வெலிக்கடை, மகசின் சிறைகளிலும் விசாரணைகள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளும் தங்களது விடுதலையை வலியுறுத்தி உணவு ஒறுப்பு போராட்டத்தை மேற்கொண்டு வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.
(56-213)



# தனியார் காணியில் மிதிவெடி மீட்பு

யாழ்ப்பாணம் ,செப் .21
மாவிட்டபுரம் தொடருந்து நிலையத்துக்கு அருகில் உள்ள தனியார் காணியினை துப்பரவாக்கும் பணியை மேற்கொண்ட வேளை நேற்றுக் காலை மிதிவெடி ஒன்று காணப்பட்டுள்ளது . இதனை அவதானித்த உரிமையாளர் இது தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். காங்கேசந்துறை பொலிஸார் மேலதிக விசாரணையை மேற்கொண்டுவருகின்றனர். (26)

# கீரிமலையில் மோட்டார் குண்டு மீட்பு

யாழ்ப்பாணம் ,செப் .21
கீரிமலை காங்கேசன்துறைப் பகுதியில் தனியார் காணி உரிமையாளர் நேற்றைய தினம் தனது காணியை துப்பரவாக்கிய வேளை, மேட்டார்க் குண்டு ஒன்று இருப்பதை அவதானித்து, இது தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸாருக்கு அறிவித்துள்ளார். இது தொடர்பாக காங்கேசன்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்க்கொண்டுவருகின்றனர்.
(26)



# மீசாலைப் பகுதியில் கிழித்தெறியப்பட்ட அரசியல்க் கட்சியின் பெயர்ப்பலகை

கொடிகாமம், செப் . 21
அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் மீசாலையில் உள்ள சாவகச்சேரித் தொகுதி அலுவலகத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர்ப் பலகை நேற்றுமுன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கிழித்தெறியப்பட்டுள்ளது. .

கடந்த உள்ளூராட்சி தேர்தல் காலத்தில் கட்சியின் பெயர்ப் பலகை நடப்பட்டதெனவும் ,நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதோரால் கிழித்தெறியப்பட்டுள்ளது எனவும்,பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இந்த தாக்குதல் சம்பவத்துக்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உறுப்பினரும், வடக்கு மாகாண விவசாய அமைச்சருமான க.சிவநேசன் தனது வன்மையான கண்டனத்தை தெரிவித்துள்ளார். (9)



# தாதிய உத்தியோகத்தர் பதவிக்கு வடக்கிலிருந்து அதிக விண்ணப்பங்கள்

யாழ்ப்பாணம் ,செப் .21
இலங்கை முழுவதும் தாதிய உத்தியோகத்தர்களுக்கு நிலவும் வெற்றிடத்துக்கு வடக்கு மாகாணத்தில் இருந்து மிகவும் குறைந்த எண்ணிக்கையிலேயே விண்ணப்பித்ததாக தெரிவிக்கப்பட்ட 3 தினங்களில் அதிக விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் உள்ள மருத்துவமனைகளில் நிலவும் தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் மற்றும் உதவி மருத்துவ பணியாளர்களை நிரப்பும் நோக்கில் தற்போது விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இதற்காக நாடு முழுவதிலும் இருந்து சுமார் 9 ஆயிரம் விண்ணப்பங்கள் அனுப்பிவைக்கப்பட்ட நிலையிலும்,அதிகம் வேலையில்லாப் பிரச்சனையைக் கொண்ட வடக்கு மாகாணத்தில், பல்லாயிரக் கணக்கானோர் வேலை வாய்ப்பின்றி உள்ள நிலையில் வடக்கில் இருந்து 194 பேர் மட்டுமே கடந்த 15 ஆம் திகதிவரை விண்ணப்பித்திருந்தனர்.

இதில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டும் 25 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இளையோர் வேலை வாய்ப்பின்றி உள்ளதாக மாவட்டச் செயலரே கூறியுள்ளார் . சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற 9 ஆயிரம் விண்ணப்பங்களில் 194 விண்ணப்பங்கள் மட்டுமே வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளினது. எனவும் சுட்டிக்காட்டப்பட்டது . இதனையடுத்து குறித்த விபரம் பத்திரிகைகளிலும் வெளிவந்திருந்தது.

இந்த நிலையில் கடந்த சில நாட்களாக விண்ணப்பிக்கும் விகிதம் அதிகரிக்கப்பட்டு நேற்றுவரையில் 309 விண்ணப்பங்கள் வடக்கில் இருந்து விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகத் குறிப்பிடப்படுவதோடு நேரலை (ஒன்லைன்) விண்ணப்பம் என்பதனால் அதனை விண்ணப்பிக்கும் வகையில் ஏதாவது இடர்களை எதிர்கொள்பவர்களுக்கு மாவட்ட பிராந்திய சுகாதாரத் திணைக்களங்களே படிவங்களை நேரடியாக பூரணப்படுத்தி அனுப்பியும் உதவிபுரிகின்றன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (105)

## பரிசளிப்பு நிகழ்வு

கரணவாய்இசெப். 21
வல்வை சிவகுரு வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு குறித்த வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. வித்தியாலய அதிபர் சு.ஜெயானந்தகுமார் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக வடமராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் சி.நந்தகுமார் கலந்து கொள்ளவுள்ளார். (ம-108)

## சேவைநலன் பாராட்டு விழா

கரணவாய் செப் 21
வடமராட்சிவலய ஆங்கிலபாட உதவிக்கல்விப் பணிப்பாளராக இருந்து ஓய்வுபெறும் ஐ.செல்வராசாவின் சேவை நலன் பாராட்டு மற்றும் மணிவிழா என்பன இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளன.
திரு இருதயக் கல்லூரியில் பிற்பகல் 2.30 மணிக்கு இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.
ஓய்வுநிலை அதிபர் ஆ.சிவநாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் பாராட்டு உரைகளை வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன், மாகாண கல்விப்பணிப்பாளர் செ.உதயகுமார், வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் உட்பட பலரும் நிகழ்த்தவுள்ளனர். (ம-108)

### யாழ். போதனா மருத்துவமனையின்

# கழிவு நீரகற்றல் நிலையம் மிக விரைவில் கைமாற்றம்

## தவறு செய்த நிறுவனத்திடம் இருந்து உரிமம் பறிப்பு



**யாழ்ப்பாணம், செப். 21**

**யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவு நீர் அகற்றும் நிலையத்தின் உரிமத்தை வேறொரு நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதுவரை காலமும் உரிமத்தைக் கொண்டிருந்த நிறுவனத்திடம் இருந்து அது பறிக்கப்படுவதற்கான அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் பி.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.**

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி யாழ்ப்பாணம் மாநகர சபையின் அமர்வில் மாநகர சபை உறுப்பினர் ம.அருள்குமரனால் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவு நீர் அகற்றும் நிலையத்தின் செயற்பாடுகள் குறித்துஏகப்பட்டகுற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. மருத்துவமனையின் கழிவுகள் எவ்வித சுத்திகரிப்பு நடவடிக்கையும் இல்லாமல் நேரடியாகக் கடலில் கலக்கின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து ஓகஸ்ட் 22ஆம் திகதி குறித்த குற்றச்சாட்டை முன்வைத்த மாநகர சபை உறுப்பினர் ம.அருள்குமரன், மாநகர சபையின் மற்றொரு உறுப்பினர் ந.லோகதயாளன், மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் பி.சத்தியமூர்த்தி ஆகியோர் குறித்த நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டனர். அதன்போது அடுத்த கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் மருத்துவர் சத்தியமூர்த்தி மாநகரசபை உறுப்பினர்களுக்கு சில வாக்குறுதிகளை வழங்கியிருந்தார். அவை தற்போது எந்த மட்டத்தில் உள்ளன என்பதை அறிவதற்கு அருள்குமரன் அனுப்பிய கடிதத்துக்கு அனுப்பிய பதில் கடிதத்திலேயே "யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவு நீர் அகற்றும் நிலையத்தின் உரிமத்தை வேறொரு நிறுவனத்துக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் துரித கதியில் முன்னெடுக்கப் பட்டு வருகின்றன" என்று குறிப்பிட்டார் அவர்.

அந்தக் கடிதத்தில், "மேற்படி கழிவு அகற்றல் முறமையின் பிரகாரம் மீனவர்களுக்கோ அல்லது கரையோர மக்களுக்கு பாதிப்பு வரக்கூடாது எனில் வெளியேற்றப்படும் கழிவு 500 மீற்றர் தூரத்தில் விடப்பட வேண்டும். அதற்காக கொக்கிறீற்றிலான குழாய்கள் அனைத்தும் கொள்வனவு செய்யப்பட்டுவிட்டன. அவை உடனடியாகப் பொருத்தப்படும். அதேநேரம் தற்போது அந்தப் பணியை மேற்கொள்ளும் நிறுவனம் தொடர்பில் திருப்தியின்மை காரணமாக அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட பணிகளை மீளப் பெறுவதற்கான முன் அறிவித்தலும் வழங்கப்பட்டுவிட்டது.

தரமான நிறுவனத்தை தேடும் நோக்கில் கேள்வியும் கோரப்பட்டுள்ளதனால் அந்த விடயமும் முன்னெடுக்கப்படும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-105,8)

# வலி. வடக்குப் பிரதேச சபைப் பகுதியில் தமிழுக்கு முன்னுரிமை வழங்க தீர்மானம்

யாழ்ப்பாணம், செப். 21
வலிகாமம் வடக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதியில் அனைத்து விடயங்களிலும் தமிழுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்ற தீர்மானம் நேற்று நிறைவேற்றப்பட்டது.
வலிகாமம் வடக்குப் பிரதேச சபை அமர்வு தவிசாளர் என்.சுகிர்தன் தலைமையில் சபை மண்டபத்தில் நேற்று நடைபெற்றது. இதில் சபை உறுப்பினர் தா.நிகேதன் முன்வைத்த தீர்மான வரைவு சபையில் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.
தனது தீர்மான வரைபில் அவர், "எமது தாய்மொழியான தமிழ்மொழியை நாம் மழுங்க விடாமல் பாதுகாக்க வேண்டும். ஆரம்பத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் அலுவலகங்கள், விளம்பரப் பலகைகள், பெயர்ப் பலகைகள் ஆகியவற்றில் பிற மொழிகளே முன்னுரிமை படுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே மாற்றம் எமது பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக்கட்டும். சபையின் அறிவித்தல் பலகைகள், விளம்பரப் பலகைகள் போன்றவற்றில் தமிழுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும். அதே போன்று தமிழ் சார்ந்த ஆவணங்களைப் பாதுகாக்க ஆவணக் காப்பகம் அமைத்தல் வேண்டும். தமிழ் சார்ந்த கலை நிகழ்வுகள் வட்டார ரீதியாக மாதாந்தம் நடைபெற வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

> தமிழ் மொழியை நாம் மழுங்க விடாமல் பாதுக்காக்க வேண்டும். ஆரம்பத்தில் தமிழ் மொழிக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. ஆனால் அலுவலகங்கள், விளம்பரப் பலகைகள், பெயர்ப் பலகைகள் ஆகியவற்றில் பிற மொழிகளே முன்னுரிமைபடுத்தப்பட்டு வருகின்றன. ஆகவே மாற்றம் எமது பிரதேசத்தில் இருந்து ஆரம்பிக் கட்டும்.

**சபை அமர்வுகளின் அறிக்கையில் உறுப்பினர்களின் கருத்து இல்லை**

மாதாந்தம் நடைபெறும் சபை அமர்வுகளின் அறிக்கையில் உறுப்பினர்களால் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் குறிப்பிடப்படுவதில்லை என்ற குற்றச்சாட்டை சபை உறுப்பினர்கள் நேற்றைய அமர்வில் முன்வைத்தனர். தமிழ் தேசிய கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி ஆகியவற்றின் உறுப்பினர்கள் இந்தக் குற்றச் சாட்டை முன்வைத்தனர்.

**வாசிப்பு மாதம்**

ஒக்டோபர் மாதம் வாசிப்பு மாதமாகும். ஆகவே வாசிப்பை ஊக்கப்படுத்தும் நோக்கில் பல்வேறு வேலைத்திட்டங்கள் சபையால் மேற்கொள்ளப்படவுள்ளன என்று தவிசாளர் தெரிவித்தார்.
"வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன. சபையின் கீழ் இயங்கும் நூல் நிலையங்களுக்கு இலவசமாக அங்கத்துவப் பணமின்றி வாசிப்பாளர்கள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளார்கள். இதன் மூலம் நூலகத்தின் பயன்பாடு அதிகரிக்கும். சபையின் கீழ் நான்கு நூல் நிலையங்களுக்கும் முகப்புத் தங்கள் திறக்கப்பட்டுள்ளன. அவற்றில் நூலகம் சார்ந்த அனைத்து விடயங்களும் பதிவேற்றப்படும். நூலகத்துக்கு அங்கத்தவராக இணைந்து கொள்வதற்கு பாடசாலை மாணவர்கள் பாடசாலை அதிபரிடமும் ஏனையவர்கள் கிராம அலுவலர் மற்றும் வட்டார உறுப்பினர்களின் உறுதிப்படுத்தலைப் பெற்று நூல் நிலையத்தில் அங்கத்தவராக சேர்ந்து கொள்ள முடியும்" என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**சபைக்கான இணையத்தளம்**

சபையின் சேவைகள், மற்றும் வேலைத் திட்டங்களை தெரியப்படுத்துவதற்கு சபைக்கான இணையத்தளம் ஒன்று அவசியம். ஆகவே அதனை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று சபை உறுப்பினர் செ.விஜயராஜ் கோரிக்கையை முன்வைத்தார். இந்தக் கோரிக்கை தவிசாளராலும் ஏனையவர்களாலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**மயானங்கள்**

சபையின் எல்லைக்குகுட்பட்ட மயானங்கள் சீரமைக்கபடவேண்டும். அதற்கான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதைவிட முக்கியமான வேலைத் திட்டம் ஒன்று உள்ளது. மயானத்தின் எல்லைகள் அளவிடப்பட்டு அரசிதழில் பிரசுரிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. 17 மயானங்கள் இவ்வாறு எல்லை இடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

**தவிசாளர் வாகனத்தை முறைகேடாகப் பயன்படுத்தினாரா?**

தவிசாளர் தனக்கு வழங்கப்பட்ட வாகனத்தை தனது தனிப்பட்ட சொந்தத் தேவைகளுக்காகத் தவறாக ப் பயன்படுத்துகிறார் என்று சிறிலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்தனர். இதற்குப் பதில் வழங்கிய தவிசாளர், "எனக்கு வழங்கப்பட்ட வாகனத்தை நான் சரியாகத்தான் பயன்படுத்துகிறேன். இது தொடர்பில் ஆட்சேபனைகள் இருந்தால் தாராளமாக உரியவர்களிடம் நீங்கள் தெரிவிக்கலாம். அதனைநான்எதிர்கொள்வேன். வாகனத்துக்கு பயன்படுத்தும் எரிபொருள் விவரங்கள் தேவையாயின் அந்த விவரங்களையும்நான் உங்களுக்குத் தருவேன்" - என்றார். (ம-7)

# தகவல் அறியும் உரிமைச் சட்டம் பற்றி அறியாத தீவக வலய அதிகாரிகள்!


யாழ்ப்பாணம், செப். 21

**தகவல் அறியும் உரிமைச்சட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு சுமார் 20 மாதங்கள் ஆகின்றபோதிலும், அரச அதிகாரிகளுக்கே அந்தச் சட்டம் தொடர்பில் தெளிவற்ற நிலை உள்ளது என்று உதயனுக்கு அண்மைக்காலமாக முறைப்பாடுகள் வந்துகொண்டிருந்தன. அத்தகைய அதிகாரிகளுக்கு எடுத்துக்காட்டுகளாக அமைந்துள்ளனர் தீவக கல்வி வலயத்துக்கு உட்பட்ட சில அதிகாரிகள்.**

உதயன் பத்திரிகையின் கடந்த 15ஆம் திகதிய பதிப்பில் "படகு இல்லாத காரணத்தால் ஏமாறித் திரும்பிய பிஞ்சுகள்" என்ற தலைப்பில் செய்தியொன்று வெளியானது. யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருந்த பாலர் பாடசாலை மாணவர்களுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வுக்காக நெடுந்தீவில் இருந்து புறப்பட்ட பாலகர்களுக்கு கோட்டக் கல்விப் பணிமனையால் உரிய வசதிகள் செய்து கொடுக்கப்படவில்லை என்று குழந்தைகளின் பெற்றோர் குற்றஞ்சாட்டினர் என்று அமைந்தது அந்தச் செய்தி.

இதையடுத்து அன்றைய தினம் உதயனுக்கு வருகைதந்த நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் திருமதி சா.கிருஷ்ணதாஸ்,

"எனக்கும் இதற்கும் எவ்வித பொறுப்பும் இல்லை. மாணவர்களின் போக்குவரத்துத் தொடர்பான விடயங்களுக்கு அந்தந்தப் பாடசாலைகளின்அதிபர்களுக்கே பொறுப்புள்ளது" என்று பதில் தந்தார். அவரின் கருத்து மறுநாள் (16.09.2018) உதயன் பதிப்பில் வெளியானது. தற்போது அவர், அந்தச் செய்தியை வழங்கியவரின் விவரங்களை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரியுள்ளார்.


RTI 01

தகவல்களைப் பெறுவதற்கான விண்ணப்பம்

01. கோரிக்கையாளரின் பெயர் -
02. முகவரி -
03. தொலைபேசி இல. (ஏதேனும் இருப்பின்) - 0770718522
04. மின்னஞ்சல் முகவரி (ஏதேனும் இருப்பின்) -
05. கோரப்படும் தகவல்கள் பற்றிய விபரங்கள்
06. தகவல் கோரப்படும் விதம்
07. வேண்டுகோளை மேற்கொள்பவர் தகவலைப் பெற விரும்பும் மொழி -
08. கோரப்படும் தகவல் பிரதான ஒருவரின் வாழ்க்கை அல்லது சொந்தச் சுதந்திரம் தொடர்பானதா? (ஆம்/இல்லை)
ஆம் எனில், நம்பிக்கைக்கான காரணத்தைத் தருக -
09. வேறு ஏதேனும் விபரங்கள் -
10. சம்பந்தப்பட்ட ஆவணங்கள் இணைக்கப்பட்டுள்ளன (ஏதேனும் இருப்பின்)
11. கோரிக்கையாளர் ஓர் இலங்கைப் பிரஜையா? (ஆம்/இல்லை)

திகதி:- 19/9/18

தகவல் அறியும் உரிமைச் சட்டம் அரசதிணைக்களங்களுக்கு மட்டுமே பொருந்தும். தனியார் நிறுவனங்களை அந்தச் சட்டத்தின் கீழ் கட்டுப்படுத்தவோ அல்லது தகவல்களைக் கோரவோ முடியாது. தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் 3 (1) பிரிவில் அது தொடர்பான விவரங்கள் தெளிவுறுத்தப்பட்டுள்ளன.

கோட்டக் கல்வி அதிகாரியொருவர் தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான அடிப்படை அறிவு அற்றவராக இருந்ததை அடுத்து, இது தொடர்பில் அவருக்கு எந்த அறிவுறுத்தவும் வழங்கப்படவில்லையா? எனக் கேட்பதற்காக தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் இளங்கோவைத் தொடர்புகொண்ட போது அவர்:

"எனக்கும் தகவல் அறியும் சட்டம் தொடர்பிலான விவரங்கள் தெரியாது. தனியார் நிறுவனங்களிடம் இருந்து எந்த அடிப்படையில் தகவல்களைப் பெற்றுக் கொள்வது?" என்று தெரிவித்தார்.

2017ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கையில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் கொண்டு வரப்பட்டது. இன்று தொடக்கம் (நாளை) எதிர்வரும் 28ஆம் திகதி வரை தகவல் அறியும் உரி மைச் சட்டம் தொடர்பான வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(ம)

# அச்சுவேலி மத்தியின் 125ஆவது ஆண்டு விழா

யாழ்ப்பாணம், செப். 21

அச்சுவேலி மத்திய கல்லூரியின் 125ஆவது ஆண்டு நிறைவு விழா இன்றும் நாளையும் கொண்டாடப்படவுள்ளது. அச்சுவேலி இராஜ மாணிக்கம் கல்யாண மண்டபத்தில் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் இன்றையநாள் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. பரிசளிப்பும் கலைநிகழ்வுகளும் இன்று இடம்பெறவுள்ளன.

இன்றைய நாள் நிகழ்வுகளுக்கு முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் கலந்துகொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.மாணிக்கராசா, கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் நா.சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மதிப்புறு விருந்தினர்களாக பொறியியலாளரும் முன்னாள் மாணவருமான வைசநாதன், அச்சுவேலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆர். எம்.ரத்னாயக்க ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாளைய இரண்டாம் நிகழ்வுகளும் கல்லூரியின் அதிபர் சின்னத்தம்பி திரிகரன் தலைமையில் இடம்பெறவுள்ளன. முதன்மை விருந்தினராக கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சர் கலாநிதி க.சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்விப் பணிப்பாளர் செ.உதயக்குமார், யாழ்ப்பாணக் கல்விவலய வலயக் கல்விப் பணிப்பாளர் சு.சுந்தரசிவம், வலி கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தி.நிரோஷ் ஆகியோர்கலந்துகொள்ளவுள்ளனர். மதிப்புறு விருந்தினர்களாகக் கனடா கிளையின் பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் தே.ஜெயமோகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

125ஆவது ஆண்டுநிறைவை முன்னிட்டு மலரொன்றும் வெளியிடப்படவுள்ளது. கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பிரதி முதல்வர் ச.லலீசன் கலந்துகொண்டு மலரை வெளியிட்டு வைப்பார்.

முதலாம்நாள் நிகழ்வு கொழும்பு இந்து குருமார் அமைப்பின் தலைவர் கு. வை.க. வைத்தீஸ்வரக்குருக்கள். அச்சுவேலி சூசையப்பர் ஆலயப் பங்குத்தந்தை அருட் திரு கி.ஜோ.ஜெயக்குமார் ஆகியோரின் முன்னிலையிலும், இரண்டாம் நாள் நிகழ்வுகள் யாழ்ப்பாணம் சின்மிய மிஷனின் சுவாமி சிதாகாசானந்த, தென்னிந்தியத் திருச்சபையின் பேராயர் கலாநிதி டானியல் தியாகராஜா ஆகியோரின் முன்னிலையிலும் நடைபெறவுள்ளன.

(ம-11,422)

# குருசாமி வித்தியாலய வளாகத்தில் நட்டு வைக்கப்பட்டன மரக்கன்றுகள்







யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணம் கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மரக்கன்று கள் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் ஜெயரூபன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. கைதடி வடக்கு கயிற்றசிட்டி முருகன் ஆலய தலைமைக் குருக்களான முத்துக்குமார கணேச குருக்கள் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு மரக்கன்றை நட்டு வைத்தார். தொடர்ந்து கைதடி கமநலசேவை நிலையத்தின் முகாமைத்துவ உத்தியோகத்தர், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள், மாணவர்கள் எனப் பலரும் மரக்கன்றுகளை நட்டனர்.

(ம-159)



யாழ்ப்பாணம் நெல்லியடி மத்திய கல்லூரியின் ஆசிரியரும் கிழக்கு மீசாலையைச் சேர்ந்தவருமான ஒப்பிலாமணி விஜயரத்தினம் (சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்) கடந்த மாதம் 29ஆம் திகதியன்று யாழ்ப்பாண மாவட்ட மேல்நீதிமன்ற நீதிபதி அ.பிரேம் சங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாகப் பதவியேற்றார்.

(ம-159)

பண்டத்தரிப்பு வலியடைப்பைச்சேர்ந்த நித்தியானந்தன் கரன், யாழ்ப்பாணம் மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் சமாதான நீதவானாகப் பதவியேற்றார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவன். யாழ்ப்பாண மாவட்ட நீரியல் வளத் திணைக்களத்தின் தீவக பிரதேச கடற்றொழில் அலுவலராகத் தற்போது பணிபுரிகிறார்.



(ம-159,9)

# குடிதண்ணீருக்கு பணம் அறவீடு

## முசலிப் பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

மன்னார், செப். 21

முசலிப் பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் குடிதண்ணீருக்குப் பிரதேச சபை பணம் அறவிடுவதாக மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மன்னார் மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள கடும் வறட்சி காரணமாக அனைத்துப்பகுதி மக்களும் குடிதண்ணீர் இன்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

அந்த வகையில் முசலிப் பிரதேசத்துக்கு உட்பட்டபகுதிகளில் வழங்கப்படும் குடிதண்ணீருக்குப் பிரதேசசபை பணம் அறவிடுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மக்கள் மேலும் தெரிவித்ததாவது:

மன்னார் மாவட்டத்தில் மிகப் பின்தங்கிய வறண்ட பகுதியாகக் காணப்படுகிறது முசலிப் பிரதேசம். நிரந்தர தொழில் வருமானம் இல்லை. அரசினால் நல்ல வாழ்வாதாரத் திட்டங்கள் இல்லை. அரசினால் குடிதண்ணீராவது கிடைக்கிறது என்று நினைத்தால் அதற்கும் பணம் அறவிடுகிறார்கள் .

ஆயிரம் லீற்றர் தாங்கியில்தண்ணீர் நிரப்புவதற்கு 300 ரூபாவும், 500 லீற்றருக்கு 150 ரூபாவும், 200 லீற்றருக்கு எண்பது ரூபாவும் வாளி, குடங்களுக்கு 30 ரூபாவுக்கு மேலும் அறவிடுகிறார்கள்.

ஐந்துக்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட குடும்பத்துக்கு ஆயிரம் லீற்றர் எத்தனை நாள்களுக்கு போதுமானதாக இருக்கும். பெருந்தொகையான பணம் செலவழித்து குடிதண்ணீர் பெற்றுக்கொள்ளும் அளவுக்கு எம்மிடம் வருமானம் இல்லை. மக்கள் சேவைக்காக வந்த பிரதேச சபை குடிதண்ணீருக்காகப் பணம் அறவிடும் செயல் மக்களுக்கு செய்யும் துரோகம் என்கிறார்கள் .

முசலிப்பகுதியில் குடிதண்ணீருக்கு அதிக பணம் அறவிடுவதாக மக்கள் வைக்கும் குற்றச்சாட்டுப் பற்றி முசலிப் பிரதேச சபை தவிசாளரின் கவனத்துக்குக் கொண்டு வந்து கருத்து கேட்டபோது :

முசலிப் பிரதேச சபைக்கென்று வருமானங்கள் இல்லை, எரிபொருள் செலவு மற்றும் வாகனத் திருத்த வேலைகளுக்காக இவ்வாறு குடிதண்ணீருக்கு மக்களிடம் பணம் அறவிடுவதாகத் தவிசாளர் சுபிஹான் தெரிவித்தார்.

குடிதண்ணீருக்காகப் பணம் அறவிடப்படும் செயற்திட்டம் ஏனைய பிரதேச சபைகளில் உள்ளதா என்று சபைத் தலைவர்களிடம் கேட்டபோது :

பிரதேச சபையின் வருமானத்துக்காக மக்கள் மீது சுமையை ஏற்றக் கூடாது என்றும், பிரதேசங்களில்குடிதண்ணீர்ப் பிரச்சினை உள்ள இடங்களைத் தேசிய நீர்வழங்கல் சபையிடம் அடையாளப் படுத்தினால் அவர்கள் மக்களுக்கு இலவசமாகவே தண்ணீரைக் கொடுப்பார்கள் என்று அவர்கள் தெரிவிக்கின்றனர். (213)



## அரசியல்க் கருத்தரங்கு

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 40 ஆவது வருடநிறைவையொட்டிய அரசியல்க் கருத்தரங்கு ஒன்று கடந்த 16 ஆம் திகதி வவுனியா நகரசபையின் பழைய மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கு இடம்பெற்றது.

கட்சியின் வன்னிமாவட்ட செயலர் நி.பிரதீபன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் "மக்களின் சுமைகளும் அரசியல்நெருக்கடிகளும்" எனும் தலைப்பில் கருத்துக்கள் பகிரப்பட்டன. த.சிறிப்பிரகாசின் ஒழுங்கமைப்பில், கட்சியின்பொதுச்செயலர்சி.கா. செந்திவேல்,அரசியல்க்குழு உறுப்பினர், க.தணிகாசலம்,தேசிய அமைப்பாளர் வெ.மகேந்திரன்,வடபிராந்தியச் செயலர் கா.கதிர்காமநாதன், மலையகப் பிராந்தியச்செயலர் டேவிட்சுரேன், பெண்விடுதலைச்சிந்தனை அமைப்பைச் சேர்ந்த எஸ். மோகனதர்சினி, கொழும்புப் பகுதிக்கான இணைப்பாளர் மு.மயூரன், நுவரெலியப் பிரதேசசபை உறுப்பினர் பன்னீர்செல்வன் ஆகியோர் சிறப்புக்கருத்துரைகளை வழங்கினர்.

நிகழ்வில் கட்சியின் செயற்பாடுகளை உள்ளடக்கிய ஆவணகண்காட்சியும் நடைபெற்றிருந்தது.

நிகழ்வில் உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள், சமூக ஆர்வலர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். (110)

## மாந்தை மேற்குப் பிரதேசச் செயலர் பிரிவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டப் பணிகள்

மன்னார்,செப் .21

மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்ப்பட்ட பெரிய மடுக் கிராமத்துக்குச் சுமார் 2.5 கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டில் பெரும் அபிவிருத்தி வேலைத்திட்டத்தினை மாந்தை மேற்கு பிரதேச சபை உறுப்பினர் எம். நவ்பீல் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சர் றிஸாட் பதியுதீனின் நிதிஒதுக்கீட்டில்நடைமுறைப்படுத்தப்பட்டஇந்த வேலைத்திட்ட நிகழ்வில் முதன்மை விருந்தினராக முன்னாள்வட மாகாண சபை உறுப்பினரும்கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான றிசாட் பதியுதீனின் செயலர் றிப்கான் பதியுதீன் கலந்து கொண்டு குறித்த வேலைத்திட்டத்தினை ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது மாந்தை மேற்குப் பிரதேசச் செயலர் பிரிவுக்குட்ப்பட்ட பெரியமடு கிழக்கு ஜாமி உல் அக்சர் ஜும்மா பள்ளிவாசல் சுற்றுமதில்,பெரிய மடு மேற்கு பள்ளிவாசல் சுற்றுமதில், பெரியமடு மத்திய மகா வித்தியாலய நூலகம் , பெரிய மடு கிழக்கு ஆரம்ப பாடசாலை நுழைவாயில், பெரிய மடு காயா நகர் பள்ளிவாசல் சுற்றுமதில் அமைத்தல் போன்றவற்றுக்கான வேலைத்திட்டங்கள் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. (56)



## கல்விக்கான உதவி வழங்கல்

வவுனியா,செப் .21

வவுனியா இலங்கைத் திருச்சபை தமிழ் மகா வித்தியாலய பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கு அமைவாக வெளிச்சம் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் வவுனியா நகர சபையின் தலைவர் இ.கௌதமனின் சொந்த நிதிப்பங்களிப்புடன் பாடசாலையில் தரம் 11 மாணவர்களுக்கான மேலதிக கணிதபாட வகுப்பு இடம்பெற்று வருகின்றது.

அந்தவகையில் முதலாவது மாத காலப்பகுதிக்கான கொடுப்பனவாக 5 ஆயிரம் ரூபா கடந்த 18 ஆம் திகதி வெளிச்சம் அறக்கட்டளையின் தலைவர் பா.லம்போதரனினால் பாடசாலை அதிபரிடம் வழங்கி வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பாடசாலையின் அதிபர் ந.நவரத்தினம் மற்றும் வெளிச்சம் அறக்கட்டளையின் பொருளாளர் செ.மேனதாஸ் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் கலந்து கொண்டனர். (110)

## கழிவு நீர் அகற்றல் செயற்பாடுகளுக்காக ரூ .10 லட்சம் ஒதுக்கீடு

தவிசாளர் தி.பரஞ்சோதி தெரிவிப்பு

மன்னார்,செப். 21

நானாட்டான் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள பாலங்களில் கழிவு நீர் அகற்றும் குழாய்கள் பழுதடைந்துள்ளமை இனங்காணப்பட்டுள்ளன.

இதனால் மழை காலங்களில் கழிவு நீரானது வெளியேற்றப்படாமல் கிராமங்களுக்குள் தேங்கி நின்று மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

அதற்குத் தீர்வுகாணும் வகையில் கழிவு நீர் அகற்றல்ச் செயற்பாடுகளுக்காக நடைபெற்ற சபையின் ஏழாவது அமர்வில் பத்து லட்சம் ரூபா நிதியை ஒதுக்கித் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக நானாட்டான் பிரதேச சபைத் தலைவர் தி.பரஞ்சோதி தெரிவித்தார்.

கழிவுநீர்க் குழாய்கள் பழுதடைந்து திருத்தம் செய்ய இனங்காணப்பட்ட கிராமங்களாக வங்காலை, நறுவிலிக்குளம், மடுக்கரை, ஒலுமடு, செட்டியார் கட்டை யடம்பன் போன்ற பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தவிசாளர் மேலும் தெரிவித்தார். (213)

## கசிப்பும், கோடாவும் வைத்திருந்த 5 பேர் கைது

கிளிநொச்சி ,செப். 21

கசிப்பு மற்றும் கோடாவினை உடமையில்வைத்திருந்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சி மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் மூத்த பொலிஸ் அத்தியட்சகர் பாலித்த ஆர். சிறீவர்தனவின் கண்காணிப்பின் கீழ் கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு விதமான குற்றங்களை கட்டுப்படுத்துவதற்காக அமைக்கப்பட்ட இந்த விசேட குழுவினர் பொறுப்பதிகாரி சதுரங்க மற்றும் உப பொலிஸ் பரிசோதகர் சுபேசன் தலைமையில் இயங்கி வருகின்றனர்.

அந்த வகையில் நேற்று முன்தினம் மலையாளபுரம் குளப்பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாகக் கிடைக்பெற்ற தகவலுக்கு அமைய அந்த இடத்தினை சுற்றிவளைத்தபோது 5ஆயிரத்து 45 போத்தல் கோடாவுடனும் உற்பத்திஉபகரணங்களுடனும், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட நபர் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டனர்.

அதே போல் நேற்று முன்தினம் சம்புக்குளம் பகுதியில் கசிப்பினை உடமையில் வைத்திருந்த 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் ஒரு லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த 3 பேரும் ,ஆயிரத்து 500 மில்லி லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த ஒருவரும், 750 மில்லி லீற்றர் கசிப்பினை உடமையில் வைத்திருந்த ஒருவரும் என 5 பேர் கைது செய்யப்பட்டு, கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் மேலதிக விசாரணை மற்றும் நீதிமன்ற நடவடிக்கைக்காக ஒப்படைக்கபபட்டுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட போதைப்பொருள் தடுப்பு பிரிவின் பொறுப்பதிகாரி சதுரங்க தெரிவித்தார். (6)



## சட்டவிரோத மணல் அகழ்வுக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம்

வவுனியா ,செப் .21

வவுனியா சேமமடுப்பகுதியில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு இடம்பெறுகின்றது . உழவு இயந்திரத்தில் மணல் எடுத்துச் செல்லப்பட்டுள்ளமையை அறிந்து பொலிஸார் நடவடிக்கையில் இறங்கினர். இதன்போது மணலும் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டு, நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டபோது ,உழவு இயந்திரச்சாரதிக்கு 50 ஆயிரம் ரூபா நீதிமன்றத்தினால் தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் குறித்து மேலும் தெரியவருகையில், நேற்று முன்தினம் போகஸ்வாவே பகுதியிலிருந்து சேமமடு படிவம் இரண்டுக்கு சட்டவிரோதமான முறையில் எந்தவித ஆவணங்களும் இன்றி உழவு இயந்திரத்தில் எடுத்துச் செல்லப்பட்ட மணல் , ஓமந்தைப் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு, உழவு இயந்திரத்தின் சாரதி கைது செய்யப்பட்டு, நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். இதன்போது சட்டவிரோதமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட மணலுக்கு நீதிமன்றத்தினால் 50 ஆயிரம் ரூபா தண்டமாக அறவிடப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தொடருந்துக் கடவையில் சமிக்ஞை விளக்கில்லை

## கிளிநொச்சி பாரதிபுரம் மக்கள் விசனம்

கிளிநொச்சி,செப் .21

**கிளிநொச்சி, பாரதிபுரம் பகுதி வீதிக்கான தொடருந்துக் கடவையில் உள்ள சமிக்ஞை விளக்கில் 24 மணிநேரமும் சிவப்பு சமிக்ஞை எரிவது தொடர்பில் தொடருந்து நிலையத்தினர் கவனம்கொள்வதில்லை என அந்தப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

கிளிநொச்சி மாவட்டம் இரணைமடுச் சந்தியில் இருந்து பாரதிபுரம் கிராமத்துக்குச் செல்லும் வீதியில் உள்ள தொடருந்துக் கடவையில் உள்ள சமிக்ஞை விளக்கானது கடந்த ஒரு வாரகாலமாக 24 மணிநேரமும் சிவப்புச் சமிக்ஞையை மட்டுமே காண்பிக்கின்றது. இதன் காரணமாகச் சமிக்ஞையில் தவறா? அல்லது பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள், போக்கு வரத்துப் பொலிஸாரின் தவறா என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர். இதன் காரணமாக இந்தப் பகுதியில் தொடருந்து வரும் வேளையிலும் மக்கள் பயணிக்க முற்படும் சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு முன்னர், உடனடியாகக் குறித்த தவறைச் சீர் செய்ய வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கின்றனர். (105)



## காச நோயாளிகளுக்கு உணவுப்பொதி வழங்கல்

வவுனியா,செப் .21

வவுனியா மாவட்டச் சமூக சேவை அலுவலகத்திடம் வவுனியா பொது மருத்துவமனை மார்பக சிகிச்சை பிரிவு மருத்துவ நிபுணர்கள் கேட்டுக்கொண்டதற் கிணங்க மாதாந்தம் 4 காசநோயாளிகளுக்கு வீ 3 பவுன்டேசன் போசாக்கு உணவு வழங்கி உதவி வருகிறது.

அந்த வகையில் இந்த மாதத்துக்கான பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியிலான உணவுப் பொதிகள் கடந்த 18ஆம் திகதி மருத்துவ கலாநிதி மா.கலைச்செல்வனிடம் மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர் செ.சிறிநிவாசன் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் பொதுச்சுகாதார பரிசோதகர் சுப்ரமணியம் அபிவிருத்தி உத்தியோகத்தர் வசந்தரூபன் மற்றும் சுதர்சன் ஆகியோர் கலந்து கொண்டனர். (222)



## அபிவிருத்தி வேலைகள் கள ஆய்வு

வவுனியா ,செப் .21

வடக்கு மாகாணசபை முன்னாள் சுகாதார அமைச்சரும் வவுனியா மாவட்ட மாகாணசபை உறுப்பினருமாகிய மருத்துவர் ப.சத்தியலிங்கத்தின் கிராமிய அபிவிருத்தித் திட்டமுன்மொழிவுகளின் அடிப்படையில் வவுனியா சாஸ்திரிகூழாங்குளம் வட்டாரத்தில் நடைபெறும் அபிவிருத்தி வேலைகளை நேற்றுமுன்தினம் நேரில் சென்றுஆய்வு செய்தார்.

இதன்போது புதுக்குளம், மணியர்குளம் வீதி சீரமைப்பு , கட்டையர்குளம் முதன்மை வீதி சீரமைப்பு, ஈஸ்வரன் விளையாட்டுக்கழக வாயிற்கதவு, பாதுகாப்பு வேலிகட்டு மானப்பணி என்பவற்றையும் பார்வையிட்டார்..

இந்தத் திட்டங்களுக்கு மொத்தமாக ரூபா 4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (110)

## இறுவட்டு வெளியீடு

மன்னார் ,செப் .21

மன்னார் மாவட்டத்தின் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்யும் நோக்கில் மன்னார் மாவட்ட சுற்றுலாத் தளங்களை மையப்படுத்தி உருவாக்கப்பட்ட பாடல் மற்றும் மன்னார் மாவட்டத்தின் கைத்தொழில் உற்பத்திகளை மையப்படுத்திய ஆவணப்படம் என்பன மாவட்ட ரீதியில் வெளியீடு செய்யும் நிகழ்வு நேற்றுமுன்தினம் மாலை மன்னார் மாவட்டச்செயலர் அதிபர் சி.ஏ.மோகன்றாஸ் தலைமையில் மன்னார் மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

'எம்.ஐ.சி ரூரிசம்' எனும் எண்ணக் கருவில் மன்னார் மாவட்டதில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் விதத்தில் சுற்றுலா சார்ந்த இடங்களை அடையாளபடுத்தும் முகமாகவும் சுற்றுலாப் பயணிகளின் வரவை அதிகரிக்கும் முகமாகக் கனடா நாட்டின் நிதி உதவியுடன் குறிப்பிட்ட பாடல் மற்றும் ஆவணப்படம் தயாரிக்கபட்ட நிலையில் நேற்று முன்தினம் வைபவ ரீதியாக இரு விடயங்களையும் உள்ளடக்கிய இறுவட்டு வெளியீடு செய்து வைக்கப்பட்டது. (56)

## வடக்குக்கு வருகிறார் சரத்பொன்சேகா

இலங்கை அரசின் வனஜீவராசிகள் அமைச்சர் வவுனியா முல்லைத்தீவு மாவட்டங்களுக்கு பயணம் மேற்கொண்டு இடங்களையும் பார்வையிடவுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இதன்படி நாளை வவுனியாவுக்கும் நாளை மறுதினம் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் பயணம் மேற்கொள்ளும் அமைச்சர் சரத்பொன்சேகா. அங்கு அரச அதிகாரிகளை சந்தித்து கலந்துரையாடுவதுடன், யானைவேலி அமைப்பது தொடர்பிலும் இடங்களைச் சென்று பார்வையிடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ரி -3)

## புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் எமது பிரதேசங்களில் முதலிட முன்வாருங்கள்

கிளிநொச்சி ,செப் .21

புலம்பெயர்ந்து வாழும் தமிழ் முதலீட்டாளர்கள், எமது பிரதேசங்களில் முதலிடுவதற்கு முன்வர வேண்டும்எனப்பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபை தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன் புலம்பெயர் தமிழ் முதலீட்டாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நீண்டகாலமாகப் போரின் காயங்களால் அடியுண்ட எமது மக்களைப் பொருளாதார ரீதியாகவும்,ஏனைய வழிகளிலும் கட்டியெழுப்ப வேண்டிய பொறுப்பு புலம்பெயர்ந்த தமிழர்களையே சாரும். எமது போராட்டத்தை எவ்வாறு வழிப்படுத்தியிருந்தீர்களோ அவ்வாறு எமது தேசத்தைப் பொருளாதார ரீதியில் முன்னேற்ற முன்வாருங்கள்.

நாடுகளின் போராட்ட வரலாறுகளில் ஒரு வழியால் தோற்கடிக்கப்பட்ட இனம் மறுவழியால் முன்னேறி தமக்குரிய நாட்டை அமைத்திருக்கிறார்கள். அதே போல் நாமும் பொருளாதார ரீதியில் முன்நோக்கி நகர்வதற்குப் புலம்பெயர்ந்த தமிழ் முதலீட்டாளர்கள் முன்வரவேண்டும் என தெரிவித்துள்ளார். (6)



முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான் அலைகல்லுப்போட்ட குளம் தமிழ்க்கலவன் பாடசாலையில் கல்விகற்று வரும் தாய் தந்தையைப் பிரிந்து போரிலே ஒரு காலை இழந்த அம்மப்பாவுடன் வாழ்ந்து வரும் மாணவிக்கு, மாணவியின் பாடசாலைப் போக்குவரத்துச் சிரமங்களை நீக்குவதற்காக சிவன் அறக்கட்டளையால் நேற்று ஈருருளி ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளது. (222)

## போதைக்கு எதிராக மாணவர்களால்பேரணி

மாங்குளம்,செப் .21

செட்டிகுளம் பிரதேச செயலகத்துக்குட்பட்ட மாங்குளம் பகுதியில் உள்ள அல்காமியா வித்தியாலய மாணவர்கள் நேற்றுக் காலை 8.30 மணியளவில் 'போதைப்பொருள் பாவனையைத் தடுப்போம்' என்ற தொனிப்பொருளில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர். இதில் பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (110)



## பாதையைவிட்டு விலகி விபத்துக்குள்ளானமகிழுந்து




கிளிநொச்சி,செப் ,21

ஏ-32 மன்னார் - யாழ்ப்பாணம் வீதியில் மன்னாரில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த மகிழுந்து நேற்றுமுன்தினம் 11.20 மணியளவில் பல்லவராயன்கட்டு ஜெயபுரம் சந்தியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானது. இதனால் வீதியைவிட்டு மகிழுந்து வெளியே பாய்ந்துள்ளது.

சந்தியில் நடப்பட்ட விளம்பரப் பலகைகளையும் உடைத்தெறிந்து தற்காலிகமாக நிறுவப்பட்ட பேருந்துத் தரிப்பிடத்தையும் முற்றாகச் சிதைத்து விபத்துக்குள்ளாகியது.

இதனால் மகிழுந்தின் முன் பகுதி சேதப்பட்டுள்ளபோதும் , எந்தவிதமான உயிர்ச் சேதங்களும் ஏற்படவில்லை விபத்து தொடர்பாக மேலதிக விசாரணையை நாச்சிக்குடா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (204)

## மாளிகை கிராம அலுவலர் பிரிவில் சிறுவர் கழகம் ஆரம்பம்

வவுனியா,செப் .21

ஓமந்தை, மாளிகை நொச்சிகுளம் கிராமத்தில் பிரதேச செயலரின் ஆலோசனையின் படி கிராம அலுவலர் நா.சிறிதரனின் தலைமையில் புதிதாக சிறுவர் கழகம் ஒன்று நேற்றுமுன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் நொச்சிக்குளம் கனிஷ்ட உயர்தர பாடசாலை அதிபர், அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரகாஷ், நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சிறுவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (110)



# சம்பந்தன் தனது பதவியை ஒரு நாள் என்னிடம் தரட்டும் என்னவெல்லாம் செய்யலாம் என்பதை நான் காட்டுகிறேன்

## ஆனந்த சங்கரி சம்பந்தனுக்குச் சவால்

கிளிநொச்சி, செப். 21

உங்களால் முடியாவிட்டால் நீங்கள் வைத்துள்ள பதவியை (எதிர்க்கட்சித் தலைவர் பதவி) எனக்கு ஒருநாள் தந்து பாருங்கள். அந்தப் பதவியின் மூலமாக என்னென்ன செய்ய முடியும் என்பதைக் காண்பிக்கின்றேன்.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர்நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்தார்.

கிளிநொச்சியில் அமைந்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணியகத்தில் ஆனந்தசங்கரி நேற்று ஊடகவியலாளர் சந்திப்பை நடத்தினார்.

அதில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுக்கு ஆதரவளித்துக்கொண்டுள்ள சம்பந்தன் தலைமையிலானவர்கள் அரசியல் கைதிகள் விடயத்தில் அக்கறை செலுத்துவதாகத் தெரியவில்லை. இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் சரத்தில் உள்ளவாறு தமிழ் அரசியல் கைதிகள் பொது மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட வேண்டும். அதைத்தான் குறித்த ஒப்பந்தம் சுட்டிக்காட்டுகின்றது. அரசின் சலுகைகளை அனுபவித்துவரும் அவர்கள் கைதிகளின் விடுதலை தொடர்பில் வலியுறுத்தத் தவறியுள்ளனர். இதுவரை இவர்கள் என்ன செய்தார்கள்?

நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மீது வழக்குத் தொடர வேண்டும் என்ற கருத்துத் தொடர்பில் சபாநாயகருடன் கருத்துப் பகிர உள்ளேன். அவர் பொறுப்பு வாய்ந்த அமைச்சு பதவியில் இருந்தபோது. அவரும் ஓர் பெண் என்றபடியால் உணர்வுகளைக் கட்டுப்படுத்தாது அவர் அவ்வாறானதொரு கருத்தை முன்வைத்தார்.

தற்போது கூட்டாட்சி தொடர்பில் பேசுகின்றார்கள். ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தலில் கூட்டாட்சியை முன்வைத்துப் போட்டியிட்டார். அந்தக் காலத்தில் பல்வேறு தரப்பினரிடமும் பணத்தைப் பெற்றுக்கொண்டு வாக்களிக்க வேண்டாம் என்று கூறினார். அவ்வாறு இருந்தபோது 49 வீதமான மக்கள் கூட்டாட்சிக்கு ஆதரவாக வாக்களித்திருந்தனர் - என்றார். (4)

# நீர்ப்பாசனத் திட்டத்தில் தண்ணீர் இல்லை பிரதேச விவசாயிகள் கால்நடைகள் பாதிப்பு

## விரைவில் சீர்செய்யுமாறு முதலமைச்சருக்குக் கடிதம்

கிளிநொச்சி, செப். 21

கிளிநொச்சி ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் தண்ணீர் வழங்கப்படவில்லை. அதனால் விவசாயிகள் கடும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். கால்நடைகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அந்தக் குறைபாடுகளைச் சீர் செய்ய வேண்டும் என்பது உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து திருவையாறு மக்கள் முதலமைச்சருக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர்.

விவசாயத்தையேதமது ஜீவனோபாயமாகக் கொண்டுள்ள இந்த ஊரைச் சேர்ந்த 49 விவசாயிகள் கடிதத்தில் கையொப்பமிட்டு அதை அனுப்பியுள்ளனர்.

அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டதாவது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம் வேலைகள் முடிவுற்ற நிலையிலும், விவசாயத்துக்கு இன்றுவரை தண்ணீர் வழங்கப்படவில்லை.

தண்ணீர் வழங்கப்படாமையால் விவசாயிகள் சிரமப்படுகின்றனர். அவர்களின் கால்நடைகள் சிரமப்படுகின்றன.

பயிர்ச்செய்கை மேற்கொண்டவர்கள் தண்ணீர் பற்றாக்குறையால் பயிர்ச்செய்கையில் முழுமையான பலனைப் பெற முடியவில்லை. கால்நடைகளுக்குக் குடிதண்ணீர் இல்லாமற் போயுள்ளது.

வான்பயிர்கள் அழிவுறும் நிலை ஏற்பட்டுள்ளது. கோடையின் கொடூரத்தைத் தாங்க முடியாமல் திருவையாறு விவசாயிகள் வாடுகின்றார்கள். மறுபுறத்தில் 15 அடி மட்டத்துக்குத் தண்ணீர் இருக்கின்ற போதிலும், நீர்ப்பாசனத் திணைக்களம் திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கு தண்ணீர் வழங்காமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றது.

தண்ணீர்க்குழாய் பொருத்தப்பட்டுள்ள காணிகளில் 30 வீதமானவற்றுக்கு தண்ணீர் பாயாத நிலைமையே காணப்படுகின்றது. இந்தத் தில்லுமுல்லு' வெளிப்படாமல் இருப்பதற்காகவே திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்துக்கு அதிகாரிகள் நீர் வழங்காமல் இருக்கின்றார்களோ என்று எண்ணுவதிலும் தவறில்லை.

### திருவையாறு பாலம்

திருவையாறு தண்ணீர் விநியோக வாய்க்காலைத் தாண்டி விவசாயிகள் தமது காணிகளுக்குச் செல்ல முடியாதுள்ளது என்று நாங்கள் மாவட்டச் செயலருக்குக் கடிதம் எழுதியிருந்தோம். மாவட்டச் செயலரின் பணிப்புக்கு அமைய நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் நான்கு சலவைக் கற்களை ஒவ்வொரு காணிக்கும் வழங்கியுள்ளனர். அவற்றால் பயனில்லை.

பாலம் இல்லாததால், விளைந்த நெல்லை வீட்டுக்குக் கொண்டுவர முடியவில்லை. யாரேனும் உயிரிழந்தால், அவருடைய உடலை வெளியில் வீதிக்குக் கொண்டு செல்ல முடியவில்லை.

### கால்நடைகள் கருக்கலைவு

கால்நடைகளின் கருக்கலைவுக்குப் பாலம் இல்லாமையே காரணமாக உள்ளது. அவற்றைத் தாண்டிக் கால்நடைகள் தம்மை வருத்தியே பாலத்தைக் கடக்கின்றன.

அதேபோல், வில்சன் வீதிக்கும் திருவையாறு கிராமத்துக்கும் இடையேயான நிலத்தில் மண்ணகழ்வு மேற்கொள்ளப்பட்டது. என்ன தேவைக்காக இது நடைபெற்றது என்பது பற்றிய தகவல்கள் கசிந்தபோது, மில்க் வைற் நிறுவுநர் அமரர் கனகராசா நட்டிருந்த பனை மரங்களை பைக்கோ மூலமாகப் பிடுங்கி, மண் அகழ்ந்த கிடங்குகளுக்குள் போட்டு மூடினர்.

நீச்சல் தடாகத்துக்கு என்று சொல்லப்பட்டு மண் அகழப்பட்ட இடம் கால்நடைகளின் கோடைகால மேய்ச்சல் தரையாகியுள்ளது. மண் அகழப்பட்ட பெரும்குழி முதலைகளின் சரணாலயமாக மாறி, கால்நடைகளின் அழிவுக்கு வித்திட்டுள்ளது. இத்தனை துயரங்களை நாங்கள் சுமந்தும் மௌனம் காத்தது, தண்ணீர் வரும் என்ற ஒரே நம்பிக்கையில். இவ்வளவு துன்பங்களையும் நாம் அனுபவித்தும் வறட்சியின்போது நீரை வழங்காது விட்டால் யாருடைய நலனுக்காக இந்தத்திட்டம் மேற்கொள்ளப்பட்டது?

இவை எங்களின் நலனுக்காக மேற்கொள்ளப்பட்டதாயின், வான்பயிர்கள், கால்நடைகளைக் காப்பாற்ற உடனடியாகத் தண்ணீர் வழங்கப்பட வேண்டும். பயிர்ச்செய்கைக்குத் தண்ணீர் வழங்கப்படவேண்டும். சலவைக்கற்கள் அகற்றப்பட்டுத் தரமான பாலங்கள் கட்டித்தரப்படவேண்டும். இந்த வாய்க்கால்களின் ஊடாகத் தண்ணீர் பாய்ச்ச முடியாத 30 வீதமான காணிகளுக்குத் தண்ணீர் பாயக்கூடியவாறு, ஏற்பாடுகள் செய்து தரப்பட வேண்டும். மண் அகழப்பட்ட குழி நிரப்பப் பட்டு, மீண்டும் மேய்ச்சல் தரையாக மாற்றப்படவேண்டும். அழிக்கப்பட்ட பனை மரங்களுக்குப் பதிலாக அதே வயதுடைய பனை மரங்கள் நடப்படவேண்டும். குறித்த மண் அகழ்வுக்குக் காரணமானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மேற்படி ஏழு விடயங்களையும் தாங்கள் முதல் சுற்று ஆட்சியில் இருக்கும்போதே எமக்குக் கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

இந்தக் கடிதத்தின் பிரதி கிளிநொச்சி மாவட்டச் செயலர், வடக்கு மாகாண விவசாய அமைச்சர், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், விவசாய பிரதி அமைச்சர் இ.அங்கயன், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அனுர குமார திசாநாயக்க ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களப் பொறியியலாளரிடம் கேட்டபோது, ஏற்றுநீர்ப்பாசன சீரமைப்பு ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியில் இடம்பெறுகிறது.

அந்த வேலைகள் நிறைவுறுத்தப்பட்டு எம்மிடம் ஒப்படைக்கப்படவில்லை என்று தெரிவித்தார். சீரமைப்பில் உள்ள பொறியியலாளரின் பதிலைப் பெறமுடியவில்லை. (4,110,6)



# பிக்குவின் பன்னாட்டுப் பாடசாலையை வட்டு.வில் செங்கோட்டையன் திறந்தார்

யாழ்ப்பாணம், செப். 20

பௌத்த பிக்கு ஒருவரின் பன்னாட்டு ஆரம்பப் பாடசாலையை தமிழக கல்வி அமைச்சர் செங்கோட்டையன் நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டையில் திறந்து வைத்துள்ளார்.

இலங்கை யோசிடா அறக்கட்டளைத் தலைவர் பனகல உபதிஸ்ஸ நாயக்க தேரரின் பார்க்ஜீன் ஹோ பன்னாட்டுப் பாடசாலையே திறந்து வைக்கப்பட்டது. அந்தப் பாடசாலையின் முதல் மாணவனுக்கான அனுமதியை இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன் வழங்கினார்.

இந்த நிகழ்வில் பிரதி விவசாய அமைச்சர் அங்கஜன் இராமநாதன், முப்படை அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். (4,8)

# நியமன ஆசனங்களை உறுப்பினர்கள் சுழற்சி முறையில்தான் பகிர வேண்டும்

## கூட்டணி தனது உறுப்பினர்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், செப். 21

உள்ளூராட்சி சபைகளில் நியமன ஆசனங்களுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர்கள், சுழற்சி முறையில் ஆசனங்களைப் பகிர்ந்து கொள்ளவேண்டும். அதற்கு உடன் படாதவர்கள் மீது கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்துக்கு அமைவாக அவர்களைக் கட்சியின் உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கி விட்டுப் புதிய உறுப்பினர்கள் உள்ளூராட்சி சபைகளுக்கு நியமனம் செய்யப்படுவர் என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழர் விடுதலைக் கூட்டணி தெரிவித்துள்ளது. தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ்ப்பாண மாவட்டக் கிளையின் புதிய நிர்வாகிகள் தெரிவு யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில், நேற்று நடைபெற்றது. அது தொடர்பில் கட்சி அனுப்பிய செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் கட்சியின் பொதுச் செயலாளர் வீ.ஆனந்தசங்கரி உரையாற்றுகையில் தெரிவித்ததாவது: தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏகப் பிரதிநிதிகள் என்று கூறிக்கொண்டு மக்களின் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல் உல்லாசமாக இருக்கின்றார்கள். மக்கள் தங்களின் பிரச்சினை களுக்காக வீதியில் இறங்கிப் போராட வேண்டுமென்றால் மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக்கொள்ளும் இவர்கள் எதற்கு? மக்கள்தான் வாக்குப் பிச்சைபோட்டு நாடாளுமன்ற உறுப்பனர்களின் உல்லாசவாழ்வுக்காக வழிசமைத்துக் கொடுத்துள்ளார்கள். மக்கள் தான் எஜமானர்கள். ஆனால் அந்த உணர்வு சிறிதுமின்றி இவர்கள். மக்களின் போராட்டத்தை வெறுமனே வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். வாக்களிப்பதும் மக்கள், தங்கள் பிரச்சினைக ளுக்காகப் போராடுவதும் மக்கள் என்றால் இவர்கள் எதற்காக? முள்ளிவாய்க்கால் பகுதியில் எமது மக்களின் படுகொலைகளையே வேடிக்கை பார்த்தவர்களுக்கு இது ஒன்றும் பெரிதல்லதான். இந்த நிலைமையைத் தொடர்ந்தும் நீடிக்கவிடாமல் நாம் அனைவரும் நான் பெரிது நீபெரிது என்று பாராமல் நாடும் மக்களும் பெரிது என்று நினைத்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட்டு மக்களுக்காகப் போராடவேண்டும் என்ற எண்ணம் உள்ள மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யவேண்டும் - என்றார்.

கட்சியின் யாழ்ப்பாண மாவட்டத்தின் புதிய நிர்வாகிகள் தெரிவில், தலைவ்ராக கா. குலசேகரம், செயலாளராக த.இராசலிங்கம், பொருளாளராக ஆர்.குணேஸ்வரன், உப தலைவராக பொ. குகதாஸ், உப செயலாளராக ந. கர்சன் ஆகியோர் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர். மாவட்டத்தின் அனைத்துப் பிரதேசங்களையும் உள்ளடக்கியவாறு அமைப்பாளர்களும் நிர்வாகிகளும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில், கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி, நிர்வாகச் செயலாளர் இரா. சங்கையா மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர். (4)

# கிராமிய வங்கிகள் மூலமாக கடன்பெற உறுப்பினராகுங்கள்

## ஆணையாளர் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், செப். 21

நுண்நிதிக் கடன் திட்டத்தால் பலர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், கூட்டுறவின் அரவணைப்பு கடன் திட்டத்தின்கீழ் கிராமிய வங்கிகள் ஊடாகக் கடன் வழங்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கடனுக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடியாகக் கூட்டுறவுச்சங்கத்தில் ஓர் உறுப்பினராக இணைந்து கொள்ளுங்கள் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

இது குறித்து வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் பொ.வாகீசன் தெரிவித்ததாவது,

யாழ்ப்பாண மாவட்டத்தில் 23 பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் இயங்கும் 32 வரையிலான கூட்டுறவுக் கிராமிய வங்கிகள் ஊடாக இந்தக் கடன் வழங்கும் திட்டங்கள் உடனடியாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன. இந்தக் கடன் வழங்கும் திட்டத்துக்கென அரசு ஒவ்வொரு கூட்டுறவுக் கிராமிய வங்கிகளுக்கும் முதற்கட்டமாக ஒரு மில்லியன் ரூபா வீதம் மாதம் 32 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

அதனைவிட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் ஊடாகப் பயணங்களுக்குக் கடன் திட்டத்தை நடைமுறைப்படுத்தவென மாவட்டச் சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களுக்கு என்று எட்டு மில்லியன் ரூபா நிதியும் வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியைக்கொண்டு நுண்நிதிக் கடன் திட்டத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குறைந்த வட்டியிலான கடன் திட்டத்தை உடனடியாக ஆரம்பித்து வைக்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

கடன் திட்டத்துக்கு விண்ணப்பித்தவர்கள் உடனடியாகக் கூட்டுறவுச்சங்கத்தில் ஓர் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள வேண்டும்.

விண்ணப்பிப்பவர்களின்விண்ணப்பங்கள் சங்கங்களால் பரிசீலிக்கப்பட்டு அவர்களுக்கு முதற்கட்டமாக இருபது ஆயிரம் ரூபா நிதி கடனாக வழங்கப்படும்.

இதில் 75 வீதமான பெண்களுக்கும் 25 வீதமான இளையோருக்கும் கடன் திட்டத்தில் முன்னுரிமை வழங்கப்படும்.

இந்தக் கடன் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி நுண்நிதிக் கடன் திட்டத்தில் பாதிக்கப்பட்டவர்களை அந்தக் கடனிலிருந்து மீட்டுக்கொள்ளவும் கிராமிய வங்கி கடன் திட்டங்களை வலுப்படுத்தவும் அரசு உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக இந்தக்கடன் வழங்கும் திட்டத்தை மத்திய வங்கி மற்றும் வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் மேற்பார்வை செய்யும். கடன் வழங்கும் திட்டத்தை சம்பந்தப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் வெற்றிகரமாக மேற்கொள்ளும் பட்சத்தில் இரண்டாம் கட்ட கடன் வழங்கும் நடவடிக்கைகளும் விரைவாக ஆரம்பிக்கப்படும்.

கிரராமிய வங்கிகள், சிக்கன கடன் வழங்கும் சங்கங்கள் போன்றவற்றின் செயற்பாடுகளும் இந்தக் கடன் வழங்கும் திட்டத்தினால் அதிகரிக்கப்படும்.

இந்த அமைப்புக்கள் ஊடாக எதிர்காலத்தில் குறைந்த வட்டியிலான கடன் திட்டங்கள் ஆரம்பித்து வைக்கப்படுவதால் மக்கள் மத்தியில் அதற்கான விழிப்புணர்வு செயற்பாடுகளும் அதிகரிக்கப்படும்.

ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கங்களும் இந்தக் கடன் வழங்கும் செயற்பாடுகள் குறித்து மக்கள் மத்தியில் அதற்கான விழிப்புணர்வை வழங்க முன்வரவேண்டும். சங்கக் கிளை நிலையங்கள் மற்றும் ஏனைய விற்பனை நிலையங்கள் ஊடாக இந்த நுண்நிதிக் கடனால் பாதிக்கப்பட்டவர்களுக்கான குறைந்த வட்டியிலான கடன் வழங்கும் திட்டம் குறித்த விழிப்புணர்வு மற்றும் காட்சிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டும். இது தொடர்பான பதாதைகள், துண்டுப்பிரசுரங்கள் அடுத்தவாரம் மக்களுக்கு வழங்கப்படும்.

அதேசமையம் கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற மாவட்டங்களிலும் இந்தக் கடன் வழங்கும் நடவடிக்கைகள் கூட்டுறவு கிராமிய வங்கிகள் ஊடாக ஆரம்பித்து வைக்கப்படும் -என்றார். (4,17)

# கரையோரக் கடல் வளங்களைப் பேணலும் தூய்மைப்படுத்தலும் நாடுமுழுதும் ஆரம்பம்

## தேசிய வாரமாக ஒருவாரம் இடம்பெறும்

மன்னார், செப். 21

கரையோரக் கடல் வளங்களைப் பேணும் வாரமும், கரையோரத்தைத் தூய்மைப்படுத்தும் தேசிய நிகழ்ச்சித் திட்டமும் மன்னாரில் கடந்த செவ்வாய்க்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசதலைவரின் சிந்தனைக்கு அமைவாக இது அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகிறது.

கடற்கரையைப் பாதுகாப்பதற்காக "பன்னாட்டுக் கடலோர மற்றும் கடல் சார் வளங்களைப் பாதுகாக்கும் வாரமாக "செப்ரெம்பர் 15 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடைமுறைப் படுத்துவதற்கு அமைச்சரவை இணங்கியுள்ளது. இதற்கு அமைவாக நாடு முழவதும் இந்த வாரத்தில் கடலோரங்களை பாதுகாக்கும் வேலைத் திட்டங்கள் அரச தலைவரின் ஆலோசனைக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளன.

மன்னார் கீரி கடற்கரை பகுதியில் காலை 7.30 அளவில் மன்னார் மாவட்டச் செயலர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் இது ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், முப்படையினர், பொலிஸார், பொது மக்கள், மன்னார் நகர சபையின் செயலாளர், கிராம அலுவலர்கள் உட்பட பலர் இணைந்து கடற்கரைப் பகுதியில் தூய்மைப்படுத்தும்நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இதன்போது கீரி கடற்கரையோரப் பகுதிகளில் காணப்பட்ட சகல விதமான கழிவுப் பொருள்களும் அகற்றப்பட்டன. மன்னார் நகர சபையின் கழிவு அகற்றும் வாகனங்களில் அவற்றைச் சேகரித்தனர்.

கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையிலான ஒரு வாரத்தைக் கரையோரப் பாதுகாப்பு வாரமாக அறிவித்துக் கடற்கரைகள் மற்றும் கடல் சார் சூழலைத் தூய்மைப்படுத்தும் சுமார் நூறு செயற்றிட்டங்கள் நாட்டைச் சூழவுள்ள சுமார் 14 கரையோர மாவட்டங்களில் இடம்பெறுகின்றன. கடல் சார் சூழல் அதிகார சபையால் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டது.



இந்த நிகழ்வை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய மன்னார் மாவட்டச் செயலர் மோகன்றாஸ், அரசதலைவரின் பணிப்புரைக்கு அமைவாக இந்தத் துப்புரவுப்பணி நடைபெற்றாலும் சூழல்களைப் பாதுகாக்க வேண்டியது நம் ஒவ்வொருவரின் கடமை. இப்படியான கடற்கரைப் பூங்காக்களுக்கு சிறுவர்கள், கர்ப்பிணிகள், தாய்மார்கள் வருகின்றார்கள். இந்த விடயங்களில் குப்பைகளைப் போட்டு மாசு படுத்துவதால் சிறுவர்கள், கர்ப்பிணிகள், தாய்மார் மட்டுமல்ல சுகதேகிகளும் பாதிப்படையக்கூடும். எனவே மக்கள் நடமாட்டம் அதிகம் காணப்படும் இப்படியான இடங்களில் குப்பைகளைப் போடுவதை நிறுத்தினாலே சுத்தப்படுத்தும் வேலை இருக்காது. எனவே நம் உடலைப்போலவே சூழலையும் சுத்தமாக வைத்திருப்பது அவசியம் என்று மாவட்ட செயலர் குறிப்பிட்டார்.

ஒவ்வொரு பிரதேசங்களிலும் இப்படியான கடற்கரைப் பகுதிகள் அமையப்பெற்றிருந்தால் அந்தக் கடற்கரைப்பகுதிகளைச் சுத்தப்படுத்திப் பாதுகாக்க மக்கள் முன்வர வேண்டும் என்றும் கூறினார்.

இந்த நிகழ்வைத் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினரும் கடந்த செவ்வாய்க் கிழமை ஆரம்பித்தனர்.

சரசாலை வடக்கில் உள்ள கண்டல் காட்டை அண்டிய நுணாவில், பருத்தித்துறை சாலையின் இரு பக்கமும் தூய்மைப்படுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

பிரதேச உதவித் திட்டமிடல் பணிப்பாளர் செ.சுபச்செல்வன் தலமையில் சரசாலை தெற்கு வடக்குப் பிரிவுகளின் கிராம அலுவலர், பொருளாதார அபிவிருத்தி அலுவலர்கள், சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் ஏராளமான பொதுமக்கள் உட்பட 400க்கும் மேற்பட்டோர் அங்கு தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர்.

நேற்றுமுன்தினம் குருநகர் கடற்கரை, நேற்று வியாழக்கிழமை வல்வெட்டித்துறை குச்சம் கடற்கரை, இன்று நெடுந்தீவு கடற்கரையிலும், தென்ம ராட்சியின் கோவிற்குடியிருப்பிலும் முன்னெடுக்கப் படவுள்ளது. பொதுமக்கள், பிரதேச செயலங்கள், பிரதேச சபைகள், பொது அமைப்புகள் போன்ற பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்புடன் இந்தக் கரையோர தூய்மையாக்கல் நிகழ்ச்சி திட்டம் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (4,7,9,56,213)

### ஊழியர் போன்று பாசாங்கு செய்து மோதிரங்களை எடுத்தார் கர்ப்பிணி

#### பேருந்தில் தப்பிய அவர் துரத்திப் பிடிக்கப்பட்டார்

யாழ்ப்பாணம், செப். 21

மருத்துவமனை ஊழியர் போன்று பாசாங்கு செய்து முதியவரிடம் இரண்டு தங்க மோதிரங்களை அபகரித்தார் என்ற குற்றச்சாட்டில் கர்ப்பிணி ஒருவர் மடக்கிப் பிடிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் தெல்லிப்பழை மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

தெல்லிப்பழை மருத்துவமனையில் மாதாந்த சிகிச்சைக்காக முதியவர் சென்றுள்ளார். அங்கு வெள்ளை நிற உடையணிந்து சுமார் 30 வயதுடைய பெண் முதியவரை அழைத்துச் சென்றுள்ளார். அதனை அவதானித்த பலரும் அந்தப் பெண் மருத்துவமனை ஊழியரே அழைத்துச் செல்கின்றார் என்று கருதியுள்ளனர்.

அந்தப் பெண் முதியவரிடமிருந்து இரு தங்க மோதிரங்களையும் அபகரித்துக்கொண்டு தப்பியோட முயன்றுள்ளார். முதியவர் குரல் எழுப்பியபோது கர்ப்பிணி வேகமாக அந்த இடத்திலிருந்து வெளியேறி வீதியில் பயணித்த பேருந்தில் ஏறித் தப்பியுள்ளார். முதியவர் அங்கு நின்றவர்களின் உதவியை நாடியுள்ளார்.

அங்கே நின்ற சில இளைஞர்கள் பேருந்தை விரட்டிப் பிடித்து குறித்த பெண்ணை மடக்கினர்.

இணுவிலைச் சேர்ந்த அந்தப் பெண்ணை மருத்துவமனைப் பொலிஸார் கைது செய்தனர். முதியவரின் இரு தங்க மோதிரங்களும் மீட்கப்பட்டன. விசாரணை நடத்துவதாகத் தெல்லிப்பழைப் பொலிஸார் தெரிவித்தனர். (4,105)

### போதைப் பொருள் பைக்கட் வைத்திருந்தனரென கைதானோருக்கு மறியல்

யாழ்ப்பாணம், செப். 21

யாழ்ப்பாணத்தில் கஞ்சா போதைப் பொருளை உடமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ள பூசகர்கள் இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

"கோப்பாய்ச் சந்திக்கு அருகில் கடந்த செவ்வாய்க் கிழமை வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்த போது இருவரையும் சோதனையிட்டோம். அவர்களது உடமையில் இருந்து சிறியளவிலான கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டன.

இரு பூசகர்களும் வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்தவர்கள். தென்மராட்சியிலிருந்து வட்டுக்கோட்டையில் உள்ள தமது வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்தபோது அவர்கள் சிக்கினர்" என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இருவரும் யாழ்ப்பாண நீதிவான் மன்றில் நீதிவான் சி. சதிஸ்தரன் முன்னிலையில் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே இருவரையும் எதிர்வரும் 2ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்று உத்தரவிட்டது. (4,37)

### அரைக்கும் இயந்திரத்தில் சிக்கிய 3 விரல்களில் கடுமையான காயம்

தென்மராட்சி, செப். 21

நீண்டநாள்களாகப் பயன்படுத்தாமல் காணப்பட்ட அரைக்கும் இயந்திரத்தை (மிக்ஸி) மின்னிணைப்பு வழங்கிய பின்னர் இயக்க முற்பட்ட வேளையில் அது திடீரென இயங்கியதால் பெண்ணின் கை விரல்கள் மூன்று பாதிக்கப்பட்டன.

இந்தச் சம்பவம் மீசாலை கிழக்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த 43 வயதுடையவரே பாதிக்கப்பட்டார். அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். அரைக்கும் இயந்திரத்தின் சுழல் இயந்திரம் வெட்டி இந்த நிலை ஏற்பட்டுள்ளது. சிகிச்சை பயனளிக்கத் தவறும் பட்சத்தில் மூன்று விரல்களும் துண்டிக்கப்படும் நிலை ஏற்படலாம் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. (4,9)

## 'சிப்பிக்குள் முத்து' நூல் வெளியீட்டு நிகழ்வு

கொழும்பு, செப். 21
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கட்டுரைகளின் தொகுப்பு நூலாகிய 'சிப்பிக்குள் முத்து' நூல் வெளியீட்டு நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணிக்கு பம்பலப்பட்டி, கொழும்பு 4 இல் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.
இலங்கைத் தமிழறிஞரும் கல்வி அமைச்சின் முன்னாள் வித்தியாதிபதியும் இந்திய தத்துவஞானம் நூலின் ஆசிரியருமான மறைந்த கி.லஷ்மணனின் நூற்றாண்டை முன்னிட்டு அன்னார் எழுதிய கட்டுரைத் தொகுப்பே வெளியிடப்படவுள்ளது.
இந்த நிகழ்வு மீள்குடியமர்வு, மறுவாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தலைமையில் நடைபெறும்.

## முச்சக்கர வண்டிக் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தீர்மானம்

### முச்சக்கரவண்டி சாரதிகளின் சங்கம் அறிவிப்பு

கொழும்பு, செப். 21
எரிபொருள்கள் மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்புக் காரணமாக முச்சக்கர வண்டிகளின் கட்டணத்தை அதிகரிப்பதற்குத் தேசிய ஒன்றிணைந்த முச்சக்கரவண்டிச் சாரதிகளின் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.
இதன் பிரகாரம் முச்சக்கர வண்டிப் பயணத்தின் முதலாவது கிலோமீற்றருக்காக 60 ரூபா அறவிடப்படத் தீர்மானித்துள்ளதாகச் சங்கத்தின் தலைவர் கே.டி. அல்விஸ் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
எரிபொருள்களின் விலை தொடர்ந்து அதிகரிக்கப்பட்டு வருகின்றமையால் முச்சக்கர வண்டிகளின் பயணக்கட்டணத்திலும் திருத்தம் மேற்கொள்ளவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.
அதன் பிரகாரம் முதலாவது கிலோமீற்றருக்காக இதுவரை அறவிடப்பட்டுவந்து 50 ரூபா புதிய திருத்தமாக 60 ரூபாவாக அதிகரிக்கப்படும்.
அத்துடன் இரண்டாவது கிலோமீற்றருக்காக 42 ரூபாவாக அதிகரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன் பிறகு ஒவ்வாரு கிலோமீற்றருக்காகவும் 40 ரூபா அறவிடப்படு. முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் விரும்பினால் இரண்டாவது கிலோமீற்றருக்காக 40 ரூபா அறவிடமுடியும்.
மேலும் முச்சக்கர வண்டிகளின் கட்டண அதிகரிப்புக்கான தீர்மானமானது, எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டதால் மாத்திரம் மேற்கொள்ளப்படவில்லை. மாறாக வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு மற்றும் வாகன உதிரிப்பாகங்களின் விலை கணிசமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளன. இதனைத் தாக்குப்பிடிக்கும் வகையிலே இவ்வாறு முச்சக்கர வண்டிகளின் பயணக் கட்டணத்தை அதிகரிக்க சங்கம் தீர்மானித்தது.
கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் எரிபொருள்களின் விலை அதிகரிக்கப்பட்டபோது முச்சக்கர வண்டிகளின் ஆரம்ப கட்டணம் 60 ரூபாவாக அதிகரிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டபோதும், உத்தியோக பூர்வமாக அது அதிகரிக்கப்படவில்லை. முச்சக்கர வண்டிச் சாரதிகளின் விருப்பத்துக்கு அதனை விட்டிருந்தோம். தற்போது ஆரம்ப கட்டணம் 60 ரூபா கட்டாயமாக்கப்பட்டுள்ளது - என்றார். (61)

# 'தனி ஈழம்' சிந்தனை வரக் கூடாது என்றால் அநீதிகள் இனிமேல் இடம்பெறவே கூடாது

### சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு

*கொழும்பு, செப். 21*
*நாட்டில் தனி ஈழம் என்ற சிந்தனை வரக் கூடாது என்றால் தமிழர்களுக்கு அநீதிகள் இனிமேல் இடம்பெறக் கூடாது. அரச நிர்வாகப் போட்டிப் பரீட்சைகளில் தொடர்ந்தும் தமிழர்கள் புறக்கணிக்கப்படுவது தனி ஈழம் கேட்பதற்கு அரசு தீனி போடுவதாக அமையும் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.*

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பெருந்தோட்டப் பிராந்தியங்களுக்கான அபிவிருத்தி அதிகார சபை சட்ட மூலம், பிரதேச சபைகள் திருத்தச் சட்டமூலம், இலங்கை ஆளணி முகாமை நிறுவகத் திருத்தச் சட்டமூலம் ஆகியவை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மலைநாட்டு அபிவிருத்தி அடிப்படையாகக் கொண்டு அதிகார சபை சட்ட மூலம் கொண்டு வந்தமை பெரும் பாராட்டுக்குரிய விடயமாகும்.
1987ஆம் ஆண்டு மலையகத்தில் பிரதேச சபை உருவாக்கப்பட்டும் பிரதேசசபையின் ஊடாக மலையகத்தில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுக்க முடியாமல் இருந்தது.எனினும் தற்போது அந்தத் தடை நீக்கப்பட் டுள்ளது. 200 வருடங்களுக்குப் பிறகு மலையகப் பகுதிகளுக்கு வீடுகள் கிடைக்கின்றமையும் பெரும் பாராட்டுக்குரியதாகும். இன்னும் பல முன்னேற்றங்கள் தேவையாகும். ஒரு இலட்சம் 40 ஆயிரம் வீடுகள் இன்னும் தேவையாக உள்ளன. ஆகவே அதனைத் துரிதப்படுத்த வேண்டும்.
மலையக தோட்ட மக்கள் சம்பளம் போதாமல் லயன் வாழ்க்கை வாழும் நிலமை தொடர்கின்றது. மலையக மக்கள் தொடர்ந்தும் அடிமைகளாக் இருப்பதனை ஏற்க முடியாது. மலையக மக்களின் அபிவிருத்திக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்.
ஆளணி முகாமை நிறுவன சட்டமூலமும் இன்று கொண்டுவரப்பட்டுள்ளது. ஆளணி முகாமை நிறுவகம் இனவாதம் பூசிய இய்ந்திரமாக இருக்க கூடாது. போட்டிப் பரீட்சைகளில் இனவாதம் திணிக்கப்படுகின்றது. இவ்வாறான நிலையில் எப்படி தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.
சிங்கள மக்கள் இனவாதச் சிந்தனையை நீக்கிவிட்டு வர வேண்டும். இலங்கை நிர்வாக மற்றும் கணக்கியல் சேவையில் அதிக தமிழர்கள் சித்தி பெற்றமை காரணமாக தற்போது அதற்கான நேர்முகப் பரிட்சை இடைநிறுத்தப்பட்டுள்ளது. இலங்கை வரலாற்றில் ஆயுதம் ஏந்துவதற்கும் கல்வியே காரணமாக அமைந்தது.
நாம் தமிழ் ஈழம் கோரவில்லை என அமைச்சர் திகாம்பரம் கூறினார். எனினும் நாம் தனி ஈழம் கேட்டவர்களாகும். நாட்டில் தனி ஈழம் சிந்தனை வர கூடாது என்றால் தொடர்ந்தும் அநீதிகள் இடம்பெற கூடாது- என்றார். (31)



(நன்றி: டெய்லிமிரர்)

## நாளை புரட்டாதி சனி விரதம் ஆரம்பம்

அனைத்து இந்து ஆலயங்களிலும் புரட்டாதிச் சனி விரதம் நாளை ஆரம்பமாகவுள்ளது. இந்த நிலையில் திருகோணமலை, மடத்தடி சனீஸ்வரப் பெருமான் ஆலயத்தில் இந்த வருடத்துக்கான புரட்டாதிச் சனி விரதமும் வருடாந்த உற்சவமும் நாளை ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து வாரத்தில் உள்ள 4 சனிக்கிழமைகளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொள்ள சிறப்பு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆலய ஆதினகர்த்தா வேதாகமாமணி பிரம்ம சிறி சோ. இரவிச்சந்திரக்குருக்கள் தெரிவித்தார். சனிதோசம், ஏழரைச்சனி, அட்டமத்துச்சனியால் ஆட்கொள்ளப் பட்டவர்களின் நன்மைகருதி சிறப்பு ஹோமசாந்தி வழிபாடும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. (40)

## சுகாதார சேவை பயிற்சிகளுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் நீடிப்பு

கொழும்பு, செப். 21
சுகாதார சேவையின் சில பயிற்சிகளுக்கு இணையத்தளம் ஊடாக் கோரப்பட்ட விண்ணப்பங்களின்கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது. நிறைவுகாண்மருத்துவ அதிகாரிகள்மற்றும்தாதியர்பயிற்சிகளுக்கானவிண்ணப்பங்களே கோரப்பட்டுள்ளதாகச் சுகாதார அமைச்சு தெரிவித்தது.
விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்வதற்கான இறுதித் திகதி நேற்றுடன் முடிவுறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், மேலும் ஒரு வாரத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.
இதன்பிரகாரம், எதிர்வரும் 28 ஆம்திகதிவரை இணையத்தளத்தினூடாக விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கமுடியும்என்றுசுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. (61)

# வெப்பம்,காலநிலை மாற்றத்தால் இலங்கைக்கு அச்சுறுத்தல்

### உலக வங்கி எச்சரிக்கை

கொழும்பு, செப். 21
அதிகரித்துவரும்வெப்பநிலையும் மாற்றமடைந்துவரும் மழைவீழ்ச்சிக் காலங்களும் இலங்கைக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளதுடன், அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தியையும் வாழ்க்கைத் தரத்தையும் குறைத்துவிடக்கூடும் என உலக வங்கியின் புதிய அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
தெற்காசியாவில் அபாய வலயங்கள் தொடர்பாக உலக வங்கி விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.
அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வெப்பநிலை மற்றும் மழைவீழ்ச்சி மாற்றங்கள் வாழ்க்கைத் தரத்தில் ஏற்படுத்தும் தாக்கம், தெற்காசியாவின் சனத்தொகையில் ஏறத்தாழ அரைவாசி அளவிலானோர் அபாய வலயங்கள் எனப்படும் மிகவும் பாதிக்கப்படக் கூடிய பகுதிகளிலே வாழ்ந்துவருகின்றனர்.
இந்தப் பகுதிகளில் பயிர்விளைச்சல் குறைவடைதல், சுகாதார தாக்கங்கள் காரணமாக அங்கு வாழும் மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையக்கூடும், மோசமான இணைப்புக்களைக் கொண்டிருத்தல் மற்றும் தண்ணீர்ப் பற்றாக்குறை பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்திருப்பதனால் இந்த அபாய வலயங்களில் உள்ள மக்கள் சிலர் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ளனர்.
அத்துடன் இலங்கையைப் பொறுத்தவரையில்,
2050 ஆம் ஆண்டளவில் இலங்கையின் வடக்கு மற்றும் வடமேற்கு மாகாணங்களில் அதிகரித்த வெப்பநிலையையும் அதிகமான மழைவீழ்ச்சி மாற்றத்தையும் அனுபவிக்கக்கூடிய அதிகமான சாத்தியக்கூறுகளை எதிர்நோக்கியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
இதேவேளை 2015 ஆம் ஆண்டு பரிஸ் உடன்படிக்கையில் பரிந்துரைக்கப்பட்டதற்கு அமைவாகக் காபன் வெளியேற்றத்தைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படினும் இலங்கையின் சராசரி வருடாந்த வெப்பநிலையானது 2050ஆம் ஆண்டளவில் 1.0 பாகை செல்சியஸ் முதற்கொண்டு 1.5 செல்சியஸ் வரையில் அதிகரிக்கக்கூடும் எனப் பகுப்பாய்வுகளில் இருந்து தீர்மானத்துக்கு வரமுடிந்துள்ளது.
எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்படாவிடின் இலங்கையின் சராசரி வெப்பநிலை 2.0 பாகை செல்சியஸ் வரை அதிகரிக்கும் சாத்தியமுள்ளது.
அத்துடன் காலநிலை மாற்றங்கள் குறைவான தனி நபர் வருமானத்திற்கு வழிகோலுவதுடன் அது தெற்காசியா முழுவதிலும் வறுமை மற்றும் சமத்துவமின்மையை அதிகரிக்கும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

# முன்னைய ஆட்சியுடன் ஒப்பிடுகையில் பொருள்களின் விலைகள் குறைவே

### விலைகளை ஒப்பிட்டுக் கூறுகிறார் அமைச்சரவைப் பேச்சாளர்

**கொழும்பு, செப்.21**
**முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சியுடன் ஒப்பிடும்போது கூட்டாட்சியில் அத்தியாவசியப் பொருள்களின் விலை மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இந்த நிலையில் எவ்வாறு எமது அரசில் பொருள்களின் விலை அதிகரித்துள்ளன என்று குற்றம் சுமத்த முடியும் என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன கேள்வியெழுப்பியுள்ளார்.**

வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு நேற்றுமுன்தினம் ஊடகத் தகவல் மையத்தில் இடம்பெற்றது.
இதன்போது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:

**மகிந்த ஆட்சியுடன் ஒப்பிடுங்கள்**
மகிந்த ராஜபக்ச ஆட்சியில் 2014 ஆம் ஆண்டு தேர்தலுக்காக எரிவாயு விலை 500 ரூபாவால் குறைக்கப்பட்டது. இதன்போது அதன் விலை 2 ஆயிரத்து 300 ரூபாவாகவே காணப்பட்டது.
நாம் ஆட்சிக்கு வந்த பின்னர் எரிவாயு விலை ஆயிரத்து 300 ரூபாவாகக் குறைத்தோம். பன்னாட்டுச் சந்தையில் ஏற்பட்ட விலை தளம்பல்களின் காரணமாகப் பொருள்களின் விலைகள் மாற்றப்பட்டன. அவ்வாறு ஒப்பிடும்போது கடந்த ஆட்சியை விட இந்த ஆட்சியில் பொருள்களின் விலை குறைவாகவே காணப்படுகின்றன.

**எரிபொருள் விலை**
எரிபொருள் விலைகளும் கடந்த ஆட்சியில் அதிகமாகவே காணப்பட்டன. எமது ஆட்சியின் பின்னர் எரிபொருள் விலைகள் குறைக்கப்பட்டன. குறிப்பாக 2014 ஆம் ஆண்டு மகிந்த ஆட்சியின் இறுதிக் காலப்பகுதியில் பெற்றோல் விலை 150 ரூபாவாகக் காணப்பட்டது.
கூட்டரசு ஆட்சிக்கு வந்த பின்னர் பெற்றோல் விலை 128 ரூபாவாகக் குறைக்கப்பட்டது. தற்போது பெற்றோல் விலை அதிகரிக்கப்பட்டாலும் 149 ரூபாவாகவே உள்ளது.
டீசல் விலை 2014 ஆம் ஆண்டில் 111 ரூபாவாக இருந்தது தற்போது டீசல் விலை 123 ரூபாவாகக் காணப்படுகின்றது.
30 வருடங்களுக்கு மேலாக நான் இந்தச் சேவையில் இருக்கின்றேன். காலம் காலமாகப் பொருள்களின் விலை அதிகரித்துள்ளன என்ற குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் முன்வைக்கப்படுகின்றன.
எப்போதாவது பொருள்களின் விலைகள் குறையும்போது அதைப்பற்றிக் கதைப்பது இல்லை.
அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வை வழங்கியுள்ளோம். அரச சேவையில் உள்ள மூத்த ஊழியர்களுக்கான கடன் உதவியில் வட்டி வீதத்தைக் குறைத்துள்ளோம்.
இதுபோன்ற பல சேவைகளை இந்த அரசு செய்துள்ளது. ஆனால் ஊடகங்கள் எமது ஆட்சியில் அதிக விலை உயர்வு எனக் கூறுவது பொருத்தமற்றது- என்றார். (61)

## வடக்கின் பொருளாதாரப் பிரச்சினையை ஆராய நம்பகரமாகச் செயற்படுங்கள்

### அரசைக் கோருகிறார் நாமல் எம்.பி.



கொழும்பு, செப். 21
வடக்கின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளை அரசு நம்பகரமான முறையில் ஆராய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் புதல்வருமான நாமல் ராஜபக்ச தெரிவித்தார்.
அதிகாரப் பரவலாக்கத்தையும் அரசியலையும் பயன்படுத்துவது உண்மையான பிரச்சினைகளைத் திசைதிருப்பும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். நாமல் ராஜபக்ச தனது கீச்சகத்திலேயே இந்தப் பதிவை செய்துள்ளார்.
அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:
வடக்கின் சமூக பொருளாதாரப் பிரச்சினைகளை அரசு நம்பகரமான முறையில் ஆராய நடவடிக்கை எடுக்கவேண்டும். இதன் ஊடாக அர்த்தமுள்ள வகையில் அனைத்து விதமான அபிவிருத்திகளையும் உறுதிப்படுத்த முடியும். எனினும் அதிகாரப் பரவலாக்கத்தையும் அரசியலையும் பயன்படுத்துவது உண்மையான பிரச்சினைகளைத் திசை திருப்புவதுடன் அவை யாருக்கும் உதவப்போவதில்லை என்று நாமல் தெரிவித்திருந்தார். (61)

## விவசாய உற்பத்தி பிரதேசங்கள் வறட்சியால் கடுமையாகப் பாதிப்பு

### இடர் முகாமைத்துவ அமைச்சு

கொழும்பு, செப் 21
தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலையின் காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் விவசாய உற்பத்திகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று இடர் முகாமைத்துவ அமைச்சர் துமிந்த திஸாநாயக தெரிவித்தார்.
இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துக்கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
தற்போது நிலவும் அதிக வெப்பமான காலநிலை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகள் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக விவசாய உற்பத்தி பிரதேசங்கள் கடுமையான பாதிப்புக்களை எதிர்கொண்டுள்ளன. அநுராதபுர மாவட்டம், வடக்குப் பிரதேசங்கள் அதிக வறட்சிக்குட்பட்டுள்ளதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக இருபோக நெல்விளைச்சல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.
அநுராதபுர பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாக காணப்படுகின்றது. இதற்காக 700 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. அநுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் ஒரு இலட்சத்து 23 ஆயிரம் குடும்பங்கள் தற்போது பாதிக்கப்பட்டுள்ளனர். இடர்களுக்கு முகம் கொடுத்த மக்களுக்கு தேசிய அரசே அதிக நிவாரணங்களை வழங்கியுள்ளது என்று உறுதியாகக் குறிப்பிட முடியும்.
இதற்காகவே பெரும் நிதி ஒவ்வொரு ஆண்டும் பாதீட்டில் (வரவு - செலவு திட்டத்தில்) ஒதுக்கப்பட்டுள்ளது- என்றார். (61)

## பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை 5 நிமிடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்

கொழும்பு, செப். 21
பிறப்பு, இறப்பு மற்றும் விவாகச் சான்றிதழ்களைத் துரிதமாக வழங்கும் சேவை, பத்தரமுல்லை பதிவாளர் நாயகம் அலுவலகத்தில், நேற்றுமுன்தினம் தொடக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.
அமைச்சர் வஜிர அபேவர்தன தலைமையில் இதற்கான இரண்டு சிறப்பு கருமபீடங்கள் திறந்து வைக்கப்பட்டன.
நாட்டின் எந்தவொரு மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கும் பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை, 5 நிமிடங்களுக்குள் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கும்.
1960 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரை வெளியிடப்பட்ட சான்றிதழ்களின் பிரதிகள், தரவுக்களஞ்சியத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. பத்தரமுல்லை பதிவாளர் நாயகம் அலுவலகத்துக்கு மேலதிகமாக, கொழும்பு மாளிகாவத்தை உதவிப் பதிவாளர் நாயக அலுவலகத்தின் மத்திய ஆவணக் காப்பகத்திலும், இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (61)

## துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டம்

கொழும்பு, செப்.21
ஊடக மற்றும் சட்ட விவகாரங்கள் தொடர்பான துறைசார் மேற்பார்வைக் குழுக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நாடாளுமன்ற குழு அறை 2 இல் இடம்பெறவுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் மன்னப்பெரும தலைமையில் இடம்பெறும் கூட்டத்தில் கலால் கட்டளைச் சட்டத்தின் சார்பில் பொலிஸாருக்கு அதிகளவிலான அதிகாரங்கள் வழங்குவது தொடர்பில் ஆராயப்படும். கூட்டத்துக்கு அழைப்பு விடுத்த நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தவறாது சமூகமளிக்குமாறு குழுச் செயலாளர் இந்திரா திஷநாயக்க கேட்டுள்ளார். (50)





## நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆங்கிலமொழி பயிற்சி பாடநெறி

இலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆங்கிலமொழிப் பயிற்சி பாடநெறி விரைவில் நடத்தப்படவுள்ளது.
பிரிட்டிஸ் கவுன்ஸில் நிறுவனத்தால் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக நடத்தப்படவிருக்கும் இந்தப் பாடநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பம் செய்தவர்களுக்கான எழுத்துப் பரீட்சை இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு இடம்பெறும். நாடாளுமன்ற கட்டடத் தொகுதியின் 21ஆம் இலக்க குழு அறையில் எழுத்துப் பரீட்சை இடம்பெறும். பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் காலை 8.45 மணிக்கு முன்னர் சமூகம் தருமாறு நாடாளுமன்ற செயலாளர் நாயக உதவிப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (50)

இலங்கையில் எம்.ஜி.ஆர்.102ஆவது பிறந்த தின நிகழ்வு கடந்த திங்கட் கிழமை அவரது பிறந்த இடமான கண்டியில் இடம்பெற்றது. இதன்போது இந்திய இசை அமைப்பாளர் தேவாவின் இசை கச்சேரியும் அவருக்கான மதிப்பளிப்பும் இடம்பெற்றது.



உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# 4 ஆண்டுகளாக என்னதான் பேசுகிறார்கள் அப்படி?

தமிழ் அரசியல் கைதிகள் தமது விடுதலையை வலியுறுத்தி மீண்டும் உணவுதவிர்ப்புப் பேராட்டத்தில் குதித்துள்ளனர். அனுராதபுரம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் கடந்த வெள்ளிக்கிழமை முதல் இந்தப் போராட்டத்தில்ஈடுபட்டுள்ளனர். இதுமற்றையசிறைகளுக்கும் பரவும் ஆபத்து இருக்கவே செய்கின்றது. ஏற்கனவே மகசீன் சிறையில் அடையாளப் போராட்டம் நடத்தப்பட்டிருக்கிறது.

அனுராதபுரம் சிறைச்சாலையில் தற்போது 8 அரசியல் கைதிகள் இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் இவர்கள் கடந்த 9 ஆண்டுகளாகத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். எனினும் இவர்களின் வழக்குகள் இன்னும் முடிவுறுத்தப்படவில்லை. சிலர் நீதிமன்றங்களுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அவர்களின் விளக்கமறியல் காலம் நீடிக்கப்படுகிறதே தவிர அவர்களுக்கு எதிரான குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்வதற்கும், வாதாடுவதற்கும் சட்ட மா அதிபர் திணைக்களத்தின் சார்பில் எவரும் நீதிமன்றத்துக்கு வருவதில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

சாதாரண சட்டங்களின் கீழ், இவ்வளவு நீண்ட காலமாக, எந்தவொரு குற்றவாளியையும் தண்டனை இன்றிச் சிறையில் அடைத்து வைக்க முடியாது. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் மட்டுமே இவ்வாறான நிலமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமது வழக்குகள் விரைவாக விசாரித்து முடிக்கப்பட வேண்டும் அல்லது குறுகிய கால புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டுத் தாம் விடுவிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியே அனுராதபுரத்தில் உள்ள 8 அரசியல் கைதிகளும் தற்போது உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மனிதாபிமானம் உள்ள எந்த ஒருவராலும் புரிந்துகொள்ளக் கூடிய, பரிவுடன் அணுகக்கூடிய கோரிக்கை இது. ஆனால், ஏனோ தெரியவில்லை கொழும்பு அரசு, ஆட்சியாளர்களை இந்தக் கோரிக்கை எட்டுவதாக இல்லை. அரசியல் கைதிகள் போராட்டம் எப்போது இடம்பெற்றாலும் சட்ட மா அதிபர் திணைக்களத்துடன் பேசியே இது தொடர்பில் முடிவு செய்யப்படும் என்று அரசதலைவரும் தலைமை அமைச்சரும் கூறுகின்றார்கள்.

அரசியல் கைதிகளை விடுவிப்பதாக வாக்குறுதி வழங்கி 2015ஆம் ஆண்டு மைத்திரி – ரணில் ஆட்சிக்கு வந்ததன் பின்னர் மட்டும் 5 தடவைகள் அரசியல் கைதிகள் உணவுதவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவிட்டார்கள். ஒவ்வொரு தடவையும் அவர்களின் போராட்டம் முடித்து வைக்கப்படும்போது சட்ட மா அதிபருடன் பேசி இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு காணப்படும் என்றுதான் அரச தலைவரும் தலைமை அமைச்சரும் கூறுகின்றார்கள். கடந்த 4 வருடங்களாக அப்படி என்னதான் இந்தத் தலைவர்கள் சட்ட மா அதிபருடனும் அவரது திணைக்களத்தினருடனும் பேசிக்கொண்டிருக்கிறர்களோ தெரியாது, இன்னும் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு வந்தபாடில்லை.

அரசியல் கைதிகளின் விடுவிப்புக்காகச் சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கும் யோசனையைச் சட்ட மா அதிபர் திணைக்களம் முன்வைத்தது. ஆனால், அந்த நீதிமன்றங்களோ நீண்ட காலத் தவணைகளிலேயே, அதாவது கிட்டத்தட்ட 6 மாதங்களுக்கு ஒரு தடவைத் தவணையிலேயே இந்த வழக்குகளை விசாரிக்கின்றன என்கிற குற்றச்சாட்டு முன்வைக்கப்படுகின்றது. இதனால் வழக்குகளை விரைவுபடுத்துவது நடக்கவில்லை.

தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குற்றத்தில் ஈடுபடுவதற்கு ஊக்குவித்தவர்களையும், அவர்கள் குற்றம் செய்வதற்குக் கட்டளை இட்டவர்களையும், தமது விருந்தாளிகளாகவும் பங்காளிகளாகவும் வைத்துக்கொண்டு, ஏவல் செய்தவர்களைத் தண்டிக்கும் அதிலும் ஒழுங்கான வழக்கு விசாரணையைக்கூட நடத்தாமல் சிறையில் அடைத்து வைக்கும் சிறுமைத்தனத்தை எண்ணிக் கவலைகொள்ள மட்டுமே முடிகிறது தமிழர்களால் இந்த நாட்டில்.

இந்த அரசைத் தாங்கி நிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பால் கடந்த 4 வருடங்களில் முன்னேற்றத்தைக் காட்ட முடியாமல் போனமை அதன் இராஜதந்திரத் தோல்வி என்பதை அது ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஒவ்வொரு தடவையும் சட்ட மா அதிபரைக் காட்டிக் காட்டியே தலைமை அமைச்சர் ரணில் இந்த விவகாரத்தில் இருந்து நழுவிச் செல்வதற்கு அது இடமளித்துக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் இந்த அரசியல் கைதிகளைப் பிணையாளிகளாக வைத்துக்கொண்டு போர்க்குற்றவாளிகளைத் தப்ப வைத்துவிடலாம் என்கிற அரச தலைவரின் நோக்கத்துக்கும் இடமளித்துக் கொண்டிருக்கிறது.

அரசுடனான அணுகுமுறையை மாற்ற வேண்டிய வேளை வந்துவிட்டது என்று அண்மையில் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ.சுமந்திரன் தெரிவித்திருந்தார். அந்த மாற்றத்தை அரசியல் கைதிகள் விவகாரத்தில் இருந்தே தொடங்கினால் நன்றாக இருக்கும்.



# அரசுக்குத் தொடர்ந்தும் ஆதரவை வழங்க வேண்டுமா கூட்டமைப்பு?

சேரலாதன்

கூட்டரசுக்குத் தொடர்ந்தும் கூட்டமைப்பு ஆதரவு வழங்க வேண்டுமா? என்ற கேள்வி தமிழ் மக்கள் மத்தியில் தற்போது தோன்றியுள்ளது. தாம் பல வகைகளிலும் இந்த அரசால் ஏமாற்றப்பட்டு, நடுத்தெருவில் நிற்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெளிப்படையாகவே குற்றம் சாட்டியிருந்தார். அது அரசின் மீதான கூட்டமைப்பின் வெறுப்பைத் துலாம்பாரமாகவே எடுத்துக்காட்டிவிட்டது.

மாவை சேனாதிராஜாவின் கருத்தில் நியாயம் இல்லாமலில்லை. இறுதியாக இடம்பெற்ற அரச தலைவர் தேர்தலில் மைத்திரிபால சிறிசேனவின் வெற்றியை உறுதி செய்ததில் கூட்டமைப்புக்குப் பெரும் பங்குண்டு. கூட்டமைப்பின் தலைவரான சம்பந்தனின் ஆணையை ஏற்று வடக்குக் கிழக்கில் வாழ்கின்ற தமிழர்கள் மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்து அவர் அரச தலைவர் பதவியில் அமர்த்தவதற்குப் பெரிதும் உதவினார். கடந்த ஆட்சியில் அவர்கள் அனுபவித்த துன்பங்கள் அவர்களைப் புதிய தெரிவு நோக்கிச் சிந்திக்க வைத்திருந்தது. அரச தலைவர் தேர்தலைத் தொடர்ந்து இடம்பெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் மைத்திரி ரணில் இணைந்த நல்லாட்சி என்ற பெயரிலான புதிய அரசு உதயமானது.

### மகிந்தவின் மாற்றமும் கூட்டமைப்பின் ஆதரவும்

ஒரு மகான் போன்று சகல அதிகாரங்களுடனும் ஆட்சி புரிந்த மகிந்தவால் தேர்தல் முடிவில் ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக வருவதற்கு மட்டுமே முடிந்தது. ஒரு நாட்டின் அதியுயர் பதவியில் அமர்ந்திருந்த ஒருவர் சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அமர்ந்த காட்சியை இங்கு காண முடிந்தது. அதேவேளை வரவு- செலவுத் திட்டம் உட்பட அரசின் சகல நடவடிக்கைகளுக்கும் கூட்டமைப்பு ஆதரவை வழங்கியே வந்துள்ளது. இதனால் தமிழ் மக்களில் ஒரு சாராரின் வெறுப்புக்கும் அது ஆளானது. கூட்டமைப்புக்கு எதிரானவர்கள் அதை மோசமாக விமர்ச்சிப்ப தற்கு இதுவே காரணமாகவும் அமைந்துவிட்டது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள், படையினரின் காணிகளை இழந்து நிற்பவர்கள் எனப் பலரும் கூட்டமைப்பு, அரசுடன் ஒட்டிக் கொண்டிருந்தும் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுத் தரவில்லையென ஆத்திரமுற்றனர்.

### கூட்டமைப்பு மீதான மக்களின் ஆத்திரமும் ஆதங்கமும்

கூட்டமைப்பின் தலைமை மீது தமது ஆத்திரத்தை வெளிப்படையாகவே மக்கள் காண்பித்தனர். நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் கூட்டமைப்பின் வாக்கு வங்கியில் ஏற்பட்ட சரிவுக்கு மக்களின் வெறுப்பே காரணமாக இருந்தது. தமிழ்களின் வாக்குகளால் பதவியில் அமர்ந்த மைத்திரிபால சிறிசேன அதை முற்றாகவே மறந்துவிட்டவராக நடந்து கொள்கின்றார். இனப்பிரச்சினை உட்படத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பாக அவர் எள்ளளவும் அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. புதிய அரசமைப்பின் உருவாக்கமும் இடைநடுவில் கைவிடப்பட்டதாகவே கருத வேண்டியுள்ளது. மகாநாயக்க தேரர்கள் எதிர்ப்புத் தெரிவித்ததால் அரசதலைவர் அந்த முயற்சியிலிருந்து பின் வாங்கியதாகக் கூறப்படுவதை ஏற்றுக் கொள்ள முடியாது. மாறி மாறி ஆட்சிக்கு வருகின்றவர்களால் தமிழர்கள் ஏமாற்றப்படுகின்றமை புதியதொரு விடயமல்ல. இது தொடர்ந்தும் இடம்பெறவே செய்கின்றது. கூட்டமைப்பின் தலைமைக்கு இது தெரியாத விடயமல்ல.



### கூட்டமைப்பின் சம கால நகர்வு?

தற்போது புதிய அரசமைப்பின் உருவாக்கம் தொடர்பாக மகிந்தராஜபக்சவுடன் பேசியிருப்பதாகக் கூட்டமைப்பின் சார்பில் கூறப்படுகின்றது. இதில் பயன் கிடைக்குமா? என்பது சந்தேகத்துக்கிடமானது. ஏனென்றால் பௌத்த தேரர்களின் பாதத்தைப் பற்றிப் பிடித்திருக்கும் மகிந்த அவர்களுடைய விருப்பத்துக்கு மாறாகச் செயற்படுவாரென எதிர்பார்க்க முடியாது. அத்துடன் இனவாதிகளை எதிர்ப்பதற்கும் மகிந்த விரும்பமாட்டார். தேர்தல்கள் நெருங்குகின்ற இந்த வேளையில் தமிழர்களுக்கு எதையாவது செய்யப்போய்த் தனக்கு இருக்கின்ற சிங்கள ஆதரவுத் தளத்தைக் குறைப்பதற்கு அவர் விரும்பமாட்டார். எல்லாவற்றுக்கும் மேலாக தமிழர்களுக்குப் புதிய அரசமைப்பை வழங்குவதன் மூலமாக தனிநாட்டையே அரசு வழங்கப்போவதாகச் சிங்கள மக்கள் மத்தியில் பரப்புரை செய்தவர்களும் மகிந்த அணியினர்தான். ஆகவே இவர்களை நம்பிக் கூட்டமைப்பு பேச்சில் ஈடுபடுவதால் எத்தகைய பயனும் கிடைக்கமாட்டாது.

ஒரு தீர்க்கமான காலகட்டத்தை கூட்டமைப்பு கடந்துகொண்டிருக்கின்றது. அரசுக்குத் தொடர்ந்தும் இந்தப் போக்கிலேயே ஆதரவு வழங்குவதா? இல்லை மாற்று நடடிவக்கைகளில் இறங்குவதா? என்பதை உடனடியாகவே அது தீர்மானிக்க வேண்டும்.

# “ஒரே ஒரு முறை அப்பா என்று அழைத்துக் கொள்ளட்டுமா?”

## தமிழ்த் தலைவர் மு. கருணாநிதி - 37



தேவநாயகம் தேவானந்த்

கருணாநிதியின் மூன்றாவது மகன் மு.க.ஸ்ராலின். அவர் தான் கருணாநிதியின் முழு அரசியல்வாரிசாக அவதாராமெடுத்துள்ளார். கடந்த 50ஆண்டுகளாகத் தி.மு.கவின் தலைவராக இருந்த கருணாநிதி மறைந்த சூழலில், அந்தக் கட்சியின் இரண்டாவது தலைவராக ஸ்ராலின் பொறுப்பேற்றுள்ளார்.

கருணாநிதி இறந்தது முதல் அவரது உடலை மெரினாவில் நல்லடக்கம் செய்வதற்கு நீதிமன்றம் உத்தரவிட்டது வரை தி.மு.க தொண்டர்கள் மற்றும் மக்களிடையே ஒரு பதற்றமான சூழல் நிலவியது. இந்தச் சூழலில் தி.மு.க தொண்டர்கள் மற்றும் மக்களிடையே அமைதியை நிலைநாட்டிக் கருணாநிதியின் இறுதிச் சடங்கை எவ்வித பிரச்சினையுமின்றி நடத்தினார் ஸ்ராலின். இது மக்கள் மத்தியில் அவர் மீதான நம்பிக்கையை அதிகரித்தது.



**ஸ்ராலின் எழுதிய உருக்கமான கடிதம்**

கருணாநிதி மறைந்த நாளில் ஸ்ராலின் எழுதிய உருக்கமான கடிதம் இன்று அனைத்துத் தரப்பாலும் பேசப்படுகிறது. “தலைவரே! என நான் உச்சரித்தது தான் என் வாழ்நாளில் அதிகம். அதனால் ஒரே ஒரு முறை, இப்போது 'அப்பா' என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே?” என்ற அவரது உணர்ச்சியான வார்த்தைகள் பலராலும் சிலாகித்துப் பேசப்படுகின்றன. 1976ஆம் ஆண்டு இந்தியாவில் இந்திராகாந்தி கொண்டு வந்த அவசரகாலச் சட்டமான மிசா சட்டத்தின் கீழ் ஸ்ராலின் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். அப்போது தான் அவருக்கு மக்கள் மத்தியில் அறிமுகமும், மதிப்பும் உண்டானது எனலாம்.

**செயல் தலைவரானார் ஸ்ராலின்**

வயோதிபம் காரணமாகக் கருணாநிதியால் இயங்க முடியாமல் போனபோது முதல் முதலாகச் செயல் தலைவர் பதவி உருவாக்கப்பட்டது. இதற்கு முன்பு, தி.மு.கவில் செயல் தலைவர் பதவி இல்லாத நிலையில், கடந்த 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அந்தக் கட்சியின் முதல் செயல் தலைவராக மு.க. ஸ்ராலின் தெரிவு செய்யப்பட்டார். ஆரம்பத்தில் தி.மு.க இளைஞரணியின் அமைப்பாளராகவிருந்து பின்னர் செயலாளராகப் பணியாற்றினார். சிறிது காலம் தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளராகப் பதவி வகித்த ஸ்ராலின், 2008ஆம் ஆண்டில் தி.மு.கவின் பொருளாளராக நியமிக்கப்பட்டார்.

1996ஆம் ஆண்டு முதல் 2001ஆம் ஆண்டு வரை சென்னை மாநகராட்சி மேயராக ஸ்ராலின் இருந்த போது, சென்னையில் பல மேம்பாலங்கள் கட்டப்பட்டன. அதேவேளை சென்னையில் மேம்பாலங்கள் கட்டியதில் ஊழல் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு தி.மு.க. தலைவர் கருணாநிதி, ஸ்ராலின் உட்படப் பலர் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

1984ஆம் ஆண்டில், முதல்முறை யாக ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதியில் களமிறங்கிய ஸ்ராலின் தோல்வியடைந்தார். ஆனால் பின்னர், 1989, 1996, 2001மற்றும் 2006 ஆகிய ஆண்டுகளில் ஆயிரம் விளக்கு தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

**துணை முதல்வர் பதவியையும் வகித்தார்**

கட்சியின் இளைஞரணிச் செயலாளராக, பொருளாளராக, துணைப் பொதுச் செயலாளராக, செயல் தலைவராக எனப் பல நிலைகளிலும் ஸ்ராலின் தி.மு.கவில் செயல்பட்டிருக்கிறார். கடந்த 2009ஆம் ஆண்டு, தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாகத் துணை முதல்வர் பதவியையும் ஸ்ராலின் வகித்தார். தற்போது தமிழக சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவராகவும் செயலாற்றி வருகிறார்.

ஜெயலலிதா காலமான சூழலில், அ.தி.முகவில் பெரியளவில் சலசலப்பு, பிளவு ஏற்பட்டது. இந்தச் சூழலில் கருணாநிதிக்குப் பிறகு தி.மு.கவில் என்ன நடக்கும் என்பதை மிக உன்னிப்பாக உலகமே கூர்ந்து கவனித்துக் கொண்டிருக்கிறது.

**ஸ்ராலினுக்கான சவால்**

கருணாநிதிக்குப் பின்னர் தி.மு.கவின் தலைமையை ஏற்றிருக்கின்ற ஸ்ராலினுக்கு முன்னால் உள்ள பெரிய சவால் கருணாநிதியின் எழுத்து மற்றும் பேச்சாற்றல் ஆகும். இந்தியளவில் பேச்சு மற்றும் எழுத்து ஆகியவற்றுக்கு உதாரணமாகத் திகழ்ந்த கருணாநிதியுடன் ஸ்ராலின் ஒப்பிடப்படுவார் என்பது தான் அவருக்கு முன்னால் உள்ள மிகப்பெரிய சவாலாகும். கருணாநிதியின் மறைவுக்குப்பின், ஸ்ராலின் விரும்பினாலும், விரும்பா விட்டாலும், அவர் மீதான எதிர்பார்ப்பு தி.மு.கவில் மட்டுமல்ல அரசியல் களத்திலும் இனிவரும் காலங்களில் கூடுதலா கவே இருக்கும்.

“என் உயிரினும் மேலான அன்பு உடன் பிறப்புகளே” என்பது கருணாநிதியின் பேச்சுக்களின் தொடக்கம். அதையே தனது முதலாகக் கொண்டு ஸ்ராலின் தனது முதலாவது உரையை ஆரம்பித்தார். “என் உயிரினும் மேலான கலைஞரின் அன்பு உடன் பிறப்புகளே” என்று கூறி ஸ்ராலின் தனது உரையை ஆரம்பித்தார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராகத் தெரிவான ஸ்ராலின், தனது முதல் உரையில் மாநில சுயாட்சி, மதச் சார்பின்மை ஆகியவற்றை வலியுறுத்திப் பேசினார்.

“முதுகெலும்பில்லாத அரசு” எனத் தமிழக அரசைக் கண்டித்தார். அத்தோடு, “இந்தியாவுக்குக் காவி பூசுபவர்களை எதிர்ப்பேன்” என மத்திய அரசையும், கண்டித்தார். அதேவேளை அண்ணா, கருணாநிதி ஆகியோரின் பாதையில் செல்லப்போவதாகவும் சூளுரைத்தார்.

(தொடரும்)

## ஆசிரியருக்கான கடிதம்

### மருந்தாளர்களின் அசமந்தத்தைத் தீருங்கள்!

சுகவீனமுற்ற எனது குழந்தைக்கு(வயது 1) மருந்து எடுப்பதற்காகக் கடந்த 17.9.2018அன்று யாழ். போதனா மருத்துவமனைக்குச் சென்றிருந்தேன். மருந்து எடுக்கின்ற இடத்திலுள்ள வரிசையில் மூன்றாவதாக நின்றுகொண்டிருந்தேன். மூன்றாவது நபராக நின்றும் மருந்தாளரிடம் சென்று மருந்து எடுப்பதற்கு நாற்பது நிமிடங்கள் ஆகின.

இரண்டு மருந்தாளர்கள் வரை அங்கு பணியில் இருந்தும் ஏன் இந்த ஆமைவேகமோ தெரியவில்லை. முன்னால் நின்றவரின் பிள்ளையோ மூச்சுவிடாமல் அழுதது. அதைப் பற்றிக் கூடக் கவலைப்படாமல் மருந்தாளர்களின் அசமந்தம் தொடர்ந்தது.

என்னை மட்டுமல்ல அங்கு நின்றிருந்த அனைவரையுமே அவர்களின் நடவடிக்கை எரிச்சலடையச் செய்தது. மருந்தைச் சரியாகக் கொடுக்க வேண்டும் என அக்கறையுடன் இருப்பதில் தவறில்லை.

ஆனால் சாதாரணமாக எம்மாலேயே சில மருந்துகளின் பெயர்களை வாசித்தறிய முடியும் போது இதற்காகவே படித்த அவர்களுக்கு ஏன் இவ்வளவு நேரம் எடுக்கிறது? நன்கு பயிற்றப்பட்ட மருந்தாளர்களைப் பணியிலே அமர்த்தி, பொதுமக்கள் எதிர்கொள்கின்ற அசௌகரியத்தை நிவர்த்தி செய்து தருமாறு உரிய பொறுப்பதிகாரிகளைத் தாழ்மையுடன் வேண்டி நிற்கிறேன்.

**பாதிக்கப்பட்ட திருமதி நி.அரவிந்தன்.**

### வீதியைத் திருத்தித் தாருங்கள்

நீர்வேலிச் சந்தியிலிருந்து புன்னாலைக்கட்டுவன் வரை செல்லும் நீர்வேலி - புன்னாலைக்கட்டுவன் வீதியானது நீர்வேலிச் சந்தியிலிருந்து மாசுவன் சந்திவரையிலும் மிகவும் பழுதடைந்த நிலையிலுள்ளது. அதில் பெரிய பெரிய கிடங்குகள் உள்ளன. பயணம் செய்யும் வியாபாரிகள், விவசாயிகள், பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றார்கள்.

மழைகாலம் நெருங்கி வருவதால் இந்த வீதியின் அவசியத்தைக் கருத்தில் கொண்டு விரைவில் இதைத் திருத்தித் தரும்படி உரிய அதிகாரிகளைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம். இதுவிடயமாக எழுத்து மூலம் தெரிவித்தும் இன்றுவரை எதுவித நடவடிக்கைகள் எடுக்கப்படாதிருப்பதையிட்டும் கவலையடைகிறோம்.

**த.பரராசசிங்கம்,**
*தலைவர், நீர்வேலி வடக்கு*
*கிராம அபிவிருத்திச் சங்கம்.*

# அமைதிப் பேச்சுவார்த்தை குறித்து மோடிக்கு இம்ரான் கான் கடிதம்

இஸ்லாமபாத்.செப்.21

இந்தியா - பாகிஸ்தான் இடையே நிறுத்தி வைக்கப்பட்டுள்ள அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்குவதற்கு வலியுறுத்திப் பாகிஸ்தானின் புதிய தலைமை அமைச்சர் இம்ரான்கான் இந்தியத் தலைமை அமைச்சர் மோடிக்குக் கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.



பாகிஸ்தானின் தலைமை அமைச்சராக இம்ரான் கான் பதவி ஏற்றது முதல், பல்வேறு பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகளில் ஆர்வம் செலுத்தி வருகிறார். பாகிஸ்தான் இனி எந்த நாட்டுடனும் போரில் ஈடுபடாது என்றும், மக்களின் முன்னேற்றத்தில் கவனம் செலுத்தும் என்றும் தெரிவித்திருந்தார்.


இதைத் தொடர்ந்து, காஷ்மீர் பிரச்சினையில் இந்தியா - பாகிஸ்தான் இடையே அமைதியை ஏற்படுத்துகின்ற பேச்சுவார்த்தையை மீண்டும் முன்னெடுக்க வேண்டும் என்றும் இம்ரான்கான் வலியுறுத்தி வந்தார். இப்போது இது குறித்து இந்தியத் தலைமை அமைச்சர்; மோடிக்கு இம்ரான் கான் கடிதம் ஒன்றை எழுதி உள்ளார்.

பாகிஸ்தானுடன் அமைதியான உறவு ஏற்படுவதற்கு இந்தியா உறுதியளிக்கும் என்று இந்தியத் தரப்புச் செய்திகள் குறிப்பிடுகின்றன. 2016ஆம் ஆண்டில் பாகிஸ்தானின் தீவிரவாதக் குழுக்கள் இந்தியாவில் தாக்குதல் நடத்திய பின்னர் இரண்டு நாடுகளுக்கிடையேயான அமைதிப் பேச்சுவார்த்தை முற்றிலுமாக முறிந்துபோயிருந்தமை குறிப்பிடத்தக்கது. தற்போது இம்ரான் கான் எடுத்திருக்கும் நட்பு முயற்சி பலன்கொடுக்குமா? அமைதிப் பேச்சுவார்த்தையை மீண்டும் தொடங்க வேண்டும் என்ற இம்ரான் கானின் வேண்டுகோளை இந்தியா ஏற்க வேண்டுமா? என்று பலவாறான வாதப் பிரதி வாதங்கள் இந்திய ஊடகங்களில் அலசப்பட்டு வருகின்றன.

**இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பிரச்சினை**

இந்திய - பாகிஸ்தான் எல்லையில் அமைந்திருக்கின்ற காஷ்மீர் பகுதியில் இந்த இரண்டு நாடுகளுக்கு இடையேயும் நில உரிமை தொடர்பான பிரச்சினைகள் இருக்கின்றன. இந்தியா, பாகிஸ்தான் நாடுகள் ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் அடைந்த நாள் முதல் இன்று வரை தீர்க்கப்படாத பிரச்சினைகளில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது. குறித்த நிலப்பகுதி இரண்டு நாடுகளாலும் மாறி மாறி ஆக்கிரமிப்புச் செய்யப்படுவதும், தொடர்ந்து போர் அல்லது இராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் அவ்வப்போது இரண்டு அரசுகளும் பேச்சு நடத்துவதும், பன்னாட்டு அமைப்புகள் தலையிட்டு இந்த பிரச்சினையைத் தீர்த்து வைக்க முயற்சிகள் செய்வதுமாக காஷ்மீர் சர்ச்சை இன்று வரை தொடர்கிறது.

இந்த இரண்டு நாடுகளுக்கு இடையே இரு நாட்டு வெளியுறவுத்துறை அமைச்சர்கள், வெளியுறவுத் துறைச் செயலாளர்கள், தலைமை அமைச்சர், அரசதலைவர் எனப் பல்வேறு மட்டங்களிலும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றுள்ளன. இவ்வாறான பேச்சுகளில் சில முடிவுகள் எட்டப்பட்டாலும் கூடப் பிரச்சினை முற்றிலும் தீர்க்கப்படவில்லை.



# நிலவுக்குக் கன... பயண...

டோக்கியோ.செப்.21

1972ஆம் ஆண்டுக்குப் பின் நிலவுக்கு எந்த மனிதரும் செல்லவில்லை. ஜப்பான் நாட்டுத் தொழில் அதிபரும், செல்வந்தருமான யுசாகு மசாவாவை நிலவுக்கு அனுப்பவிருப்பதாக 'ஸ்பேஸ்எக்ஸ்' நிறுவனம் தனது கீச்சகப் பக்கத்தில் குறிப்பிட்டிருந்தது.



அதன்படி நிலவுக்கு முதன்முறையாகச் செல்லும் தனிநபர் எனும் பெருமையைப் பெற்றிருந்தார் ஜப்பான் தொழிலதிபர் யுசாகு மேசாவா. அவர் தன்னுடன் ஓவியர், இசைக் கலைஞர், திரைப்பட இயக்கு...

கும்"... ஒரு... எவ... ணம்... ஜப்ப...



# "வாக்குறுதியை மீளப் பெறுகிறேன்" - ஜாக் மா


பீஜிங்.செப்.21

உலகின் மிகப் பெரிய இணையவழி விற்பனை நிறுவனமான அலிபாபாவின் மூலம் அமெரிக்காவில் பத்து இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்குவேன் என்ற தனது அறிவிப்பை மீளப் பெறுவதாக அதன் நிறுவனத் தலைவர் ஜாக் மா தெரிவித்துள்ளார். "அமெரிக்கா மற்றும் சீனாவுக்கிடையே வர்த்தகப் போர் நடைபெற்று வரும் சூழ்நிலையில் என்னுடைய வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு வழியேயில்லை" என்று அவர் தெரிவித்திருக்கிறார். இவ்விரு நாடுகளுக்கிடையே வர்த்தகத்தில் நிலவும் குழப்ப நிலை பல தசாப்தங்களுக்கு நீடிக்கும் என்று அவர் கூறியிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

# 60மில்லியன் டொலர்கள் ... அதிர்ச்சியில் ஜப்பான் நிறு...

ஒசாகா.செப்.21

ஜப்பானில் பணப்பரிவர்த்தனைகளை செயல்படுத்திவரும் இணையவழி நிறுவனம் ஒன்றின் கணக்குகள் திருடப்பட்டதால் 60 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதாவது கிட்டத்தட்ட 130 கோடி ரூபாக்கள் திருடப்பட்டுள்ளதாகப் பன்னாட்டுச் செய்திகள் தெரிவிக்கின்றன.



ஒசாகாவைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கிவரும் ஓர் 'ஒன்லைன்' பணப்பரிமாற்ற நிறுவனமே இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறது. வாடிக்கையாளர்களின் கணக்குகளைப் பராமரிக்கும் 'வழங்கி' (சேவர்) சட்டவிரோதமாகக் 'ஹேக்' செய்யப்பட்டிருக்கிறது. அதன் வழியே 60மில்லியன் அமெரிக்க டொலர்கள் திருடப்பட்டுள்ளன. திருடப்பட்ட பணம் முற்றிலுமாக வேறொருவருக்குப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது. இது குறித்துப் பொலிசார் விசாரணைகளை மேற்கொள்ளத் தொடங்கியிருக்கிறார்கள்.

'ஒன்லைன்' பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள...

படும் இரண்... டுகளை நிறு...

# கட்சித் தலைவர் தேர்தலில் ஷின்சா அபே அபார வெற்றி



டோக்கியோ.செப்.21

ஜப்பான் தலைமை அமைச்சர் ஷின்சா அபே ஆளும் கட்சித் தலைவர் பதவிக்கான தேர்தலில் பேட்டியிட்டிருந்தார். அவர் அதில் மீண்டும் வெற்றி பெற்றிருக்கிறார்.

முற்போக்கு ஜனநாயகக் கட்சியின் தலைவரான ஷின்சோ அபே, கடந்த 2012ஆம் ஆண்டு முதல் ஜப்பானின் தலைமை அமைச்சராகப் பொறுப்பு வகிக்கிறார். இந்த நிலையில், அவர் மறுபடியும் அந்தக் கட்சித் தலைவராவதற்கான தேர்தலில் போட்டியிட்டார். இதில் அவருக்குப் போட்டியாக இருந்த முன்னாள் பாதுகாப்பு அமைச்சர் ஷிங்கெரு இஷிபாவைத் தோற்கடித்து 3ஆவது முறையாகவும் அந்தக் கட்சியின் தலைவர் பதவிக்கு ஷின்சே அபே தெரிவு செய்யப்பட்டிருக்கிறார். இதன் மூலம் 3ஆண்டுகளுக்கு அவர் கட்சித் தலைவர் பதவியில் நீடிப்பார். இதனால், நீண்டகாலம் கட்சித் தலைவராகப் பதவி வகித்தவர் என்ற பெருமை அபேவுக்குக் கிடைத்திருக்கிறது.




## கலைஞர்கள் ணம்!



நர் என்று பல்வேறு துறைகளைச் சேர்ந்த எட்டுக் கலைஞர்களையும் இலவசமாகவே தன்னுடைன் நிலவுக்கு அழைத்துச்செல்லப்போவதாக இப்போது அறிவித்திருக்கிறார்.

"பூமிக்குத் திரும்பியதும் அவர்கள் தங்கள் படைப்புகளை உருவாக்குவார்கள். அவர்களது உன்னதமான படைப்புகள் நமக்குள் இருக்கும் கனவுகளுக்கு உத்வேகம் கொடுக்கும்" என்று கூறியிருக்கிறார் மேசாவா. ஒரு சமூகத்தின் கனவுக்குக் கலைஞர்கள் எவ்வளவு முக்கியம் என்பதற்கு உதாரணம் ஆகியிருக்கிறார் மேசாவா என்று ஜப்பானியர்கள் அவரைப் புகழ்கிறார்கள்.

# ஆங் சாங் சூகி குறித்த முகநூல் பதிவு

## 7ஆண்டு சிறைத்தண்டனை பெற்ற கட்டுரையாளர்

யாங்கூன்.செப்.21

மியான்மர் தலைவர் ஆங் சாங் சூகி குறித்து முகப்புத்தகத்தில் பதிவிட்ட கட்டுரையாளருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் 7ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்திருப்பது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

நகர் மின் ஸ்வா என்ற கட்டுரையாளர் முகநூலில் ஆங் சாங் சூகி குறித்துத் தவறான பதிவைப் பதிவிட்டிருந்ததன் காரணமாக யாங்கூன் மேற்கு நீதிமன்றம் 7ஆண்டு சிறைத் தண்டனை விதித்துள்ளது. மக்கள் மத்தியில் சூகி குறித்துத் தவறான எண்ணத்தைப் பரப்பும் நோக்கில் அவரது பதிவுகள் இருந்ததன் காரணமாக அவருக்கு இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது என்று நீதிமன்றத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மியான்மரில் ரோஹிஞ்சா முஸ்லிம்கள் மீது அந்த நாட்டு இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதல்களை வெளி உலகுக்குக் கொண்டு வந்த 'ரெய்டர்ஸ்' செய்திச் சேவையிப் பத்திரிகையாளர்கள் இரண்டு பேருக்கு அந்த நாட்டு நீதிமன்றம் சிறைத் தண்டனை வழங்கியிருந்தது.

இந்த நிலையில் தற்போது மீண்டும் ஓர் ஊகடவியலாளர் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டிருப்பது மியன்மரில் கருத்துச் சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது என்பதை உறுதிப்படுத்துவதாக அரசியலவதானிகள் தெரிவிக்கின்றனர்.




# சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார் ஷெரீப்; தண்டனை தற்காலிக நீக்கம்



இஸ்லாமபாத்.செப்.21

ஊழல் வழக்கில் சிறைத் தண்டனை பெற்றிருந்த பாகிஸ்தானின் முன்னாள் தலைமை அமைச்சர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது மகளுக்கு வழங்கப்பட்ட தண்டனையை அந்த நாட்டு நீதிமன்றம் தற்காலிகமாக நீக்கியிருக்கின்றது. கடந்த இரண்டு மாதங்களாகச் சிறையில் இருக்கும் ஷெரீப்பின் 10ஆண்டுகள் சிறைத் தண்டனையையும், அவரது மகள் மரியம்மின் 7ஆண்டு சிறைத் தண்டனையையும் தற்காலிகமாக நீக்குவதற்கு இஸ்லமாபாத் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. கடந்த வாரம் நவாஷ் ஷெரீப்பின் மனைவி புற்றுநோய் காரணமாகச் சாவடைந்திருந்தார்.

அதைத் தொடர்ந்து சிறையிலிருந்து இவர்கள் இருவரும் தற்காலிகமாக விடுதலை செய்யப்பட்டனர். இந்த நிலையில் இத்தகைய தீர்ப்பை இஸ்லமாபாத் நீதிமன்றம் வழங்கியுள்ளது.

**குற்றமும் தண்டனையும்**

பனாமா ஊழல் வழக்கில் நவாஸ் ஷெரீப் சொத்துக் குவித்தமை உறுதியானதால், அவரைத் தகுதி நீக்கம் செய்து அவருக்கும் அவரது மகளுக்கு சிறைத் தண்டனை மற்றும் 2மில்லியன் பவுண்ட் குற்றப்பணமும் விதித்து அந்த நாட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது. நவாஸ் ஷெரீப் அரசியல் தொடர்பான எதிலும் ஈடுபடுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இதனால் இறுதியாக நடைபெற்றிருந்த இடைத்தேர்தலில் அவருக்குப் பதிலாக அவருடைய தொகுதிகளில் அவருடைய மனைவி போட்டியிட்டிருந்தார்.

தேர்தலில் வெற்றி பெற்ற அவர் தனக்குரிய அமைச்சுப் பதவியை ஏற்பதற்கு முன்னர் புற்றுநோய் காரணமாகச் சாவடைந்திருந்தார். இதன் தொடர்ச்சியாகவே ஷெரீப்பும் மகளும் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

## ள் திருட்டு நிறுவனம்!



மிகப்பெரிய மையமாக ஜப்பான் திகழ்கிறது. உலகின் முதல் 10நாடுகளில் பணப்பரிவர்த்தனையை இந்த நாடு செயற்படுத்திவருகிறது. இங்குள்ள 50ஆயிரம் கடைகளில் இந்த முறையில் பணப் பரிவர்த்தனைகளை மேற்கொள்ளலாம். இந்தச் சம்பவம் ஜப்பானில் மிகவும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இதனால், ஜப்பான் அரசு கடுமையான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்போவதாக அறிவித்துள்ளது. அதன் ஒரு பகுதியாக, ஜப்பானிய அதிகாரிகள் 'ஒன்லைனில்' சொத்துக்கள் நிர்வகிக்கப்படும் 'சைக்ரோப்டஸி' எனப்படும் இரண்டு குறியாக்கப் பரிமாற்றச் செயல்பாடுகளை நிறுத்துமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் இடம்பெற்றது அமெரிக்காவிலுள்ள மண்டிகோ என்ற இடத்தில். அறுபது வயதான பெண் ஒருவர் கார் ஓடுவதற்குப் பழகிக்கொண்டிருந்தார்.

அவர் கார் ஓடிப் பழகுகின்ற வீதிக்கு அருகில் ஒரு நீச்சல் தடாகம் இருந்துள்ளது. குறித்த பெண் தவறுதலாகக் காரைப் பின் பக்கமாகச் செலுத்தியுள்ளார். கார் பின்னல் செல்ல முட்பட்ட போது அவர் வேகத்தடுப்பானை(பிரேக்) அழுத்துவதற்குப் பதிலாக வேகமூட்டியை (அக்ஸிலேட்டரை) அழுத்தியுள்ளார்.

கார் சீறிப் பாய்ந்து நீச்சல் தடாகத்துக்குள் விழுந்துள்ளது. அந்த நீச்சல் தடாகம் ஆழம் குறைந்ததாக இருந்தது அவர்களின் அதிஷ்டம். அந்தப் பெண்ணும் அவருடைய பயிற்றுவிப்பாளரும் நீந்திக் கரை சேர்ந்துள்ளனர்



# பிரேசில் அதிபர் வேட்பாளருக்கு எதிராக பெண்கள் கொதிப்பு; பரப்புரை

பிறேசிலியா.செப்.21

பிறேசிலில் அடுத்த மாதம் அதிபர் பதவிக்கான முதல் சுற்றுத் தேர்தல் நடக்கவுள்ளது. இந்தத் தேர்தலில் போட்டியிடுகின்ற வேட்பாளர் ஜேர் போல்சானாரோவுக்கு எதிராகப் பல இலட்சம் பெண்கள் பரப்புரையில் ஈடுபட்டுள்ளனர்.

ஜேர் போல்சானாரோ, பெண்கள், கறுப்பினத்தவர், சிறுபான்மையினர் மீது காட்டமான கருத்துகளைக் கூறியதில் பிரபலமடைந்தவர். தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரிடம் "உன்னை வன்புணர்வு செய்யமாட்டேன். ஏனென்றால் நீ அதற்குத் தகுதியானவர் இல்லை" என்று ஜேர் கூறியுள்ளார். ஆண்களை விட பெண்கள் எண்ணிக்கையில் குறைவாக இருப்பதையும், ஆணாதிக்கக் கருத்துகளையும் ஆதரிக்கும் விதத்தில் அவர் பல கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். "ஆணுக்குத் தரும் அதே சம்பளம் கொடுத்து ஒரு பெண்ணை வேலைக்கு எடுக்கமாட்டேன். ஏனெனில் பெண் கருத்தரிப்பாள்" எனத் தொலைக் காட்சி நேர்க்காணல் ஒன்றில் அவர் தெரிவித்திருக்கிறார்.



இந்த மாத ஆரம்பத்தில் பொது நிகழ்வொன்றில் வைத்து மன நிலை பாதிக்கப்பட்ட நபர் ஒருவர் இவ ல்ரக் கத்தியால் குத்தியதால் அதிபர் தெரிவுக்கான கருத்துக் கணிப்புகளில் அவரது செல்வாக்கு 26முதல் 28 சதவீதம் வரை உயர்ந்தது. ஆனால் கடந்த வாரத்தில் பல பிரபல பெண்கள் ஒன்று சேர்ந்து பெருகிவ்ரும் இவரது செல்வாக்கை மட்டுப்படுத்தும் வகையில் சமூக வலைத்தளங்களில் இவருக்கு எதிராகப் பரப்புரை செய்யத் தொடங்கியுள்ளனர். இந்தப் பெண்களில் பிரபல நடிகைகள், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சி வழங்குவோர் ஆகியோர் அடங்குகின்றனர்.



## அட! இவர்கள் மனிதர்கள்தான்

உயிர் இருக்கிறது
உணர்ச்சி இல்லை!
உதடு இருக்கிறது
சிரிப்பு இல்லை!

என்ன இது?
இக்கால இயந்திரமா?
உற்றுப் பார்க்கிறேன்..

அட!
இவர்கள் மனிதர்கள்தான்!

நீங்களெல்லாம்..
உயிரோடு செத்துவிட்டீர்களா?
இல்லை
செத்தபின்னும்
உயிர்வாழ்கிறீர்களா?
என்று கேட்கிறேன்..


நாணயங்களின் ஓசையில் – என்
நா நயங்களின் ஓசை
இவர்களுக்குக் கேட்கவில்லை!

மீண்டும் கேட்கிறேன்..
அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
முகத்தின் அழகு
சிரிப்பில்தானே தெரியும்..?

எங்கே உங்கள் சிரிப்பு? என்று..
சிரிப்பை அடக்கம் செய்த
கல்லறைஉதடுகள் திறந்து -
இவர்கள் சொல்கிறார்கள்..

ஒன்றை இழந்தால்தானே
இன்னொன்றைப் பெறமுடியும்!

# கதையை மாற்றிய சங்கர்! வருத்தப்பட்ட ரஜினி




என்னிடம் கதை கூறியதுபோல் படம் வரவில்லையே என 2.0 படத்தைப் பார்த்துவிட்டு இயக்குநர் சங்கரிடம் கேட்டுள்ளார் நடிகர் ரஜினிகாந்த்.

அண்மையில் சுப்பர் ஸ்ரார் மற்றும் இயக்குநர் சங்கரின் கூட்டணியில் உருவான 2.0 படத்தின் முன்னோட்டக் காணொலி வெளிவந்தது. இது முப்பரிமாண முறையிலும் வெளிவந்து அசத்தியது. வெளிவந்து 5 நாள்களாகியும், யுடியூ பில் 2.0 தமிழ் முன்னோட்டக் காணொலி முதலிடத்திலேயே உள்ளது.

இதற்கு முன் எந்தப் படத்தின் முன்னோட்டக் காணொலியும் இப்படி ஒரு சாதனையை நிகழ்த்தியது இல்லை எனச் சினிமா வட்டாரங்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் அண்மையில் அதைப் பார்த்த ரஜினிகாந்த், இயக்குநர் ஷங்கரிடம் சென்று. என்னிடம் நீங்கள் கதை கூறியது போல் படம் வரவில்லையே. என்னை ஏன் வில்லன்போல் காட்டியுள்ளீர்கள் எனக் கோபப் பட்டுள்ளார்.

## மகிழ்ச்சி எங்கே இருக்கிறது?



ஓர் அரசனுக்கு ஓர் ஏழையைப் பார்த்து வியப்பு! நாம் எல்லாச் செல்வங்களோடும் இருக்கிறோம். ஆனால் இவன் எந்தச் செல்வங்களும் இன்றி எம்மைவிட மிகவும் மகிழ்வாக இருக்கிறானே என்று. ஒருநாள் தன் அமைச்சரை அழைத்து "இவன் மகிழ்வு எங்கு இருக்கிறது என்று கண்டுபிடிக்கவேண்டும்" என்றார். அமைச்சர், 99 பொற்காசுகளை ஒரு பையில் கட்டி அவன் வீட்டு வாசலில் போட்டுவிட்டார்.

மறுநாள் காலையில் எழுந்து வந்த ஏழை அந்தப் பையைப் பார்த்து வியந்துபோனான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அதை எடுத்து வீட்டுக்குள் சென்று எண்ணிப்பார்த்தான். ஒரு காசு குறைந்தது. அன்றிலிருந்து அவனது உறக்கம்போனது, மகிழ்வு போனது! எப்போதும் தன் மடியிலேயே அந்தப் பையை வைத்துக்கொண்டு வீட்டையே சுற்றிச் சுற்றி வந்தான். இந்த ஏழையின் தூக்கத்தையும், மகிழ்வையும் பறித்த கவலைகள் இரண்டு,

இந்தப் பணத்துக்குச் சொந்தம் கொண்டாடி யாராவது வந்துவிடுவார்களோ?

தொலைந்த அந்த 100வது காசு எங்கே?

அமைச்சர் அரசனிடம் சொன்னார். மன்னா,

"இந்த ஏழையிடம் இல்லாமையில் இருந்த மகிழ்ச்சி இருப்பில் இல்லாமல் போனது! இவன் தன்னிடம் இருப்பதைப் பற்றி மகிழ்வுகொள்ளாமல் இல்லாததைத் தேடித் தன் மகிழ்வைத் தொலைத்துவிட்டான்" என்று..

இந்தக் கதையில் வரும் ஏழையைப் போலத்தான் நாமும். எம்மிடம் இருப்பதை எண்ணி மகிழாமல், எம்மிடம் இல்லாதத்தை எண்ணியே ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** புதியவர்களிடம் நிதானித்து பழகுவது நல்லது. தொழில், வியாபாரம் செழிக்க புதிய உபாயம் பின்பற்றுவீர்கள். எதிர்பார்த்த பணவரவு கிடைக்கும்.

**இடபம்:** நண்பரின் செயலை விமர்சிக்க வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத குறுக்கீடு வரலாம். வருமானம் சுமாராக இருக்கும்.

**மிதுனம்:** சிறிய செயலையும் மிகுந்த நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில் வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி நிலை உருவாகும். பணவரவும் நன்மையும் அதிகரிக்கும்.

**கடகம்:** பேச்சு, செயலில் நிதானம் பின்பற்றவும். தொழிலில் நிலுவைப் பணி நிறைவேற்றுவது நல்லது. பணவரவை விட செலவு அதிகரிக்கும்.

**சிங்கம்:** நல்ல செயலுக்கு உரிய பலன் தேடி வரும். அவமதித்தவரும் அன்பு பாராட்டுவர். தொழில் வியாபார வளர்ச்சியில் புதிய சாதனை ஏற்படும்.

**கன்னி:** மற்றவர் மதிக்கும் விதத்தில் செயற்படுவீர்கள். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெற புதிய திட்டம் உருவாக்குவீர்கள்.

**துலாம்:** மனதில் சஞ்சலம் உருவாகி மறையும். தொழிலில் கூடுதல் உழைப்பினால் உற்பத்தி விற்பனை சீராகும். பண வரவு சுமாராகக் கிடைக்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரிடம் தேவையற்ற விவாதம் பேச வேண்டாம். தொழில் வியாபார வளர்ச்சிக்கான வாய்ப்பை பயன்படுத்துவது அவசியம்.

**தனுசு:** உறவினரின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். திட்டமிட்ட பணிகளை புதிய உத்தியில் நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் பன்மடங்கு அதிகரிக்கும்.

**மகரம்:** இஷ்ட தெய்வ அருளால் நன்மை பெறுவீர்கள். திட்டமிட்ட உழைப்பினால் தொழில் வியாபாரத்தில் வளர்ச்சி உண்டாகும். கூடுதல் பணவரவால் சேமிப்பு அதிகரிக்கும்.

**கும்பம்:** கடந்த கால நற்செயலுக்கான பாராட்டு வந்து சேரும். தொழில், வியாபாரம் செழிக்க புதிய யுக்திகளை பயன்படுத்துவீர்கள். இலாபம் கூடும்.

**மீனம்:** அறிமுகம் இல்லாதவரிடம் சொந்த விஷயம் பேச வேண்டாம். தொழில் வியாபாரத்தில் உருவாகிற இடையூறை தாமதமின்றிச் சரி செய்வது நல்லது.

## நாளை

**22.08.2018**

சனிக்கிழமை

**புரட்டாதி 6**

**சனிப்பிரதோச விரதம்**

திதி: திரயோதசி முழுவதும்
நட்சத்திரம்: அவிட்டம் மு.இ. 8.58 வரை
சுபநேரம்: 3.02 – 4.32 வரை
ராகுகாலம்: 9.02 – 10.32 வரை

## சுடோக்கு

எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | 6 | | | | | 8 |
| | | | | | 7 | 6 | | |
| 4 | 5 | | | | 3 | | | |
| 8 | | | | | | | | |
| | | 4 | | | 6 | | 2 | |
| | | | 8 | 3 | | | | |
| | | | | 4 | | | 8 | |
| 6 | | 7 | 1 | | | | | |
| | | 3 | | | 2 | 9 | 4 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 7 | 6 | 1 | 2 | 3 | 9 | 5 | 8 |
| 1 | 5 | 9 | 8 | 7 | 6 | 4 | 3 | 2 |
| 8 | 3 | 2 | 4 | 9 | 5 | 1 | 6 | 7 |
| 9 | 4 | 1 | 6 | 5 | 8 | 7 | 2 | 3 |
| 2 | 8 | 7 | 3 | 1 | 9 | 6 | 4 | 5 |
| 5 | 6 | 3 | 2 | 4 | 7 | 8 | 9 | 1 |
| 3 | 2 | 8 | 9 | 6 | 1 | 5 | 7 | 4 |
| 7 | 9 | 4 | 5 | 8 | 2 | 3 | 1 | 6 |
| 6 | 1 | 5 | 7 | 3 | 4 | 2 | 8 | 9 |

நேற்றைய விடை


*ரோகித்



ரோஹித் - 52 (39)



பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள்



# உன்னால் முடியும் தம்பி

ராமுவும் சேகரும் இணைபிரியாத நண்பர்கள். ராமுவுக்குப் பார்வை தெரியாது. அதேபோன்று சேகரால் நடக்க முடியாது. இருவருக்கும் தாய் தந்தையரும் காலமாகி இருந்தனர். இவருவரும் பெரியவர்களிடம் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டவர்களாக இருந்தனர். தாம் வாழும் கிராமத்தில் கிடைக்கின்ற இலகு வான வேலைகளை இருவரும் சேர்ந்து செய்து கொண்டு, கிராமத்தில் உள்ளோர் அன்போடு மரிமாறுகின்ற உணவுகளை உண்டு வாழ்ந்து வந்தனர்.


இந்த நிலையில் அயலூரில் ஒரு திருவிழா நடைபெறவிருப்பதை இருவரும் அறிந்தனர். இறைபக்தியும் கலைகள் மீதான ஆர்வமும் இயல்பாக இருவருக்கும் இந்த காரணத்தால் அந்தத் திருவிழாவுக்குச் செல்ல வேண்டும் என்ற ஆசை இருவருக்கும் எழுந்தது. இருவரும் செல்ல முடிவெடுத்தனர்.

ஆனால், அயலூர் செல்வதற்கு நீண்டதூரம் நடக்க வேண்டியிருந்தது. இதை நினைக்கையில் சேகருக்குச் சோர்வும் சலிப்பும் ஏற்பட்டது. அவன் ராமுவை அழைத்து "ராமு! திருவிழா நடக்கும் இடம் மிகத் தூரம் அவ்வளவு தூரம் என்னால் நடக்க முடியாது. உன்னாலோ பார்க்க முடியாது. இந்த இலட்சணத்தில் எமக்கு ஏன் இந்த விபரீத ஆசை? என்று கூறினான். சேகர் சொன்னவை பற்றிச் சிறிது பொழுது சிந்தித்த ராமு, "நீ ஒரு விடயத்தைச் சற்றே சிந்தித்துப் பார். உன்னால் நடக்கத்தான் முடியாது. ஆனால் கூர்மையாகப் பார்க்க முடியுமல்லவா? அதேபோன்று என்னால் பார்க்கத்தான் முடியாது. ஆனால், வெகுதூரம் நிதானமாக நடக்க முடியும்.

ஆகவே இருவரும் சேர்ந்தால் நிச்சயம் திருவிழாவுக்குச் சென்று வரலாம்" என்றான். எப்படி என்றான் சேகர். " நீ ஏன் தோள் மீது ஏறி உட்கார்ந்து கொள். எனக்கு வழியால் போக வேண்டிய பாதையைச் சொல்லிக் கொண்டே வா. நான் உன்னைச் சுமந்து கொண்டு நீ காட்டும் வழியில் செல்கிறேன். இப்படியென்றால் திருவிழாவுக்குச் சென்று வரலாம்" என்றான். சேகரும் முழுமனதோடு ராமு சொன்னவற்றை ஏற்றுக் கொண்டான். ஒற்றுமையோடு இருவரும் யோசித்தார்கள். திருவிழாவுக்குச் சென்று வந்தார்.

**படிப்பினை:**
**எந்தக் காரியத்தையும் உங்களாலும் செய்ய முடியும் என்று நம்புங்கள்.**





## கருத்தாய்ப் படிக்கும் புத்தகம்

உலகப் பந்தைக் கைகளில்
உருளச் செய்து காட்டுமே
கலகம் நல்கும் தீமையை
கைவிடச் சொல்லும் புத்தகம்

உண்மை பேசும் காந்தியை
உயர்ந்து நிற்கும் மேதையை
கண்முன் எடுத்து வைக்குமே
கருத்தாய்ப் படிக்கும் புத்தகம்

அமைதி கொண்டு அமர்ந்துமே
அக்கறை கொண்டு
படித்திட்டால்
துன்பம் தன்னைப் போக்கியே
தொல்லை நீக்கும் புத்தகம்
தீமையற்ற நண்பனாய்
தினமும் கூட வந்திடும்
ஆமை முயலின் கதையை
அழகாய்ச் சொல்லும் புத்தகம்
அறிவுக் கண்ணின் ஊற்றென
ஆற்றல் வளர்த்து நன்மையே
செறிவு உள்ள மனிதராய்
சிறக்க வைக்கும் புத்தகம்.



# லெனின் என்றொரு மாமனிதன்

கம்யூனிசக் கொள்கையை நிறுவிய உலகப்புகழ் பெற்ற பேரறிஞரான கார் மாக்ஸ் என்பவரின் சீடராக லெனின் விளங்கினார். இவருடைய முழுப்பெயர் விளாடிமர் இலியீச் உலியனாவ். ரஷ்யாவில் 1917ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒக்ரோபர் புரட்சியை உருவாக்கி ரஷ்யாவைக் கம்யுனிச நாடாக்கி சோசலிசக் குடியரசை நிறுவிய பெருமை லெனினுக்குரியது. 1870ஆம் ஆண்டு ஏப்ரல் 9 ஆம் திகதி இவர் உலியானவ்ஸ்க் என்ற ஊரில் பிறந்தார்.


உலகின் நிலப்பரப்பில் ஏறத்தாழ ஆறிலொரு பகுதியைக் கொண்டிருந்த ருஷியப் பேரரசில் சர்வாதிகார முடியாட்சி முறையே நிலவியது. சமுதாயத்தில் இரண்டு வகுப்புக்கள் காணப்பட்டன. பிரபுக்களும் தனவந்தரும் உயர் வகுப்பில் இடம்பெற்றனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் அடுத்த வகுப்பில் இடம்பெற்றனர். இவர்கள் சலுகைகளும் உரிமைகளும் அற்று நசுக்கப்பட்டனர்.

முதலாம் உலகப் போரில் ரஷ்யா பங்குகொண்டமையால் உள்நாட்டுப் பிரச்சினைகள் உக்கிரகம் பெற்றன. ரஷ்யாவின் கொடுங்கோண்மை ஆட்சிக்கு முடிவுகட்டி, மக்களாட்சியை நிறுவுவதில் லெனின் முன்னின்று உழைத்தார். மார்க்சிய வழியைப் பின்பற்றிய பொல்ஷெகிக் கட்சியும் அதன் தலைவரான லெனினும் பெரும் அரசியற் சமூக மாற்றத்தை 1917ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30ஆம் திகதி ஒருபெரும் புரட்சி மூலம் சாதித்தனர். விவசாயிகளும், தொழிலாளர்களும் ஒருங்கிணைந்து ரஷ்யாவில் ஆட்சியை அற்றுப் போகச் செய்தனர். அதனால் உலகில் முதலாவது பொதுவுடமைத் தொழிலாளர் ஆட்சி முதலாவது பொதுடமைத் தொழிலாளர் ஆட்சி நிறுவப்பட்டது. விவசாய வர்க்கத்தையும் தொழிலாளர் வர்க்கத்தையும் சேர்ந்தவர்களுடைய நலன்கருதி அவர்களையே கொண்டு நடத்தப்படுகின்ற ஓர் ஆட்சியை ஏற்படுத்த லெலின் காரணமாயினார். கூர்மையான விழிகள், பலம் நிறைந்த உடல், நடுத்தர உயரம், சோர்விலா உழைப்புக் கொண்ட லெனின் 1924ஜனவரி 21ஆம் நாள் மொஸ்கோவின் கார்க்கிக் கிராமத்தில் இறந்தார்.

அவருடைய உடல் தைலமிடப்பட்டு ஓர் அழகான பேழையில் எல்லாரும் பார்க்கத்தக்கதாக வைக்கப்பட்டது. ரஷ்யாவில் அவர் பெயரால் 'லெனின் கிராட்' என்ற நகரம் உருவாக்கப்பட்டுள்ளது.

### வர்ணம் தீட்டாதே





## அரிஸ்ட்டோட்டில்

மனிதன், இன்றவன், அரசியல், மூன்று பிரிவுகளையும் அலசி ஆராய்ந்து தமது தத்துவத் தரிசனமாக உலக்கு வங்கியவர் அரிஸ்டோட்டில். இவர் பிளாட்டோவின் மாணவர். மாவீரனாகத் திகழ்ந்த அலெக்சாண்டருக்கு பன்னிரண்டு ஆண்டுகள் நண்பராகவும், ஆசிரியராகவும் இருந்தவர் அரிஸ்டோட்டில். "இந்த உலகம் இறைவனால் தோற்றுவிக்கப்படவில்லை. ஆனால் இந்த உலகை இயக்குபவன் இறைவனே!"

"மனிதன் தனிமனிதச் சிந்தனை கொள்ளாமல், சமூகச்சிந்தனையோடு வாழ வேண்டும்" என்கிறார் அரிஸ்டோட்டில்.

# எங்கள் முற்றத்தி(ன்)ல் விடுதலை சிட்டென தியாக தீபம் ஒளிர்கிறது!

செந்தோழன்

இன விடுதலைப் போராட்டம் என்பது, எவ்வகையில் அமைந்தாலும் அந்த இன மக்களின் முழுமையான ஆதரவு இல்லாமல் மேற்கொள்ளமுடியாதது. ஒட்டுமொத்த மக்களும் விடுதலை யென்ற ஒரே இலட்சியத்துக்காக தமது பங்களிப்பைச் செய்ய முன்வர வேண்டும். அவ்வாறு முன்வரும்போதுதான் விடுதலைக்கான மக்கள் புரட்சியும் அதன்மூலமான விடுதலையும் சாத்தியப்படும்.

ஈழ விடுதலைப் போராட்டமானது தியாகங்களின் சிகரங்களைத் தொட்ட சந்தர்ப்பங்களில், தியாகச் செம்மல் லெப். கேணல் திலீபனின் தியாகம் மிக முக்கியமானதாகும். தமிழர்களின் விடுதலைப் போராட்டம் பல சந்தர்ப்பங்களில் ஆயுத ரீதியான வன்முறை வழியைத் தவிர்த்து அகிம்சை வழியைக் கடைப்பிடிக்க முனைந்த போதெல்லாம், எதிர்மறையான விளைவுகளையும் ஏமாற்றங்களையுமே பரிசாகப் பெற்றது.



**அகிம்சையின் பின்னான கோரமுகம்**

அகிம்சைக்கே அடையாளமெனக் கருதப்பட்ட பாரத தேசம் தமிழர்களின் அகிம்சைப் போராட்டத்தைக் காலடியில் போட்டு மிதித்தது. ஒரு துளி நீர் கூட அருந்தாமல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்ட திலீபனின் உடல் வாடி வதங்கி, மெலிந்து, சுருண்டு, நிலை குலைந்து, நினைவிழந்துபோனது. அந்த உன்னத ஆன்மா அவர் உடலைவிட்டுப் பிரிந்தபோதும் மௌனமாய் இருந்து ஒட்டு மொத்தத் தமிழினத்துக்கே துரோகம் செய்ததன் மூலம் 'காந்தியம்' என்ற திரைக்குப் பின்னாலிருந்த தனது உண்மையான கோர முகத்தை வெளிக் காட்டியது காந்திதேசம். அன்று வெளிக்காட்டத் தொடங்கிய காந்திதேசத்தின் துரோக நாடகம் இன்றுவரை தொடர்கதையாகத் தொடர்கின்றது. ஈழத்தின் மேல் இந்தியாவுக்கு அப்படி என்னதான் கோபம்? காரணம் கேட்டால், ராஜீவ்காந்தி படுகொலை, இந்தியத் தேசியம், பிராந்திய நலன் எனக் காரணமில்லாத தோரணங்களை வார்த்தை அலங்கரிப்பாய் வாய் வீரத்தில் தொங்கவிடுவார்கள் இந்தக் காந்தியவாதிகள்.

இந்தப் போலிக் காந்தியவாதிகளுக்குத் தான் புரியுமா எம் வலிகளும் வேதனைகளும்? இவர்களுக்குத் தெரியுமா நாம் கண்டுகொண்ட இழப்புக்களும் அவலங்களும்? அகிம்சை எனும் உயரிய ஒழுக்கத்தின்பால் இயங்குவதாகக் காட்டிக்கொண்டிருந்த இந்தியா, வேடமுக நாடகங்களை அரங்கேற்றிய காலத்தை நாம் மறந்துவிடலாகாது.

**தியாக வேள்வி**

நல்லூரில் 1985ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதியன்று ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து திலீபன் சாகும்வரை உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்தார். ஒரு துளி நீர் கூட அருந்தாது பன்னிரண்டு நாள்கள் அந்தத் தியாக வேள்வியில் மெழுகாய் உருகினார். அவர் நேசித்த மக்கள் அலையலையாய் அவர் முன் திரண்டார்கள்.


அவர் மெல்ல மெல்ல உருகி அணைந்து கொண்டு போவதைக்கண்டு துடித்தார்கள். திலீபன் மக்களின் அன்பு கண்டு நெகிழ்ந்தார். பேசமுடியாத நிலையிலும் பேசவேண்டும் என்ற உத்வேகம் கொண்டவராய் வார்த்தைகளை உதிர்த்தார்.

"நான் சாவடைந்து விண்ணிலிருந்து அங்கே உள்ள என் நண்பர்களுடன் சேர்ந்து தமிழீழம் மலரப்போகும் அந்த நாளை எதிர்பார்த்துக்கொண்டேயிருப்பேன். ஒரு புனித இலட்சியம் நிறைவேற வேணும் எண்டதற்காகத் தான் எங்களை நாங்கள் வருத்திக்கொண்டு உணவு ஒறுப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருக்கிறோம்" என்று கூறிய அந்தத் தருணங்கள் ஆத்மங்களில் ஊடாடி உத்வேகம் அளித்தன.

தென்றல் விடுதலையின் நறுமணம் சூடி கண்ணீர்த் துளிகளை உப்பாறாய் கொட்டின. நெஞ்சுரம் அயர்வின்றி உய்வு கொண்டு செந்தளித்தது. வீரத்தைப் பரிசளித்தது. ஆம், இத்தகைய நம்பிக்கையோடு பயணித்துவிட்ட அந்த வீரர்களின் நம்பிக்கை என்றுமே தோற்றுவிடாது. பரிபூரண சுதந்திரத்தைத் தமிழ் மக்கள் அடைந்தே தீருவர். திலீபன் போன்றவர்கள் மிக அருமையானவர்களே.

**விடுதலை காண முயற்சிப்போம்**

ஆம், எமது விடுதலைப் பயணம் அப்படிப்பட்டதுதான். எம்மை மிகக் கடுமையாக வருத்தித்தான் அந்த உயரிய விடுதலையை வென்றெடுக்க முடியும். அதுவே பெறுமதி மிக்கதாயிருக்கும் என்பதை



அவரது வாழ்க்கைப் பயணம் எமக்கு உணர்த்துகிறது. எந்த நேரமும் இயங்கிக்கொண்டிருக்கும் அவரது இயல்பு பாரதியார் கண்ட சிட்டுக்குருவியை எண்ணவைக்கும். அத்துணை துடிப்பு, அத்துணை வேகத்துடன் விசையுறத் திரிந்தான் திலீபன்.

இந்த வேகமும் துடிப்பும் எம் ஒவ்வொரு வரிலும் உத்வேகம் பெறவேண்டும். இத்தகைய மகோன்னதங்களைச் செந்தளித்த வீரனின் நினைவில் நனைவோம். "தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகி விடும்." என்று அவர் கூறிய வாசகங்களை ஞாபகம் கொள்வோம்.

## ஏழாம் நாளாச்சு ஏக்கமே எம் மூச்சாச்சு!

குருதி
காய்கின்றது
குரல் வளை வறண்டு
குற்றுயிர் போகின்றது!

திலீபா!
நின் நிலை
நாம் காணும்
கொடுமை பார்த்தாயா!

விடுதலை
நெருப்பேந்தி
தீயாய் நீ உருகுநிலை
திசையறிய உறவுகள் நாம்!

இந்திய
ஏகாந்தம் உன்னுயிரை
எடுத்திட எமனாட்டம்
வல்லூறாய் வட்டமிட்டே
வலம் வருகுது நல்லூரான்
வீதி எங்கும்!

குரல் வளை
நீ அடைக்க
கூக்குரல் எழுப்பினாய்
உன் கோரிக்கையை

கேளிக்கையாய்
குதறிய வல்லரசு
கும்மாளமிட்டே
கூத்தாடியது இலங்கையுடன்!

எத்தனை தடையும்
என் உயிருக்கு முன்
நிகரில்லை என்றே
நீ கிடந்தாய்!

கொஞ்சம் கொஞ்சமாய்
உன் உறுப்புக்களும்
ஓய்வு எடுத்திட
உறுதி கொண்டது!

நாளும்
எமன் பாசக் கயிற்றை
வீசிட வந்தான் வீதியிலே
சுற்றம் சூழ் மக்கள்
சூளுரைக்கும் உன் பெயர் கண்டு
நின் பணி மறந்தானடா எமனும்
நாளை வருவேன் என
எட்டாவது நாளுக்காய் அவன்!

ஈழவன் தாசன்



# பெறுகை அறிவித்தல்

## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

## சபைநிதி-2018

01. தவிசாளர், பெறுகைக்குழு.வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விவரிக்கப்பட்ட வேலைக்காக கோரப்படுகின்றது.
02. தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்விகோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையாவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள், பெறுகை ஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule)கேள்வி ஆவணம் பகுதி ஏ இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்ளலாம். அத்துடன்மேற்கூறிய இடத்தில் வேலைநாள்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 20.09.2018 ஆம் திகதியிலிருந்து 03.10.2018ஆம் திகதி வரை காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள் ஆங்கில மொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவணமொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 20.09.2018 தொடக்கம் 03.10.2018 ஆம் திகதி வரை அலுவலக நாள்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-(வற் தவிர்த்து) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 04.10.2018ஆம் திகதி 14:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத் தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப் படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக்குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு) நாள்கள் (20.12.2018) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 27.10.2018 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
10. கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு 10000.00 வினை பணமாக செலுத்தி பற்றுச் சீட்டினை கேள்வி ஆவணத்துடன்இணைக்க வேண்டும்.
11. இக்கேள்வி கோரலில் உள்ள நிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | வேலை விவரம் | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு(ரூபா) | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| 1 | தலைமையலுவலக மாநாட்டு மண்டபத்திற்கு ஒலியமைப்புக் கருவிகள் பொருத்துதல்; | NP/14/41(15)/Conference System/2018 | 01 மாதம் | வடக்கு மாகாண சபையில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 10000.00 | 17.01.2019 |

தியாகராஜா நிரோஷ்,
தவிசாளர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு
வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர். (C/7686)(11) 20.09.2018

---

யா/சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை,
சாவகச்சேரி

## பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம் - 2018

**காலம் : 30.09.2018 ஞாயிற்றுக்கிழமை**

**நேரம் : காலை 9.00 மணி**

எமது பாடசாலையில் கல்வி கற்ற அனைத்து பழைய மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**செயலாளர்** **தலைவர்**

---

## இனுவில் திருப்பதி அருள்மிகு திரு வேங்கடேஸ்வரர் ஆலயம் சனீஸ்வரர் பரிகார சந்நிதி மருதனார் மடம்



### புரட்டாதி சனி வார சிறப்பு உற்சவமும் சனீஸ்வர தோச பரிகார ஹோமமும்-2018

**1ம் சனி வாரம் 22.09.2018 காலை 8.00 - 11.30**
**2ம் சனி வாரம் 29.09.2018 காலை 8.00 - 11.30**
**3ம் சனி வாரம் 06.10.2018 காலை 8.00 - 11.30**
**4ம் சனி வாரம் 13.10.2018 காலை 8.00 - 11.30**

கோவிந்தன் அடியார்களே!
மேற்படி ஆலயத்தில் தனக்கென தனிப்பெரும் கோவிலும் அருகே தோஷ நிவர்த்தி செய்யும் நளபுஷ்கரணி புனித தீர்த்தமும் கொண்டு, தனது எஜமானாகிய நாராயணப் பெருமானை தரிசித்த வண்ண்ம் கோயில் கொண்டு இருக்கும் சனீஸ்வர பகவானுக்கு, அடியார்களின் நலன் கருதி பிரதி புரட்டாதி சனிக்கிழமை தோறும், சனீஸ்வரர் தோஷ பரிகார ஹோமம் நடைபெற இறையருள் கூடியுள்ளது. அடியார்கள் காலை 6.00 முதல் மாலை 6.00 மணிவரை நளபுஷ்கரணியில் நீராடியும், எள் தீபம் ஏற்றியும் வழிபட முடியும் என்பதையும், சனீஸ்வர தோஷ பரிகார ஹோமத்தில் பங்குபற்றுபவர்கள் காலை 8.00 மணி முதல் மு.ப. 11.30 மணிவரை ஹோமத்தில் பங்கு பெற்ற முடியும் என்பதையும் அறியத்தருகின்றோம்.

**தொ.பே:021 224 2300** **ஆலய தர்மகர்த்தா ச.கணேசலிங்கம்** (CS/1994)(10)

---

# மரண அறிவித்தல்

## பொன்னம்பலம் திருச்சிற்றம்பலம்

(ஓய்வுநிலை உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வடகிழக்கு மாகாணம்)
(Retd. Assistant Auditor General - North Eastern Province, Former Auditor - RRAN)



மாதகல் பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் திருச்சிற்றம்பலம் நேற்று (20.09.2018) வியாழக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (ஓய்வுநிலை அரச கணக்காய்வாளர் - கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம் - கொழும்பு), தங்கம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான இராஜபட்சம் (பொறியியலாளர்) மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், ஜெயவிஜயா (Research Chemist - Canada), துஷ்யந்தி (Teacher - J / Mathagal Nunasai M. V. ), கஜேந்திரன் (Provincial Internal Audit Officer - Office of the Provincial Internal Audit - Northern Province) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவநேசன் (Electrical Engineer - Canada), பிரேமகுமார் (Technical Officer - RDD - Jaffna), சிவதாரணி (Development Officer - Karainagar DS Office) ஆகியோரின் அன்பு மாமனும், இராமநாதன் (Retd. Surveyor), கணபதிப்பிள்ளை (Retd Pharmacist), நாகராசா (ஓய்வுநிலை உத்தியோகத் தர், பண்டத்தரிப்பு ப.நோ.கூ.ச) ஆகியோரின் அன்புச் சகோதரரும், கஜனி (Research Assistant - Canada), அபிரா (Canada), சர்ஜனன், சஞ்சீவினி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் காலை 9.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மாதகல் போதி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**திருச்சிற்றம்பலம் கஜேந்திரன் (மகன்)**
**077 514 1174, 021 221 1880**

(cs.19786)(13.17)

## நல்லூர் பிரதேச சபை
## பகிரங்க அறிவித்தல்

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குள் பழைய பொருள்கள் (இரும்பு, பிளாஸ்ரிக் போத்தல், பித்தளை) சேகரிப்போர், விற்பனை செய்வோர் சபையின் அனுமதி பெற்று வியாபார நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இத்தால் பகிரங்கமாக அறிவிக்கின்றேன். தவறின் பிரதேச சபை சட்டத்திற்கமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள நேரிடுமென்பதை உரியவர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**

(IN/35585)(10)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்




**திரு. ஒப்பிலாமணி விஜயரத்தினம் (JP)**
(பிரபல பொருளியல் ஆசான்)

யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னைநாள் பொருளியல் ஆசானும் தற்போது யா/ நெல்லியடி மத்திய கல்லூரியில் பணியாற்றுபவருமான திரு. ஒப்பிலாமணி விஜயரத்தினம் அவர்கள் கடந்த 29.08.2018 புதன்கிழமை யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி உயர்திரு அ.பிரேமசங்கர் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியபிரமாணம் செய்து கொண்டுள்ளமையை பிரியமுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

**ஒப்பிலாமணி பெற்ற ஒப்பிலா ரத்தினமே**
**சித்தமெல்லாம் சேவையினால் சீர்பெற்ற உத்தமனே!**
**இத்தரையில் பணிபுரிய ஏற்றிட்ட பெரும் பதவி**
**எத்திசையும் புகழ்மணக்க எழிலாக வாழ்த்துகிறோம்.**

மேலும் பல பட்டங்களையும் பதவிகளையும் பெற்றுயர வாழ்த்தும் ....

**திருமதி. அ.சிவபாக்கியம் குடும்பம்**
**மீசாலை கிழக்கு, மீசாலை.**

## வீடு வாடகைக்கு உண்டு

நல்லூருக்கு அண்மையில் சகல வசதிகளுடனும் வீடு நாள், வார அடிப்படையில் வாடகைக்கு விடப்படும். - **077 170 3741, 077 678 7363**




## கேள்வி அறிவித்தல்
## சபைநிதி -2018
### புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, வடமாகாணம்

01. சபைநிதி – 2018 மூலமான மூலதன ஒதுக்கீட்டின் ஒரு பகுதி கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட திட்டங்களிற்காக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
02. தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு, புதுக்குடியிருப்பு பிரதேசசபை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைகளுக்காக தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கோருகின்றார்.
03. தேசிய போட்டி கேள்விகோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் வடமாகாண நிர்வாக எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களுக்குமட்டும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.
04. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான C9/C8 தரத்தில்கட்டட, வீதி அமைப்பிற்கான CIDA பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிகதகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5 இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ளகேள்விதாரர்கள் தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு (தொலைபேசி: 021 229 1023 e.mail – pkipsmullai@gmail.com ) இல் இருந்து மேலதிகதகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணிமுதல் மாலை14.00 மணிவரை 05.10.2018 வரையிலான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர், பிரதேசசபை பெறுகைக் குழு, புதுக்குடியிருப்பு எனும் இடத்திலிருந்து 21.09.2018 ஆம் திகதியிலிருந்து 05.10.2018 ஆம் திகதிவரை காலை 09.00 மணிக்கும் மாலை 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா. 2000.00 (வரி நீங்கலாக) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர், பிரதேசசபை பெறுகைக்குழு புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு எனும் முகவரிக்கு 05.10.2018ம் திகதிமாலை 02.00மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்வி தாரர் அல்லது அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் புதுக்குடியிருப்பு பிரதேசசபை தலைமைஅலுவலகத்தில் திறக்கப்படும்.
09. கேள்வியானது கேள்வி சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 49 (நாற்பத்தொன்பது–23.11.2018) நாட்கள் வரைசெல்லுபடியாகும்.
10. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும். இத் தொகையினை மீளளிக்கத் தக்கவைப்பு பணமாக அலுவலகத்திற் செலுத்தி பற்றுச்சீட்டினைப் பெற்றுக்கொள்ள முடியும். அல்லதுவங்கிப் பிணையாக செலுத்தமுடியும்.

| ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டு தொகை (மில் ரூ) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் (கட்டடம்,வீதி | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (ரூபா) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/44(04)/Coun./Capital/ W-01-2/2018 | புதுக்குடியிருப்புபொதுச்சந்தையில் இறைச்சிக்கடைகள் அமைத்தல் | | 45 நாட்கள் | C 9/C8 | 14,000.00 | 21.12.2018 |
| NP/14/44(04)/Coun./Capital/ W-08/2018 | முத்தையன்கட்டு ஜீவநகர்பாலம் அமைத்தல் | 1.348 | 45 நாட்கள் | C 9/C8 | 14,000.00 | 21.12.2018 |


11. கேள்விகள் திறப்பதற்கான முன்னோடிக் கூட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு அலுவலக கட்டடத்தில் 2018.10.01 அன்று மாலை 02.30 மணிக்கு நடைபெறும். இக் கூட்டத்தில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்தச்செலவில் கலந்துகொள்ள முடியும்.
12. சமர்ப்பிக்கப்பட்ட கேள்விகளை முழுமையாகவோ அல்லது பகுதியாக நிராகரிக்கவோ, மீள்கேள்விகோரவோ பெறுகைக்குழு தலைவருக்கு அதிகாரம் உண்டு.

**தலைவர்,**
**பிரதேசசபை பெறுகைக்குழு**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு**
**2018.09.20**

(in.7889) (13)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 13 . 10 . 1962 — மறைவு 22 . 08 . 2018



எமது பாடசாலையின் நடன ஆசிரியை
செல்வி ந.தர்சிகா அவர்களின் பாசமிகு தந்தையார்

**அமரர் நல்லையா நமணிதாஸ்**

அவர்கள் 22.08.2018 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்
மு/குரவில் தமிழ் வித்தியாலம், உடையார்கட்டு

## 31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 19 . 11 . 1988 — மறைவு 23 . 08 . 2018



**அமரர் செல்வி கனகலிங்கம் கார்த்திகா**
(கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் – மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம்)

கடந்த 23.08.2018 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்ப குலவிளக்கு கனகலிங்கம் கார்த்திகா அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (22.09.2018) சனிக்கிழமை அவரது இல்லத்தில் முற்பகல் 11 மணியளவில் நடை-பெறவுள்ளதால் அத்தருணம் தாமும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**


**மட்டுவில் தெற்கு,**
**சாவகச்சேரி.**

(ACH/496)(11)

**குடும்பத்தினர்.**
**077 700 4822**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 21 . 04 . 1957 — உதிர்வு 22 . 08 . 2018



**அமரர் தம்பிப்பிள்ளை ஜெகநாததாசன்**
**(நாதன்)**
**(சுன்னாகம் பல நோ.கூ.சங்க முன்னாள் ஊழியர்)**

கடந்த 21.08.2018 இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவர் தம்பிப்பிள்ளை ஜெகநாததாசன் அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டும் தொலைபேசி மற்றும் முகநூல் மூலமாக அஞ்சலி செலுத்தி அனுதாபங்கள் தெரிவித்த அனைவருக்கும், எமக்கு சகல வழிகளிலும் உதவி செய்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

அத்துடன் அன்னாரின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**சுன்னாகம் மேற்கு,**
**கொத்தியாவத்தை.**

(CS/19922)(11)

**குடும்பத்தினர்.**

# யா/கைதடி குருசாமி வித்தியாலயம்
## நூற்றாண்டு விழா சிறப்பு மலர்
## 1918-2018

**100 Years Anniversary**



### ஆசியுரை

தந்தைக்கு குருவாக உபதேசம் செய்த குருஸ்சுவாமி ஆலயங்களின் நடுவே அமைந்துள்ள குருசாமி வித்தியாலயம் நூறு ஆண்டுகளாக எமது பிரதேச மாணவர்களுக்கு கல்வி விழுமியங்கள், ஒழுக்க நெறிகளை வழங்கிக்கொண்டு இன்று நூற்றாண்டிலே தடம்பதிக்கும் வேளையில் ஆசியுரை வழங்குவதில் பேருவகை அடைகிறேன்.

குருசாமிக்குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலை வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு போற்றப்பட்டு வருவதுடன் சமூகம், எதிர்பார்க்கும் நற்பிரஜைகளை உருவாக்கி பல சாதனைகளையும் புரிந்து வருவதற்கு அன்று தொட்டு இன்றுவரை சேவையாற்றிய சேவை யாற்றுகின்ற அதிபர், ஆசிரியர்களையும் பாடசாலைச் சமூகத்தினரையும் பாராட்டுவதுடன் நல் ஆசிகளையும் எல்லாம் வல்ல கயிற்றசிட்டி முருகனின் தாழ் வணங்கி வழங்குகின்றேன்.

"வாழ்க குருசாமி வித்தியாலயம்"

**பிரம்மஸ்ரீ கணேசக்குருக்கள்**
**கயிற்றசிட்டி கந்தன்**
**தேவஸ்தானம்.**







### ஸ்தாபகர் பரம்பரை ஆசிச்செய்தி

கைதடி குருசாமி வித்தியாசாலை பாடசாலை சமூகத்தினரால் கொண்டாடப்படும் நூற்றாண்டு விழாவிற்காக சிவஸ்ரீ யோகா – குருசாமிக் குருக்கள் வழங்கிய வாழ்த்து உரைகள் - குருசாமி வித்தியாசாலை எமது பேரன் அமரர் சிவஸ்ரீ இராமசேதுகுருக்கள் குருசாமிக் குருக்களால் ஸ்தாபிக்கப்பட்டது. குருசாமிக்குருக்கள் கல்வி வளர்ச்சிக்காக இந்த பாடசாலையை ஆரம்பித்து கல்வித் தாய்க்கு அளப்பெரும் பணியை ஆற்றியுள்ளார். இவர் பல பாடசாலைகளை வன்னி, முல்லைத்தீவு தனங்கிளப்பு ஆகிய பல இடங்களில் ஸ்தாபித்து கல்வியை வளர்த்துள்ளார். ஸ்கந்தபுராண படிப்பை பல மாணவர்களுக்கு பொருள் கூறுவதற்கு பயிற்றுவித்துள்ளார். இவரது புத்திரர் எமது தந்தையாராகிய சிவஸ்ரீ யோகானந்த ஈஸ்வரக் குருக்கள் 1928 ஆம் ஆண்டளவில் இந்த பாடசாலைகளை சைவ ஐக்கிய சங்கத்தோடு இணைந்து நடத்தி பின்பு இந்து போர்ட் நிறுவனத்திடம் நடத்துவதற்கு கொடுத்துள்ளார்.

இத்தகையை மாபெரும் மகான் சிவஸ்ரீ குருசாமிக் குருக்களால் ஆரம்பித்து வ்ளர்க்கப்பட்ட குருசாமி வித்தியாசாலை பல நூற்றாண்டு காலம் வாழ்க என ஸ்ரீ சண்முகப்பெருமான் துணையோடு இனிமையாக வாழ்த்துகின்றோம்.

வாழ்க குருசாமி வித்தியாசாலை

**யோகா - குருசாமிக்குருக்கள்**
**கைதடி.**




### பாடசாலை வரலாறு

இயற்கை எழில் கொஞ்சும் கைதடிக்கிராமமானது சைவமும் தமிழும் தழைத்தோங்கும் வகையில் காணப்படுகின்ற ஒரு அழகிய கிராமமாகும். இக்கிராமத்திலே யா/ கைதடி குருசாமி வித்தியாலயம் கைதடி வடக்கு கயிற்றசிட்டி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் 1918 ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ ஆர்.கே. குருசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்டது.

ஆரம்பத்தில் திரு.மு. அப்பாக்குட்டி அவர்களும் திரு.எஸ். பொன்னையா அவர்களும் திரு. தியாகர் இளையதம்பி அவர்களும் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டனர்.

இப்பாடசாலையானது கைதடி வடக்கு கயிற்றச்சிட்டி கந்தசுவாமி கோயிலுக்கு அருகில் அமைக்கவேண்டும் என்பது குருக்களின் விருப்பமாக இருந்தது.

இப்பாடசாலைக்குரிய இடத்தினை 1918 ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் விஜயதசமி நாளன்று புதிய கொட்டில் ஒன்றை மாணவர் கல்விக்கூடமாக்கி திரு. மு. அப்பாக்குட்டி ஆசிரியர் அவர்களின் திருமுறை ஓதுதலோடு மாணவர்களின் கல்வியை ஆரம்பித்து வைத்து ஆசிகளும் வழங்கினார்.

1921 ஆம் ஆண்டு அரசாங்கத்தினால் பதிவு செய்யப்பட்டது.

ஆரம்பத்தில் வகை மூன்று பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டு 1959 ஆம் ஆண்டில் இருந்து வகை இரண்டு பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு இன்றுவரை தரம் 1 – 11 வரையான வகுப்புக்களைக்கொண்டு இயங்கிக்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. தற்போது தரம் 5 தரம் 11 பரீட்சைப்பெறுபேறுகள் வருடா வருடம் சிறந்த சித்திவீதத்தை காட்டிநிற்கின்றன மற்றும் இணைபாடவிதானச் செயற்பாடுகளிலும் சாதனைகளைப் பெற்றவருகின்றமை குறிப்பிடத்தக்கது.



### Message from the Governor, Northern Province for the Centenary celebration of J/Kaithady Gurusamy Vidyalayam

It gives me great pleasure to present this message to the centenary magazine, being published to mark the centenary celebration of J/Kaithady Gurusamy Vidyalayam, Kaithady North, Kaithady, one of the oldest Type IT Schools in Jaffna.

J/Kaithady Gurusamy Vidyalayam was founded by Brahmashri R.K.Gurusami Kurukkal in 1918

Kaithady Gurusamy Vidyalayam has achieved a number of success in curricular and co curricular activities in the recent years. Dedicated leadership of the present and former Principals and commitment of their teaching staff have enabled the Vidyalayam to achieve the success.

At the centenary celebration of the school, I congratulate the school – community including past and present principals, teachers, pupils, parents of them and well – wishers for their great effort of bringing up the school to its upliftment as a competent school in North.

On this happy occasion, I wish them for a successful future.

**Reginald Cooray**
**Governor**
**Northern Province**



### வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்க இயற்கை எழில் கொஞ்சுகின்ற கிராமமாக விளங்குகின்ற கைதடிக் கிராமத்தில் அமைந்துள்ள யா/ கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு நிறைவு விழாவுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றை வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

அக்காலத்தில் எமது பெரியோர்கள் நிதி வளம் குன்றிய நிலையிலும் சிறுசிறு கொட்டில்களை அமைத்து எமது மாணவர்களுக்கு கல்வியறிவு மேம்படச் செய்ய வேண்டும் என்ற உயரிய சிந்தனையின் கீழ் உருவாக்கப்பட்ட பாடசாலைகளே இன்று மிகக் கூடுதலாக எம்முன்னே காட்சியளிக்கின்றன. அன்று வறுமையிலும் கல்வி புகட்டலுக்கு முதலிடம் வழங்கப்பட்டது. அதன் பயனாக வட பகுதி மக்கள் கல்வி கேள்வி அறிவுகளில் மிகச்சிறந்து விளங்கினார்கள். ஆனால் இன்று வசதிகள் அதிகரித்தும் கல்வி அடைவு மட்டங்கள் தாழ்ந்து போவது எமக்கு வருத்தமளிக்கின்றது.

"கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே" என்ற முதுமொழிக்கிணங்க எமது பிள்ளைகளைக் கல்வியறிவுகளில் மேம்பட்டவர்களாக ஆக்குவதற்கு அல்லும் பகலும் உழைத்துக் கொண்டிருக்கின்ற கல்விக் கூடங்கள் வழிபாட்டுத் தலங்களுக்கு ஒப்பாக வழிபாட்டுக்குரியன. அவை மேம்பட வேண்டும் என்று பிரார்த்திப்போமாக.

அந்தவகையில் நூற்றாண்டு நிகழ்வுகளை விமர்சையாக முன்னெடுக்கின்ற யா/கைதடி குருசாமி வித்தியாலய நூற்றாண்டு விழாக்கள் சிறப்புற அமைய எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக. இறைவன் ஆசிகள் உங்கள் அனைவருக்கும் என்றென்றும் கிடைப்பதாக.

**நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்,**
**முதலமைச்சர்,**
**வடமாகாணம்.**



### நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துக்கள்

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கைதடிக் கிராமத்தில் சைவப்பாரம்பரியத்தை வளர்க்கும் நோக்கில் 1918 ஆம் ஆண்டில் பிரம்மஸ்ரீ ஆர்.கே.குருசாமிக் குருக்களால் ஆரம்பிக்கப்பட்ட கைதடி குருசாமி வித்தியாலயம் கல்வித் துறையிலும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் பல்வேறு சாதனைகளை நிலைநாட்டி இன்று தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுவதையிட்டு எனது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

2018 ஆம் ஆண்டில் தனது நூற்றாண்டு விழாவைக் கொண்டாடுகின்ற இந்த நேரத்தில் கல்லூரியின் வளர்ச்சிக்காக அர்ப்பணிப்புடன் சேவையாற்றிவரும் அதிபர், பகுதித் தலைவர் கள், ஆசிரியர்கள், பெற்றோர் மற்றும் பழைய மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்டுவதுடன் நூற்றாண்டு விழா சிறப்புற வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்**



### வாழ்த்துச் செய்தி

யா/கைத்டி குருசாமி வித்தியாலயம் தனது அதியுயர் கல்விப் பணியில் நூற்றாண்டை எய்தியதையிட்டு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1918 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வித்தியாலயத்தின் கல்விப்பணி இன்றுவரை குறைவின்றி தொடர்வதற்கு எல்லாம் வல்ல கயிற்றசிட்டிக் கந்தப் பெருமானின் அருளும், அர்ப்பணிப்பு மிக்க அதிபர், ஆசிரியர்கள் மற்றும் சமூக நலன் விரும்பும் பெரியோர்களது சேவையுமே காரணம் என்பது எனது நம்பிக்கை. இப்பாடசாலையில் கல்விப் பணியில் மாணவர்கள் பல்வேறு சாதனைகளைப் புரிய எல்லாம் வல்ல கந்தப் பெருமானின் திருவடி தொழுது நிற்கின்றேன். நூற்றாண்டு விழா நிகழ்வுக்கும் வெளியிடப்படும் இம்மலருக்கும் உழைத்த அனைத்து நல் உள்ளங்களையும் பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

**சுப்பிரமணியம் சுந்தரசிவம்**
**வலய்க்கல்விப் பணிப்பாளர்**
**தென்மராட்சி கல்வி வலயம்**



### வித்தியாலய முதல்வரின் வாழ்த்துச் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும் கைதடிப் பிரதேசத்திலே நூற்றாண்டு விழாக்காணும் யா/ கைதடி குருசாமி வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாத் தலைவரும், பாடசாலையின் முதல்வரும் என்ற வகையில் நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இப்பாடசாலையின் வளர்ச்சி வேராக நின்ற ஸ்தாபகர் பரம்பரையினரையும் ஆரம்ப காலம் தொட்டு பணி புரிந்த அதிபர்கள், ஆசிரியர்களின் அர்ப்பணிப்பான சேவையால் நிமிர்ந்து நிற்பதையும் அத்துடன் இப்பாடசாலையின் பெற்றோர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் அனைவரது தன்னலமற்ற சேவையைப் பாராட்டுவதுடன் இவ்வித்தியாலயமானது பலநூற்றாண்டு காலம் கல்விப் பணியில் சிறந்து விளங்க வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

வாழ்க வளமுடன் குருசாமி வித்தியாலயம்
வாழிய வாழியவே

**அதிபர் - ந.ஜெயரூபன்**
**யா/கைதடி குருசாமி வித்தியாலயம்.**

(Sup/35591) (10)

# மணிவிழா காணும் நாயகனை உளமார பாராட்டி வாழ்த்துகின்றோம்



வடமராட்சி கல்வி வலய ஆங்கில பாட உதவிக் கல்வி பணிப்பாளராக பணியாற்றி
மணிவிழா காணும் நாயகன்

## ஐயாத்துரை செல்வராஜா

அவர்களை உளமார பாராட்டி வாழ்த்துகிறோம்.
**கந்தளாய் பேராறு பரமேஸ்வரா வித்தியாலயத்தில்**
ஆரம்பித்து
**கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு அ. த. க. பாடசாலையில்**
பணியைத் தொடர்ந்து
**நெல்லியடி மத்திய கல்லூரியில்**
20 வருடங்கள் சேவையாற்றி
**வடமராட்சி கல்வி வலய**
**ஆங்கில பாட சேவைக்கால ஆசிரிய ஆலோசகராக**
கடமையேற்று
அதே கல்வி வலயத்தில் பதவி உயர்வு பெற்று
5 வருடங்களாக
**உதவி கல்வி பணிப்பாளராக**
பணியாற்றி
நல்ல ஆசானாகவும் ஆளுமை மிக்க அதிகாரியாகவும்
பண்புள்ள மனிதநேயம் கொண்ட
மணிவிழா நாயகன்
பல்லாண்டு காலம் நலமுடன் வாழ
மனமகிழ்ந்து வாழ்த்துகிறோம்




**செல்லமுத்தூஸ் புடைவை மாளிகை**
**நெல்லியடி.**

## மரண அறிவித்தல்

# பாலசிங்கம் லிங்கநாதன்

(உரிமையாளர், வசந்தம் பார்மசி, யாழ்ப்பாணம்)



வேலணை வங்களாவடியைப் பிறப்பிடமாகவும் 50/45, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பாலசிங்கம் லிங்கநாதன் நேற்று (20.09.2018) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் சிவபாக்கியம் தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான நாகராஜா இரத்தினாம்பாள் தம்பதியரின் அன்புமருமகனும் விமலாதேவியின் (வசந்தா) அன்புக் கணவரும் காலஞ்சென்ற கமலாதேவி மற்றும் மகேந்திரன் (பிரான்ஸ்), சுந்தரம், சந்திராவதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச்சகோதரரும் காலஞ்சென்ற சோமசுந்தரம் மற்றும் தர்மராணி, மைதிலி, நாகேஸ்வரன், புஸ்பலீலாவதி, சிறீஸ்க்ந்தராஜா ஆகியோரின் அன்பு மைத்துனரும் தற்பரானந்தம், ஜெகதாம்பிகை ஆகியோரின் உடன்பிறவாச்சகோதரரும் வதனா (ஆசிரியை, யா/ சென்ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), ராஜினி (ஆசிரியை, கொ/ சைவ மங்கையர் வித்தியாலயம்), பிறேமா, ரதினி (ஆசிரியை, யா/கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம்), பிறேமினி (கனடா), அகிலன் (Director, Sri Vasantham Engineering), அஜந்தினி ஆகியோரின் அன்புத்தந்தை யும் ரகுநாதன் (கணக் காளர் யா/மாவட்ட செயலகம்) தர்ம சொரூபன்(Exective Officer, Laboratory equipment Company Col 01) இளங்கீரன் (Project Manager, Access Project Pvt Ltd) , உதயணன் (மாதவா ஸ்ருடியோ), லோகீசன்(Technical Advicer Government of Canada), Dr.சுஜித்தா (யா/ போதனா வைத்தியசாலை), சிவநேசன் (உதவி ஆணையாளர் உள்நாட்டு இறைவரி திணைக்களம்) ஆகியோரின் அன்பு மாமனும் ஶ்ரீகாயத்ரி, துவாரகன், துளசிகன், மதுர்ஷிகா, நாமகி, புகழ், கதிரோன், தனிஸ்கன், தனிஸ்கா, அவிரோன், பிரனேஸ் ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (23.09.2018) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**50 /45, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல் : குடும்பத்தினர்**
**021 222 6268, 077 225 2944**


# 1st time in Jaffna

JETEX 2018
SEPTEMBER 23 24 25

## Jaffna International Education & Job Fair

யாழ் நகரில்
உயர் கல்வி மற்றும் தொழில்
சார்பான கண்காட்சி
முற்பகல் 10 மணிமுதல் இரவு 8 மணிவரை




**Organizing by:- CJ Promoters**

AFTER A/L?



More deatils
077 254 6511 / 071 133 0431 Prasannaraj

**Place**
**Kokkuvil Celva Palace**
(Fully Air condtion)

மேலதிக தவல்களுக்கு:
Prasannaraj - 077 254 6511

ஊடக அனுசரணை:- உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
Uthayan - National Tamil Daily

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 700 | 1000 | 1000 | 1000 |
| நண்டு | 500 | 500 | 600 | 600 |
| கணவாய் | 800 | 900 | 1000 | 1000 |
| பாரை | 700 | 950 | 800 | 1100 |
| சுறா | 700 | 900 | 1200 | 1200 |
| சீலா | 400 | 500 | 700 | 400 |
| விளை | 600 | 500 | 700 | 700 |
| முரல் | 400 | 400 | 600 | 500 |
| கும்பிளா | 400 | 350 | 500 | 300 |
| கிளக்கன் | 800 | 400 | 600 | 600 |
| ஒரா | 400 | 500 | 600 | 500 |
| திரளி | 300 | 300 | 300 | 250 |
| நகரை | 250 | 300 | 300 | 250 |
| சூடை | 100 | 150 | 200 | 150 |
| ஒட்டி | 300 | 300 | 400 | 400 |
| திருக்கை | 300 | 300 | 500 | 400 |
| மதனம் | 150 | 300 | 250 | 300 |
| கொய் | 200 | 100 | 100 | 100 |
| பாலை | 100 | 200 | 200 | 300 |
| வாளை | 200 | 300 | 500 | 200 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | சுன்னாகம் | மருதனார்மடம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|
| கத்தரி | 80 | 70 | 100 | 100 |
| முள்ளங்கி | 80 | 60 | 80 | 120 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 |
| பயிற்றை | 100 | 80 | 120 | 100 |
| பாகல் | 160 | 180 | 140 | 170 |
| க.கிழங்கு | 100 | 120 | 80 | 120 |
| பெ.வெங்காயம் | 100 | 120 | 100 | 110 |
| சி.வெங்காயம் | 100 | 80 | 120 | 110 |
| பூசணி | 50 | 60 | 60 | 60 |
| தக்காளி | 100 | 120 | 60 | 120 |
| வாழைக்காய் | 70 | 80 | 100 | 80 |
| கீரை | 20 | 30 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 40 | 35 | 35 | 40 |
| ப.மிளகாய் | 120 | 160 | 140 | 180 |
| புடோல் | 110 | 80 | 80 | 100 |
| கோவா | 150 | 100 | 140 | 160 |
| வெண்டி | 100 | 80 | 60 | 80 |
| போஞ்சி | 120 | 200 | 140 | 250 |
| லீக்ஸ் | 150 | 120 | 120 | 180 |
| தேங்காய் | 70 | 50 | 70 | 70 |
| உ.கிழங்கு | 100 | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 70 | 60 | 60 | 50 |
| வல்லாரை | 20 | 40 | 15 | 20 |
| கறிமிளகாய் | 120 | 120 | 120 | 120 |
| கரட் | 280 | 300 | 180 | 180 |
| முருங்கைக்காய் | 100 | 100 | 50 | 80 |


## வீடு வாடகைக்கு

நல்லூரில் வீட்டு உரிமையாளரான
பெண் ஆசிரியையுடன் சேர்ந்து
இருக்கக்கூடிய நடுத்தரவயதுடைய
பெண்கள் இருவருக்கு வீடு
வாடகைக்குண்டு.
(சகல வசதிகளும் கொண்டது)

**தொடர்பு - 077 136 5900**



## A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான விசேட ஆங்கிலப் பாடநெறி

**DIPLOMA IN ENGLISH with PERSONALITY DEVELOPMENT**

(06 மாதங்கள்)

ஆரம்பம் : 22.09.2018 மதியம் 12.30 மணி
(வார இறுதி நாட்களில்
நடைபெறும் பாடநெறி)

வடக்கு மாகாணத்தில் பல்லாயிரக்கணக்கான
மாணவர்களின் ஒரே தெரிவு

**E-CITY COLLEGE OF ENGLISH & IT SKILLS DEVELOPMENT**

இல. 372D, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
( வீரமாகாளிஅம்மன் கோவில் அருகில் )

Tel : 0212217106 / 0770610271
0773400418 / 0774924166

web: www.ecitycollege.lk


## மரண அறிவித்தல்கள்

### செல்வன் நவநீதராசா வரதன் (நிக்ஷன்)



மீசாலை வடக்கு, கொடிகாமத்தினைப் பிறப்பிடமாகவும். வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் நவநீதராசா வரதன் (நிக்ஷன்) கடந்த (19.09.2018) புதன்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் நவநீதராசா சரஸ்வதி தம்பதியரின் அன்புமகனும் நிறோசன், தனுசியா ஆகியோரின் அன்புச்சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மீசாலை வடக்கு,**
**கொடிகாமம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

### கந்தையா வேலாயுதம்



பொலிகண்டியை பிறப்பிடமாகவும் இரும்புமதவடியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா வேலாயுதம் நேற்று (20.09.2018) வியாழக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதிகளின் மூத்த புதல்வரும் தர்மலிங்கம் - தங்கமுத்து தம்பதிகளின் அன்பு மருமகனும் ஜெயதேவியின் பாசமிகு கணவரும் வேலும்மயிலும், கணேஷ் மற்றும் கண்மணி, சுந்தரவதனா ஆகியோரின் மூத்த சகோதரனும் காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், ஜீவானந்தம், சுகிர்தலோஜினி மற்றும் ஜெயாணந்தம், திருச்செல்வம், தவதேவி, பரமேஸ்வரி, செல்வதி ஆகியோரின் அன்பு மைத்துனரும் வேல்தாசன், மகிழினி ஆகியோரின் பெரிய தந்தையும், அபர்ணா, அமுதா, சுகந்தி, ராஜ்குமார், மைதிலி ஆகியோரின் பாசமிகு பெரிய மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


**"கணவதி வாசா"**
**இரும்புமதவடி, வதிரி, கரவெட்டி.**
**0212261388**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
## பண்டத்தரிப்பு பட்டின சபை உல அலுவலகம் பண்டத்தரிப்பு
## ஆதனப்பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம் :- 06**
**ஆதன இல :- 29/4**
**வீதி :- பிள்ளையார் கோயில் முதலாம் ஒழுங்கை**
**கிராம சேவையாளர் பிரிவு :- J/145**

வட்டாரம் 06, பிள்ளையார் கோயில் முதலாம் ஒழுங்கை, உத்தேச ஆதன இல. 29/4 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி சங்கானை கோவில் பற்று, சங்கானை இறை J/145 கிராமசேவகர் பிரிவில் உள்ள **"கரந்தன்"** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு $2\frac{1}{2}$ கொண்ட இவ்வாதனம் வடலியடைப்பைச் சேர்ந்த இராசதுரை சசீந்திரன் அவர்களால் சங்கானை, நிற்சாமம், விக்னேஸ்வரா வீதியைச் சேர்ந்த ஐயாத்துரை ஜெயக்குமார் அவர்களுக்கு அறுதி உறுதி மூலம் பிரசித்தி பெற்ற நொத்தாரிஸ் இ.சபேசன் அவர்கள் முகதாவில் நிறைவேறிய 1692 இலக்க 20.12.2007 ஆம் திகதிய உறுதி மூலம் தமக்குச் சொந்தம் எனத் தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளார். நில அளவையாளர் திரு S.பாலலேந்திரன் அவர்களால் வரையப்பட்ட 1520 ஆம் இலக்க 2017.12.12 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனமானது **"கரந்தன்"** நிலப்பரப்பு $2\frac{1}{2}$ கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர்மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்-தருமாறும் அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது ஐயாத்துரை ஜெயக்குமார் என்னும் பெயருக்குப் பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்டும் என்பதை அறியத்தருகின்றேன்.




**திரு.அ.ஜெபநேசன்**
**தவிசாளர்**
**வலி.தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(CS/19936) (11)

## மரண அறிவித்தல்கள்

### ஆறுமுகம் சுதாகரன்



கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைப்பிறப்பிடமாகவும்வதிவிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சுதாகரன் நேற்று (20.09.2018) வியாழக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் மற்றும் கமலாவதி தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற பாலசுந்தரம் மற்றும் கனகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், தயாநிதியின் (ஆசிரியை -மு/வள்ளிபுனம் மகாவித்தியாலயம்) அன்புக் கணவரும், ரசிகா, கோபிசன் ஆகியோரின் அன்புத் தந்தையும், கலைச்செல்வி (கனடா), கலையரசி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS/19944)(11)

**தகவல் குடும்பத்தினர்.**

### சின்னர் வாமதேவன் (வேலையா)



சுன்னாகம் சூராவத்தையைப் பிறப்பிடமாகவும் ஏழாலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னர் வாமதேவன் நேற்றுமுன்தினம் (19.09.2019) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னர் - வள்ளி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - எள்ளுப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மருமகனும், கண்மணியின் அன்புக் கணவரும், ரவி, ரஜனி, ரமனி, ரகு ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தியாகு - 077 628 3902**
**வரதன் - 077 178 6492**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

(cs.19942) (13.17)

# வாள்வெட்டில் ஒருவர் படுகாயம்

வவுனியா, செப்.21

வவுனியா, எல்லப்பர் மருதங்குளம் பகுதியில் உள்ள பிள்ளையார் கோவிலில் நேற்று இரவு 9 மணியளவில் இளைஞர்களுக்கு இடையே ஏற்பட்ட வாள்வெட்டின் காரணமாக ஒருவர் படுகாயமடைந்து வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

எல்லப்பர் மருதங்குளத்தைச் சேர்ந்த கணேஸ் தம்பா (வயது-21) என்ற இளைஞரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ற-110)

## அரசியல்...

கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. யாழ்ப்பாணம் நகர பேருந்து நிலையத்துக்கு எதிரில் இந்தப் போராட்டம் நடைபெறும் என்று, சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு தெரிவித்துள்ளது.

தமிழ் அரசியல் கைதிகள் 8 பேர் கடந்த வெள்ளிக்கிழமையிலிருந்து உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அனுராதபுரம் சிறைச்சாலையில் போராட்டத்தை முன்னெடுக்கும் கைதிகளுக்கு ஆதரவாக இந்தப் போராட்டம் யாழ்ப்பாணத்தில் இன்று நடைபெறவுள்ளது. வவுனியாவில் நாளை போராட்டம் நடத்தப்படவுள்ளது. (ற-5)

## தமிழர்கள்...

றில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

போட்டிப் பரீட்சை நடத்தப்பட்டு ஒரு வருடம் கழிந்த பின்னர் பரீட்சையில் மோசடி நடந்துள்ளது என்று கூறிப் பரீட்சையை இரத்துச் செய்வது நியாயமற்றது. அது தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபை முதல்வர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

நேற்றுக் கூடிய நாடாளுமன்றின் வாய் மூல விடைக்கான கேள்வி நேரத்தில் மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் இந்த விடயத்தைச் சபையின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.












அவர் தெரிவித்தாவது

நிர்வாக சேவைக்குப் போட்டிப்பரீட்சை நடத்தப்பட்டுள்ளது. அதில் சித்தியடைந்த 59 பேருக்கு நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக்களும் விடுக்கப்பட்ட பின்னர் பரீட்சையின் போது மோசடி நடைபெற்றுள்ளது என்று கூறி பரீட்சை இரத்துச் செய்யப்படுகின்றது என்று அறிவித்துள்ளனர்.

பரீட்சையில் சித்தியடைந்த 59 பேரில் சிங்களவர்கள் எண்ணிக்கை மிகவும் குறைவாக உள்ளது. சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிகளவில் சித்தியடைந்த காரணத்தால் இந்தப் பரீட்சையை அரசு இரத்துச் செய்கின்றது என்று கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. இது இன நல்லிணக்கத்துக்கும் பாதிப்பாக அமைகிறது. எனவே பரீட்சையை இரத்துச் செய்வதாக இருந்தால் பரீட்சை மோசடிக்குக் காரணமாகவிருந்த அதிகாரிகள் உள்ளிட்டவர்களுக்கு தண்டனை வழங்கிவிட்டு பரீட்சையை இரத்துச் செய்ய வேண்டும் என்றார்.

இதன்போது ஒழுங்குப் பிரச்சினை எழுப்பிய தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எ.சுமந்திரன் தெரிவித்தாவது

இந்த விவகாரத்தில் கவனம் செலுத்துவது அவசியமானது. இன ரீதியான பாகுபாடாகவே இந்த விவகாரம் பார்க்கப்படுவதாக நாம் கருதுகின்றோம். அரச நிர்வாக சேவைக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட 59 பேரில் 21 பேர் வடக்கைச் சேர்ந்தவர்கள் என்பதால் போட்டிப் பரீட்சையில் மோசடி நடைபெற்றுள்ளது என்று கூறிப் பரீட்சையை இரத்துச் செய்துள்ளனர். பரீட்சை நடைபெற்று ஒரு வருடம் கழிந்த பின்னர் இவ்வாறு அறிவிக்கின்றனர். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் அரச கணக்காளர் சேவைப் போட்டிப் பரீட்சையிலும் இவ்வாறான நிலைமை காணப்பட்டது.

இனரீதியான பாகுபாடு காண்பிக்கப்படுகிறது என்ற சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பாடுகள் காணப்படுகின்றன. அது மாத்திரமன்றி பரீட்சைகள் யாவும் கொழும்பில் நடத்தப்பட்டுள்ளன. தற்போது கூறுவதைப்போல் பரீட்சை மோசடி நடைபெற்றிருந்தால் பரீட்சை நடைபெற்ற உடனேயே அதை இரத்துச் செய்திருக்க வேண்டும். பரீட்சை முடிந்து ஒரு வருடத்தின் பின்னர் அதனை இரத்துச் செய்வது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. என்றார்.

இவற்றுக்குப் பதிலளித்த சபை முதல்வர் அமைச்சர் லக்ஷமன் கிரியல்ல தெரிவித்தாவது

இந்த விடயம் உள்நாட்டு அமைச்சரின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்படும். பரீட்சை முடிவடைந்து ஒரு வருடத்தின் பின்னர் அதனை இரத்துச் செய்வது நியாயமற்றது என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அதற்கு எதிராக நீதிமன்றம் சென்றால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படும். அதனால் அரசு இந்த விடயத்தில் சரியான தீர்மானம் எடுக்கும் - என்றார். (ற-31)

## ஆவா...

பாண மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்சன ஹெட்டியாஆராச்சி தெரிவித்துள்ளார். பலாலி இராணுவ தலைமையகத்தில் நேற்று நடத்தப்பட்ட ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

நாட்டில் தற்போது சட்டம் ஒழுங்கு என்பன பொலிஸாரிடம் உள்ளன. அவற்றில் நாம் தலையிடுவதில்லை. யாழ்ப்பாணத்தில் உள்ள ஆவா குழு போன்ற குழுக்களை அடக்குவது எமக்குப் பெரிய சவால் இல்லை. இரண்டு நாளுக்குள் அடக்கி விடுவோம். பொலிஸார் இராணுவத்தின் உதவியை நாடினால் உதவ நாம் தயாராக உள்ளோம். தற்போதைய சூழ்நிலையில் வன்முறையில் ஈடுபடும் இளைஞர்களை இராணுவத்தினர் கைது செய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தால், இராணுவம் தமிழ் இளைஞர்களைக் கைது செய்கிறார்கள் என இராணுவத்தின் மீது குற்றச்சாட்டுக்களை முன் வைப்பார்கள். அதனால் பொறுமையாக இருக்கின்றோம். அதற்காக தொடர்ந்து இவ்வாறான வன்முறைச் சம்பவங்களை நாம் பொறுமையாகப் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

யாழ்ப்பாணத்தில் நடக்கும் வன்முறைகளைக் கட்டுக்குள் கொண்டுவர இராணுவத்தினருக்கு அனுமதியளிக்க வேண்டும் என அரச தலைவரிடம் கோரியுள்ளோம் . அதற்கான அனுமதிக்காகக் காத்திருக்கிறோம் .

நாட்டின் ஏனைய பாகங்களில் தனிநாட்டுக் கோரிக்கையுடன் ஆயுத அமைப்புக்களோ. போராட்டங்களோ தோற்றம் பெறவில்லை. வடக்கில் தான் அவ்வாறு தோற்றம் பெற்றது. மீண்டும் அவ்வாறான அமைப்புக்கள் போராட்டங்கள் தொடர கூடாது என்பதால் தான் இராணுவம் வடக்கில் அதிகளவில் நிலை கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் பல ஏக்கர் காணிகளை மீள அதன் உரிமையாளர்களிடம் கையளித்து வருகின்றோம். இன்னமும் கையளிக்க உள்ளோம்.

யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியை இராணுவத்தினருக்குக் கையளித்தால் யாழ்ப்பாணத்தில் உள்ள இராணுவத்தினர் அங்கு நிலை. கொண்டு ஏனைய பகுதிகளை அதன் உரிமையாளர்களிடம் கையளிக்கத் தயாராக உள்ளோம் - என்றார். (ற-21,37)

## வீதியில்...

இந்தத் திடீர்ப் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோயிலுக்கு முன்பாக சுமார் இரு மணி நேரம் இந்தச் சோதனைகள் நடைபெற்றன. சுமார் 50க்கு மேற்பட்ட வாகனங்கள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

புகைப் பரிசோதனையிலும், தரப் பரிசோதனையிலும் தோல்வியடைந்த வாகனங்களின் சாரதிகளின் சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொண்டு வாகனத்தில் உள்ள குறைபாடுகள் குறிப்பிடப்பட்டு துண்டறிக்கை வழங்கப்பட்டது. குறைபாடுகளை திருத்தம் செய்து சாரதி அனுமதிப் பத்திரத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

முச்சக்கர வண்டிகள் மறிக்கப்பட்டுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதுடன், அவற்றில் பொருத்தப்பட்டிருந்த அலங்காரப் பொருள்கள், மேலதிக உபகரணங்களை அகற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டது.

காங்கேசன்துறை வீதியில் சுமார் இரு மணி நேரம் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையில் 50க்கும் மேற்பட்ட வாகனங்கள் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டன. ஒரு இ.போ.ச. பேருந்து மட்டும் சோதனைக்குட்படுத்தப்பட்டது. அந்தப் பேருந்தில் சமிக்ஞை விளக்கு, ரயர் போன்றவற்றிலும், புகை வெளியேற்றத்திலும் குறைபாடுகள் இருந்ததை அடுத்து அதற்கான படிவம் வழங்கப்பட்டு, அவற்றைத் திருத்துவதற்கு அவகாசம் வழங்கப்பட்டது.

திடீரென மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கைக்கு மக்கள் பலரும் அதிருப்தி வெளியிட்டனர். வாகன வரிப் பத்திரம் பெறப்படும் போது புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது. ஓராண்டுக்கு ஒரு முறை அது புதுப்பிக்கப்படுகின்றது. அதற்கு மேலதிகமாக மாதாந்தம் புகைப் பரிசோதனை மேற்கொள்ள முடியுமா? என்று மோட்டார் சைக்கிளில் பயணித்த மக்கள் கேள்வி எழுப்பினர்.

வீதிகளில் பயணிக்கும் தனியார் வாகனங்களே மறித்துச் சோதனையிடப்படுகின்றன என்றும், அரச மற்றும் பாதுகாப்புத் தரப்பின் வாகனங்கள் சோதனைக்குட்படுத்தப்படுவதில்லை என்றும் மக்கள் குற்றஞ்சாட்டினர்.

இது தொடர்பில் பரிசோதனையில் ஈடுபட்டவர்களிடம் கேட்டபோது, வீதியில் பயணிக்கும் அனைத்து வாகனங்களும் பாரபட்சமின்றிச் சோதனைக்குட்படுத்தப்படும். அவற்றில் குறைபாடுகள் இருந்தால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தனர். (ற-105)

## அரசியல் கைதிகள்...

தலைவர் இரா.சம்பந்தன் நேற்று அரச தலைவர் மைத்திரிபாலவுடன் பேச்சு நடத்தியுள்ளார்.

அநுராதபுரம் சிறைச்சாலையில் உணவு ஒறுப்பில் ஈடுபட்டுள்ள அரசியல் கைதிகளின் நிலைமை தொடர்பாக அரச தலைவருக்கு விளக்கமளித்த எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அனைத்து அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

திருகோணமலையில் கோமரங்கடவல பிரதேசத்தில் அமைக்கப்பட்ட யானைப் பாதுகாப்பு வேலி நேற்று திறக்கப்பட்டது. அந்த நிகழ்வில் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவும், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனும் கலந்துகொண்டனர். நிகழ்வின் பின்னர் உலங்குவானூர்தியில் கொழும்பு திரும்பும் போது இருவரும் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மிக நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் கைதிகள் விடயத்தில் அரச தலைவர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் இந்தக் கலந்துரையாடலின்போது சுட்டிக்காட்டியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குற்றஞ்சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களையும், இராணுவத்தினரையும் பொது மன்னிப்பின் அடிப்படையில் விடுவிப்பது தொடர்பாக அரசால் முன்வைக்கப்பட்ட யோசனை தொடர்பாகவும் பேசப்பட்டது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் தமிழ் மக்களின் அரசியல் வேணவாக்களை நிவர்த்தி செய்யக் கூடிய அரமைப்புத் தீர்வுத் திட்டம் வரைவில் முன்வைக்கப்பட வேண்டும் என்றும் அரச தலைவரிடம் வலியுறுத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற-61)

## யானை தாக்கி...

னர். கடந்த ஆண்டு அந்தப் பகுதியில் 4 பேர் யானையின் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளனர். தற்போது ஒரு இறப்பு ஏற்பட்டுள்ளது. வெளிமாவட்டங்களில் இருந்தே யானைகள் கொண்டு வரப்படுகின்றன. பயிரழிவுகளும் ஏற்படுகின்றன. இனியாவது அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ற-110)



## மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்த குற்றச்சாட்டில்

### கோப்ரல் நிலை சிப்பாய்க்கு மறியல்

முல்லைத்தீவு, செப்.21

பாடசாலை மாணவிகளிடம் அநாகரிகமான முறையில் நடந்தனர் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு இராணுவச் சிப்பாய்களில் கோப்ரல் நிலையுடைய படைச்சிப்பாய் ஒருவரை எதிர்வரும் 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு நீதிவான் மன்று உத்தரவிட்டுள்ளது. மற்றையபடைச்சிப்பாயை ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் செல்லுமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைததீவு, கரைச்சிக்குடியிருப்பு பிள்ளையார் கோவிலடிப்பகுதியில் சிவில் உடையில் 59ஆவது படைப்பிரிவைச் சேர்ந்த இரண்டு இராணுவச் சிப்பாய்கள் ஈருருளியில் சென்றபோது பாடசாலை மாணவிகளிடம் அநாகரிகமாக நடந்து கொண்டனர் என்ற குற்றச்சாட்டில் அண்மையில் கைது செய்யப்படிருந்தனர். இராணுவச் சிப்பாய்களுடைய அநாகரிகச் செயற்பாடுகள் மாணவிகளின் பெற்றோர்களால் அவதானிக்கப்பட்டபோதே அவர்கள் பிடிக்கபப்பட்டு பொலிஸில் ஒப்படைக்கப்பட்டிருருந்தனர். இரண்டு இராணுவச் சிப்பாய்கள் மீதும் நடவடிக்கை எடுக்கடும் என்று முல்லைத்தீவுப் பொலீஸார் பெற்றோர்களிடம் உறுதியளித்திருந்தனர்.

நேற்று முன்தினம் சிப்பாய்கள் இருவரும் முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் மன்றில் முற்படுத்தப்பட்டனர். வழக்கை விசாரணை செய்த மன்று கோப்ரல் தரத்தில் உள்ள சிப்பாயை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டது.

(21.ரி3)

### ஆண்...

போர் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்று அறிவிக்கப்பட்ட 2009ஆம் ஆண்டு முதல் இன்று வரையான காலப் பகுதியில் தடுப்புக் காவலில் வைத்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தப்பட்ட நூற்றுக்கும் மேற்பட்ட ஆண்களால் அம்பலப்படுத்தப்பட்ட மிகவும் பயங்கரமான தகவல்கள் அடங்கிய அறிக்கை சட்ட நிபுணர் யஸ்மின் சூகா தலைமையிலான உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டத்தால் வெளியிடப்பட்டுள்ளது.

'மௌனம் கலைந்தது தப்பிவந்த ஆண்கள் போரை மையப்படுத்தி நிகழ்த்தப்பட்ட பாலியல் வன்கொடுமைகள் குறித்து பேசுகின்றனர்' என்ற அறிக்கை இலங்கையிலிருந்து தப்பிவந்த 121 தமிழ் ஆண்கள் வழங்கிய தகவல்களை மையப்படுத்தித் தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

அதிர்ச்சியூட்டும் மிகவும் பயங்கரமான கொடூரங்கள் அடங்கிய இவ்வாறான தகவல்களை இதற்கு முன்னர் தான் கேள்விப்பட்டிருக்கவில்லை என்று யஸ்மின் சூகா தலைமையிலான உண்மைக்கும் நீதிக்குமான செயற்திட்டம் பகிரங்கப்படுத்திய. அறிக்கையை தயாரித்த பெல்ஜியம் லூவன் பல்கலைக் கழகத்தின் கலாநிதி ஹெலீன் குறிப்பிட்டார்.

'உலக நாடுகளில் இடம்பெற்ற வன்முறைகளுடன் ஒப்பிடும் போது இலங்கையில் தொடரும் கொடூரங்கள் மிகவும் மோசமானதாகக் காணப்படுகின்றது. பொஸ்னியா குறித்து ஆய்வு செய்திருக்கின்றேன். ஆனால் இலங்கையில் தடுப்புக் காவலில் பல ஆண்டுகளாக தடுத்து வைக்கப்பட்டு, பல தடவைகள் பாலியல் வன்கொடுமைகள் குறித்த தகவல்களை கேள்விப்படும் போது மிகவும் மோசமான கொடூரத்தை உணர்கின்றேன். பலர் கட்டி வைக்கப்பட்டு பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவ்வாறான சம்பவங்களை நான் இதற்கு முன்னர் கண்டிருக்கவோ, கேள்விப் பட்டிருக்கவோ இல்லை. மிகவும் அதிர்ச்சியூட்டும் வகையிலான கொடூரங்களாக இவை இருக்கின்றன' என்றார் ஹெலீன்.

ஜெனிவாவில் வெளியிடப்பட்ட அறிக்கைக்கு 14 வயதுடைய சிறுவனும் சாட்சியமளித்திருக்கின்றான். அதேவேளை அறிக்கைக்கு தகவல் வழங்கியவர்களில் வயது கூடிய ஆண் 40 வயதை கடந்த ஒருவர் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தன்னை விசாரித்த புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த பெண் அதிகாரி மிகவும் கொடூரமான முறையில் தன்னை பாலியல் ரீதியாக துன்புறுத்தினார் என்று ஒருவர் தெரிவித்துள்ளார். இராணுவ சீருடை அணிந்திருந்த அந்தப் பெண் அதிகாரி பொல்லுகளால் தாக்கியதுடன், தனது ஆண் உறுப்பை பாதணிக் கால்களால் மிதித்து, நூலைக் கட்டி இழுத்து துன்புறுத்தினார் என்றும், தமிழிலேயே அவர் கதைத்த போதிலும், அவர் சிங்களப் பெண் என்றும் கொடூரத்துக்கு முகம் கொடுத்த ஆண் தெரிவித்துள்ளார்.

சித்திரவதைக்கு உள்ளான மற்றுமொருவர் தெரிவித்த தகவல்களுக்கு அமைய, அவர் உள்பட தமிழ் ஆண்கள் அடங்கிய குழுவொன்றுக்கு, பெண் படை அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று இணைந்து சித்திரவதை செய்திருக்கின்றனர்.

'பெண் பொலிஸ் அதிகாரிகள் நான்கு பேர் இருந்த அறைக்கு எம்மை ஆடைகளை களைந்து அழைத்துச் சென்றனர். இருவர் பொலிஸ் சீருடையான கட்டை பாவடை அணிந்திருந்ததுடன், மற்றைய இருவரும் சேலை அணிந்திருந்தனர். அவர்களில் ஒருவர் கர்ப்பிணிப் பெண்' என்றும் சித்திரவதைக்கு உள்ளான தமிழ் இளைஞர் குறிப்பிட்டுள்ளார்.

சித்திரவதைகள் தொடர்பில் கடுமையான சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அரசு தொடர்ச்சியாக கூறிவருகின்றது. இலங்கை மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை எடுத்த மாத்திரத்தில் நிராகரிப்பதன் ஊடாக விசாரணைகளை மூடி மறைப்பதையே வாடிக்கையாக அரசு கடைபிடித்து வருவதாக புதிய அறிக்கையை தயாரித்த கலாநிதி ஹெலீன் ரூகே தெரிவிக்கின்றார். (ற-5)

# பளைக் காற்றாலை நிறுவனத்தின் சி.எஸ்.ஆர். நிதி விடுவிப்பு தாமதம்

### குற்றஞ் சுமத்துகிறார் விவசாய அமைச்சர்

யாழ்ப்பாணம், செப். 21

பளையில் அமைந்துள்ள காற்றாலை ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிறுவனங் களான ஜுல்பவர் மற்றும் பீற்றாபவர், வணிக நிறுவனங்களின் சமூகப் பொறுப்புக்கான நிதியை (சி.எஸ்.ஆர்) உரிய காலத்தில் வழங்கவில்லை என்று வடக்கு மாகாண விவசாய அமைச்சர் க.சிவநேசன் குற்றம் சுமத்தியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றும் போது அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் மாற்றப்பட்ட பின்னர் மேற்படி நிறுவனம் என்னுடன் எந்தச் சந்திப்பையும் மேற்கொள்ளவில்லை. வடக்கு மாகாண சபையுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தில், ஜுல்பவர், பீற்றாபவர் நிறுவனங்கள் விரும்பும் திட்டங்களுக்கே தமது நிதியைச் செலவிடும் என்று கூறப்பட்டுள்ளது என்று இப்போது தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு மேற்படி நிறுவனங்கள் முன்வைத்த திட்டத்துக்கு நிதியை செலவிடாமல் வேறு திட்டங்களுக்குச் செலவிட்டதாலேயே, தாம் நிதியை இந்த ஆண்டு வழங்கவில்லை என்று கூறுகின்றனர். புதிய விவசாய அமைச்சர் பொறுப்பேற்றதும், அந்த நிறுவனங்கள் கலந்துரையாடியிருக்க வேண்டும். இந்த ஆண்டுக்குரிய நிதி காலம் தாழ்த்தி இப்போதே வழங்கப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

**பின்னணி**

காற்றாலை ஊடாக மின்சாரத்தை உற்பத்தி செய்யும் ஜுல்பவர் மற்றும் பீற்றாபவர் நிறுவனங்கள், வடக்கு மாகாண சபையுடன் 2013ஆம் ஆண்டு ஒப்பந்தத்தை மேற்கொண்டிருந்தது. அப்போதைய வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இந்த விடயத்துடன் தொடர்புபட்டிருந்தார். வடக்கு மாகாண பேரவைச் செயலருடன் முதலில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, அது சட்டவலுவற்றது எனத் தெரிவிக்கப்பட்டு வடக்கு மாகாண தலைமைச் செயலருடன் ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

ஒப்பந்தத்தின் அடிப்படையில் முதல் 10ஆண்டுகளுக்கு தலா 20 மில்லியனும், அடுத்த 10 ஆண்டுகளுக்கு தலா 23 மில்லியனும் சி.எஸ்.ஆர். திட்டத்தின் ஊடான நிதியாக மாகாணசபைக்கு வழங்கப்படும். இந்த நிதி விவசாய அமைச்சுக்கு நேரடியாக விடுவிக்கப்பட்டிருந்தது. அது தொடர்பில் மாகாண சபையில் சர்சை எழுப்பப்பட்டது. அதன் பின்னர், மாகாண வரவு செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு அந்த நிதி வழங்கப்பட்டது.

இந்த நிறுவனம் மாகாணசபைக்கு 20ஆண்டுகள் முடிவில் 430 மில்லியன் ரூபாவே வழங்கும். ஆனால் நிறுவனம் செயற்பட ஆரம்பித்து இரண்டு ஆண்டுகளிலேயே 2 ஆயிரத்து 930 மில்லியன் ரூபாவை, மின்சாரசபைக்கு மின்சாரத்தை விற்பனை செய்ததன் ஊடாக நிறுவனம் பெற்றுக் கொண்டுள்ளது. இது கணக்காய்வு தலைமை அதிபதியால் கண்டறியப்பட்டது. மாகாணப் பொதுக் கணக்குகள் குழுவால் இந்த விடயம் ஆராய்பட்டு வடக்கு மாகாண சபை அமர்வில் எடுத்துக் கொள்ளப்பட்டது. பெரும் சர்ச்சையை இது ஏற்படுத்தியிருந்தது.

(ற-5,6)

### 9 கிலோ...

இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற அதிசொகுசுப் பேருந்து நேற்றுமுன்தினம் இரவு 10 மணியளவில் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மகிந்த வில்வ ஆராட்சியின் தலைமையில் உப பொலிஸ் பரிசோதகர்களான சுபசிங்க, உசாந்த ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவால் வவுனியா நொச்சிமோட்டை பாலத்தடியில் வழிமறிக்கப்பட்டது. பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

பேருந்தில் சோதனை மேற்கொண்ட போது 5 கிலோ 900 கிராம் கேரளக் கஞ்சா மீட்கப்பட்டது. அதை உடைமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில் கொழுப்பு ஜம்பட்டா வீதியை சேர்ந்த 20 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அதேவேளை, நேற்றுக் காலை 8 மணியளவில் அதேபகுதியில் வைத்து 2 கிலோ கேரளக் கஞ்சா வவுனியா பொலிஸ் நிலைய போதை தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டார். இவை தவிர வன்னிமாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபரின் கீழ் செயற்படும் போதை ஒழிப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் வைத்து கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்றுக் காலை 6 மணியளவில் கிளிநொச்சியில் இருந்து வவுனியா நோக்கி பேருந்தில் வந்த இருவரை சோதனை மேற்கொண்டது. ஒருவரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சாவும், மற்றொருவரிடம் இருந்து 500 கிராம் கஞ்சாவும் கைப்பற்றபட்டது. அவற்றை உடமையில் வைத்திருந்த இருவரும் கைது செய்யபட்டனர். கைதுசெய்யபட்டவர்கள் கிளிநொச்சி மற்றும் மாத்தளைப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ற-21,110)

### பொறுப்புக்...

ஐ.நாவின் நிலைப்பாட்டில் எந்த மாற்றமும் இல்லை. இவ்வாறு ஐ.நா. பொதுச் செயலர் நாயகத்தின் பிரதிப் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

நியூயோர்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

பாதுகாப்பு படையினருக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்களிலிருந்து அவர்களை விடுவிப்பது தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையில் புதிய அறிவிப்பை விடுக்க எதிர்பார்த்திருப்பதாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் ஐ.நா. பொதுச் செயலரின் நிலைப்பாடு என்ன? என்று கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த பிரதிப் பேச்சாளர் இலங்கை அரசு போரின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள், உயிரிழப்புகள் தொடர்பில் தனது பொறுப்புக் கூறலில் இருந்து விலக முடியாது. சிறிசேன அரசு இது விடயத்தில் ஐ.நாவுக்கு அளித்த வாக்குறுதிகளை காப்பாற்றும் என்று நம்புகிறோம். இது விடயமாக நாம் தொடர்ந்தும் இலங்கை அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறோம் என்று குறிப்பிட்டார். (ற-5,61)

### பன்னாட்டு...

ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வாராந்த அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அமைச்சர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோது இவ்வாறு குறிப்பிட்டார்.

கேள்வி- பலாலி வானூர்தி தளத்தை இந்தியாவுடன் இணைந்து மறுசீரமைக்கப் போகின்றீர்களா?

பதில்- இந்திய நிறுவனம் அதற்கு முன்வந்திருக்கின்றது. அது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

கேள்வி - எவ்வாறான அடிப்படையில் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்யப்படும்?

பதில் - பலாலி வானூர்தி நிலையத்தை 70/30 அல்லது 60/40 என்ற அடிப்படையில் இந்தியாவுடன் இணைந்து அபிவிருத்தி செய்வது குறித்துப் பேசப்படுகின்றது. ஆனால் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை

கேள்வி- பன்னாட்டு வானூர்தி நிலையமாகவா அல்லது பிராந்திய வானூர்தி நிலையமாகவா இது அபிவிருத்தி செய்யப்படும்?

பதில் -நிச்சயமாக பன்னாட்டு வானூர்தி நிலையமாக அபிவிருத்தி செய்யப்படும் - என்றார். (ற-5,61)

### மாகாண...

திரக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகள் வலியுறுத்தின. எனினும் உடன்பாடு எதுவும் நேற்று எட்டப்படவில்லை.

மாகாணசபை எல்லை வரம்பு அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட்டு ஆளும் கட்சியாலேயே அது தோற்கடிக்கப்பட்டது. அதையடுத்து தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் மாகாண சபை எல்லை வரம்பு அறிக்கை மீளாய்வுக் குழு நியமிக்கப்பட்டது. அந்தக் குழு அனைத்துக் கட்சியினரையும் நேற்றுச் சந்தித்துக் கலந்துரையாடியது.

இந்தச் சந்திப்பில் மாகாணசபைத் தேர்தல் உடனடியாக நடத்தப்பட வேண்டும் என்று சகலகட்சிகளும் வலியுறுத்தியுள்ளன. மாகாண சபை எல்லை வரம்பு அறிக்கையை மீளாய்வு செய்து அதன் பின்னர் தேர்தல் நடத்த நீண்ட காலம் எடுக்கும் என்றும், அதனால் பழைய முறைமையில் (விகிதாசார) தேர்தலை நடத்த வேண்டும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாத்திரம் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவுக்கு, எந்த முறையில் தேர்தலை நடத்துவது என்பது தொடர்பில் ஆராய அதிகாரம் வழங்கப்படவில்லை என்றும், மாகாண எல்லை வரம்பு அறிக்கையை மீளாய்வு செய்யவே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் இணக்கம் எட்டப்படாமையால், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான மீளாய்வுக் குழுவின் 5 உறுப்பினர்களும் தனித்து மீண்டும் கலந்துரையாடல் நடத்தவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ற-5)

# தேசிய ரீதியிலான கால்பந்தாட்டம் மகாஜனக் கல்லூரி மகுடம் சூடியது

யாழ்ப்பாணம், செப். 21
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய ரீதியிலான கால்பந்தாட்டத்தில் 20 வயது ஆண்கள் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி கிண்ணம் வென்றது.

அநுராதபுர மைதானத்தில் நேற்று முந்தினம் நடைபெற்ற இறுதியாட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணியை எதிர்த்து கொழும்பு கந்தான டி மெசனட் வித்தியாலய அணி மோதியது.

ஆட்டம் ஆரம்பித்தது முதல் இரண்டு அணிகளும் நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தின. கோல்கள் இல்லாமல் முடிவுக்கு வந்தது முதல் பாதி. இரண்டாம்பாதியிலும் இரண்டு அணியின் வீரர்களும் விடாப் போராட்டத்தை வெளிப்படுத்தினார்கள். கோல்கள் அற்ற நிலை ஆட்டத்தில் நீண்டு சென்றது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களின் நிறைவில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 3:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது மகாஜனக் கல்லூரி அணி.

ஆட்ட நாயகனாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த கனுஜன், தொடர் ஆட்ட நாயகனாக தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதி நிதித்துவம் செய்த வக்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ம-422)





## குண்டெறிதல் போட்டியில் ஹாட்லிக்கு வெண்கலம்

யாழ்ப்பாணம், செப். 21
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான சேர் ஜோன்காபற் தடகளத் தொடரில் 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ். மிதுன்ராஜ் வெண் கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்ட ஆண்களுக்கான குண்டெறிதலில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த எஸ்.மிதுன்ராஜ் 14.55 மீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)

## மகாஜனாவுக்கு மகத்தான வரவேற்பு



யாழ்ப்பாணம், செப். 21
தேசியமட்ட கால்பந்தாட்டத் தொடரில் கிண்ணம் வென்ற தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி அணிக்கு கல்லூரிச் சமூகத்தால் நேற்று மகத்தான வரவேற்பு வழங்கப்பட்டது.

யாழ்ப்பாணம் துரையப்பா மைதானத்தில் காலை 9 மணியளவில் இருந்து திறந்த வாகனத்தில் வீரர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். தொடர்ந்து கல்லூரிச் சமூகத்தின் மத்தியில் மகத்தான மதிப்பளித்தல் வழங்கப்பட்டது. (ம-422,23)

## றோயல் காலிறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், செப். 21
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையத்தின் நூற்றாண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் கால்பந்தாட்டத் தொடரில் ஊரெழு றோயல் அணி காலிறுதிக் குத் தகுதி பெற்றது.

அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் தொடரின் ஆட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முந்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து புதுக்குடியிருப்பு சுப்பர் றாங் விளையாட்டுக் கழக அணி மோதியது.

2:1 என்ற கோல் கணக்கில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்று காலிறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது.

ஆட்டநாயகனாக ஊரெழு றோயல் அணியின் கபில் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

## ஹெரீனா வென்றார் வெள்ளி




யாழ்ப்பாணம், செப். 21
இலங்கைப் பாடசாலைகளுக்கு இடையிலான 88 ஆவது சேர் ஜோன்காபற் தடகளத் தொடரில் 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ச.ஹெரீனா வெள்ளிப் பதக்கம் வென்றார்.

கொழும்பு சுகததாச விளையாட்டு மைதானத்தில் இந்தத் தொடர் நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் நடைபெற்ற 18 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தலில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த ச.ஹெரீனா 1.54 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தைச் சுவீகரித்தார். (ம-422)






## இலங்கை தேசிய அணியில் மத்தியின் வீரர்கள்

யாழ்ப்பாணம், செப். 21
பங்களாதேஷில் எதிர்வரும் 29ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 7ஆம் திகதி வரை இடம்பெறவுள்ள ஆசியக் கிண்ணத் தொடருக்கான இலங்கை அணியில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் வீரர்களான விஜஸ்காந், மதுசன் இருவரும் இடம்பிடித்தனர்.

இவர்கள் இருவரும் இந்தியாவுக்கு எதிராக அண்மையில் நடைபெற்ற இருதரப்புத் தொடருக்கான இலங்கை அணியிலும் இடம்பிடித்திருந்தனர். விஜஸ்காந் விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமிலும் இடம்பிடித்திருந்தார். (ம-23)




# பாகிஸ்தான் அணியை துவைத்தது இந்தியா!




ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தானை மிகமிக இலகுவாக ஊதித்தள்ளியது இந்திய அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. டுபாய் ஆடுகளங்கள் பொதுவாக இரண்டாவது துடுப்பாட்டத்துக்குச் சாதகமானவை. இது பாகிஸ்தானின் அணித் தலைவர் சர்பிராஸ் அகமட்டுக்குத் தெரியாத ஒன்றல்ல. ஏனெனில் டுபாயில் அடிக்கடி விளையாடுவதை பாகிஸ்தான் வழங்கமாகக் கொண்டுள்ளது. எனவே முதலில் துடுப்பெடுத்தாடுவது என்ற சர்பராஸின் முடிவு பெரும் பின்னடைவே.

முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி வெறும் 162 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது. ஆரம்ப வீரர்களான இமாம் உல் ஹக் 2 ஓட்டங்களுடனும், சமன் ஓட்டமெதையும் பெறாதும் ஆட்டமிழந்தனர். அசாம், மலிக் இருவரும் மத்திய வரிசையில் முறையே 47, 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த போதிலும் அகமட், அசிப் அலி, சடப் கான் ஒற்றையிலக்கங்களுடன் பவிலியன் திரும்பியமை அணிக்குப் பெரும் பின்னடைவைக் கொடுத்தது. பகுதிநேரப் பந்துவீச்சாளரான கேதர் யாதவ் மிகச் சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்தினார். அவரே பாகிஸ்தானின் மத்திய வரிசையை நிலைகுலைய வைத்தார்.

பந்துவீச்சில் புவனேஸ்வர் குமார், கேதர் யாதவ் இருவரும் தலா 3 இலக்குகளையும், பும்ரா 2 இலக்குகளையும், குல்தீப் யாதவ் ஓர் இலக்கையும் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களே வெற்றிக்குரிய அத்திபாரத்தை வலுவாக அமைத்தனர். இணைப்பாட்டமாக 86 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் அரைச்சதம் கடந்து 52 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ரோகித். தவான் 46 ஓட்டங்களுடன் வீழ்த்தப் பட்டார். எனினும் ராயிடு, டினேஸ் கார்த்திக் இருவரும் நிலைத்துநின்று ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தனர். (ம)

## இந்தியா முன்னிலை

ஆசியக் கிண்ணத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பாகிஸ்தர்னுக்கு எதிரான ஆட்டத்தில் வெற்றிபெற்றதன் மூலம் ஆசியக் கிண்ணத் தொடரில் பாகிஸ்தான் இந்தியாவை வென்றதை விடவும் இந்தியா பாகிஸ்தானை அதிக தடவைகள் வென்று முன்னிலையில் உள்ளது.

நேற்றுமுன்தின ஆட்டத்துக்கு முன்னர் இரு அணிகளும் 11 ஆட்டங்களில் மோதியிருந்தன. தலா 5 வெற்றிகளை அவை பெற்றிருந்தன. ஓர் ஆட்டம் கைவிடப்பட்டிருந்தது. 5:5 என்றிருந்த நிலைமாறி தற்போது இந்திய அணி 6:5 என்று முன்னிலை வகிக்கிறது. (ம)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 21

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் இரண்டாம் பிரிவு அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் அரையிறுதியாட்டம் அனுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. இதில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மட்டக்களப்பு ஏறாவூர் ஜங்ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## தோல்விக்கு காரணமான கேதர் யாதவ்

### சொல்கிறார் அகமட்

இந்திய அணிக்கு எதிராக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி தோல்வியடைந்தமைக்கு கேதர் யாதவ்தான் காரணம் என்று தெரிவித்தார் பாகிஸ்தான் அணியின் தலைவர் சர்பிராஸ் அகமட்.

ஆட்டம் முடிவடைந்த பின்னர் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார் அகமட். "நாங்கள், குல்தீப் யாதவ் மற்றும் சாகல் இருவரது சுழற்பந்து வீச்சை எதிர்க்கொள்வதற்கு ஏற்ப களவியூகம் அமைத்தோம். ஆனால், எதிர்பாராமல் மூன்றாவதாக வந்த கேதர் யாதவ் எங்களின் வியூகங்களை தகர்த்தெறிந்து இலக்குகளைச் சாய்த்து விட்டார். கேதர் யாதவின் பந்துவீச்சை கணித்து விளையாடுவது மிகவும் கடினமாக இருந்தது.

முதல் ஐந்து பந்துப்பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்த பின்னர் பாபர் அசாம், சொயிப் மலிக் இணையின் நிதான ஆட்டத்தினால் சரிவில் இருந்து அணி மீண்டது. ஆனால், அதன் பிறகு மீண்டும் அடுத்தடுத்து இலக்குகளைப் பறிகொடுத்ததால் நாங்கள் எதிர்பார்த்த ஓட்டங்களைப் பெறமுடியவில்லை" என்று அகமட் மேலும் தெரிவித்தார். (ம)



## ஆசியக் கிண்ணத் தொடரில் இன்று இரண்டு ஆட்டங்கள்

ஆசியக் கிண்ணத் தொடரின் இரண்டு ஆட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன.

ஆசியக் கிண்ணத் தொடரின் லீக் சுற்று ஆட்டங்கள் நேற்றுடன் முடிவுக்கு வந்தன. தரப்படுத்தலில் முதல் நான்கு அணிகள் பங்குபற்றும் ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன. இதன்படி இன்று இரண்டு ஆட்டங்கள் இடம்பெறவுள்ளன. ஓர் ஆட்டத்தில் இந்தியா - பங்களாதேஷ் அணிகள் மோதவுள்ளன. இன்னொரு ஆட்டத்தில் ஆப்கான் - பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. இரண்டு ஆட்டங்களும் இலங்கை நேரப்படி மாலை 5 மணிக்கு இடம்பெறவுள்ளன. (ம)

## ஆசியக் கிண்ணத் தொடரில் இருந்து பாண்டியா விலகல்




ஆசியக் கிண்ணத் தொடரில் இருந்து இந்திய அணியின் சகலதுறை வீரரான பாண்டியா விலகினார்.

இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியா - பாகிஸ்தான் அணிகள் மோதின. முதலில் பாகிஸ்தான் துடுப்பெடுத்தாடியது. தனது ஐந்தாவது பந்துப்பரிமாற்றத்தை பாண்டியா வீசிக் கொண்டிருந்தபோது ஐந்தாவது பந்தை வீசி விட்டு நிலத்தில் வீழ்ந்தார். தொடர்ந்து அவரால் எழுந்து நடக்க முடியவில்லை. எனவே 'ஸ்ரெச்சர்' மூலம் மைதானத்துக்கு வெளியே அவர் எடுத்துச் செல்லப்பட்டார். மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்று வருகின்றன. இதையடுத்தே அவர் தொடரில் இருந்து விலகினார் என்று இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபைஅறிவித்தது. (ம)



# நீங்கா நினைவலைகள்

## முதலாம் ஆண்டு 3 ஆம் ஆண்டு



அமரர் கந்தையா நாகராசா
பிறப்பு:- 11.02.1943
இறப்பு:- 12.09.2017
திதி:- திரயோதசி

திருமதி தவமணி (குணம்) நாகராசா
பிறப்பு:- 05.07.1944
இறப்பு:- 06.02.2015

அன்புத் தெய்வங்களின் நினைவுநாள் இன்று (21.09.2018) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

பாடசாலை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

பாலகிருஷ்ணன் வாசுகி குடும்பம்
றஜிந்தன் றெஸ்மா குடும்பம்,
செல்வி றெஜிந்தினி
சதாசவம் (P.H.I) தேவியம்மா குடும்பம்

(CS/19935)(11)

## மட்ரிட் வெற்றி

ஐரோப்பிய கழகங்களுக்கு இடையில் நடைபெற்றுவரும் முக்கிய தொடர்களில் ஒன்றான சம்பியன்ஸ் லீக் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் வெற்றி பெற்றது ரியல் மட்ரிட். மட்ரிட்டை எதிர்த்து றோமா மோதியது. முதல் பாதியில் இரண்டு அணிகளும் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்தின. 45ஆவது நிமிடத்தில் இஸ்கோ மட்ரிட்டின் முதலாவது கோலைப் பதிவுசெய்தார். அதுவே முதல் பாதியில் பதிவான ஒரே கோலுமாக அமைந்தது. இரண்டாம் பாதியில் பேல் 58ஆவது நிமிடத்திலும், மரினோ 91ஆவது நிமிடத்திலும் அடுத்தடுத்துக் கோல்களைப் பதிவுசெய்ய முடிவில் 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது ரியல் மட்ரிட். (ம)


வலி, வேதலனகளுக்கான சிறந்த நிவாரணி
இலங்கையின் தரம் 1
கொஸ்கந்தவல
ஜீவக வாத தைலம்®
■ இடுப்பு வலி ■ மூட்டு வலி
■ முழங்கால் வலி ■ தசைப் பிடிப்பு
■ ஆத்தரைடீஸ் ■ நரம்பு வலி
■ சுளுக்குப் பிடிப்பு
உள்ளிட்ட நோய்களுக்கு நிவாரணி அளிக்கிறது...!



Jeewaka Herbal Products (Pvt) Ltd
0777 322 574

வேலையாள்கள் தேவை
செனறு என்டப்பிறைசஸ் நிறுவனத்துக்கு
பண வசூலிப்பாளர்கள் தேவை.
மோட்டார் சைக்கிள் உள்ளவர்கள் மட்டும்
(அடிப்படைச் சம்பளத்துடன் 35000/- மேல் பெறலாம்)
075 344 4111/ 011 433 5463
(CS/18375)(13,17)

போட்டிப் பரீட்சை வகுப்புக்கள்
*சட்டமாணி நுழைவு
*ஆசிரியர் தெரிவு
*புலனாய்வு உத்தியோகத்தர்
*சுங்க பரிசோதகர்
*சுங்க அத்தியட்சகர்
*NSB Bank
*SLAS
*SLEAS
*PGDE, M.Ed
பரீட்சைகளுக்கான வகுப்புக்கள் யாழ். நகரில்
076 688 3394 உடன் தொடர்பு கொள்ளவும்.

தேவை
No.235/7, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தியில் அமைந்துள்ள "சௌபாக்கியா விலா" இற்கு பகல்நேர முகாமையாளர், Room boy தேவை.
வயது 45 இற்கு மேல். விடுதி அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
இன்று மட்டும் 10.00 am - 5.00 pm
077 272 9827
(CS/19934)(11,17)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
af பிரெஞ்சு மொழி
➢ பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் FRENCH EMBASSY கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் ALLIANCE FRANCAISE மட்டுமே.
➢ அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)
➢ யாரும் படிக்கலாம்.



www.ambafrancelk.org
021 222 8093 61, கச்சேரி-நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.



யாழ்ப்பாணத்தில் காணி விற்பனைக்கு
1 ஏக்கர், 2 ஏக்கர் காணிகள்
கற்பகவனம் 1 இயக்கச்சி
கற்பகவனம் 2 எழுதுமட்டுவாள்
உடனடி உறுதி மாற்றம் *
வங்கி கடன் வசதி செய்து தரப்படும்

1 ஏக்கர் – 16 பரப்பு
● 40 தென்னை ● 40 - 60 தேக்கு
● 20 கஜு மரம் ● 10 - 15 மாமரம்
● கல் இருக்கை 1 தொகுதி
● சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
25 இலட்சம்



2 ஏக்கர் – 32 பரப்பு
● 80 தென்னை ● 80 - 90 தேக்கு
● 40 கஜு மரம் ● 20 - 30 மாமரம்
● கல் இருக்கை 1 தொகுதி
● சுற்று முட்கம்பிவேலி படலையுடன்
45 இலட்சம்

● அனைத்து மரங்களும் நட்டு உரிய முறையில் 5 வருடங்கள் பராமரிப்பு செய்து தரப்படும்!
● 30 அடி, 15 அடி அகல பாதை ● விடுமுறை வீடு அமைப்பதற்கான இடவசதி
● 24 மணிநேர பாதுகாப்பு ● விளைபொருட்களுக்கான சந்தை வசதி

பொதுவான வசதிகள்
பொது விடுதி · உணவகம் · உடற்பயிற்சிக்கூடம் · நீச்சல் தடாகம் · விளையாட்டுத்திடல்
நடைபயிற்சிக்கான பாதை · மீன்பிடி குளம் · முந்திரிகை தோட்டம் · மூலிகைத் தோட்டம்






சி. அனுராஜ்
உரிமையாளர், விற்பனையாளர்

078 284 5000 021 492 7778
551A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
Good Gift Property Developers (Pvt) Ltd
Reg. No.: PV 115306


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.09.2018 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.